# திருப்பூர் குமரன்



நூலாசிரியர் :

திருப்பூர் பி. எஸ். சுந்தரம்

கோவை பாரதி அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பெற்றது.

1959.

முதற் பதிப்பு
1950 ஆகஸ்ட் 15
இந்திய சுதந்திர தினத்தன்று
வெளியிடப்பட்டது.

V2M:5 Y7 N04
N59

TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 103870
EGMORE, MADRAS

( இரண்டாம் பதிப்பு - 1959 )

விலை 14 அணா

# முன்னுரை

ஆஸ்தானக் கவிஞர்: **வே. இராமலிங்கம் பிள்ளை**

★

இந்திய நாட்டிற்கு சுதந்திரம் வாங்கித் தந்த காந்தி மகான் அதற்காகப் பல முறை சத்யாக்ரஹம் நடத்தினர். 1932-ம் வருஷம் ஆரம்பத்தில் நடந்த சத்யாக்ரஹத்தில் தமிழ் நாட்டில் அடக்கு முறைக்கு முதல் பலியான திருப்பூர் குமரனை தமிழ் நாடு மறக்க முடியாது. அந்தத் திருப்பூர் குமரனுடைய சரிதையை எனது நண்பர் ஸ்ரீ பி. எஸ். சுந்தரம் இச்சிறு புத்தகத்தில் வெகு அழகாக எழுதியிருக்கிறர். இதற்கு நான் முன்னுரை எழுதக் கிடைத்தது எனக்குப் பெருமையும், இன்பமும் தருகின்றது.

> தன்னுயிர் தானறப் பெற்றானை ஏனைய
> மன்னுயி ரெல்லாம் தொழும்.

என்பது வள்ளுவரின் திருவாக்கு. மற்ற உயிர்களைக் காட்டிலும் தன்னுடைய உயிர்தான் உயர்ந்தது என்ற எண்ணமும், மற்ற மனிதர்களைக் காட்டிலும் தானே உயர்ந்தவன் என்ற அகந்தையும் கொஞ்சம்கூட இல்லாதவனாக எவன் நடந்து கொள்ளுகிறனே, அவனை மற்ற எல்லாரும் வணங்குவார்கள் என்பது இந்தக் குறளின் பொருள்.

நாமறிந்த சரித்திர புருஷர்களுக்குள் இந்தக் குறளுக்குப் பொருத்தமாக அந்த இரண்டு பெருங் குணங்களும் அமைந்திருந்த மனிதர் மகாத்மா காந்தியைத் தவிர மற்றெவரும் இல்லை. அந்த இரண்டு உயர் குணங்களும் உச்சமாக உள்ள ஒருவன் தான் எந்த நிமிஷத்திலும் பிற உயிர்களுக்காகத் தன் உயிரைத் தந்துவிடத் தயாராக இருப்பான்; பிறருடைய நலத்துக்காகத் தன் அபிப்பிராயங்களை விட்டுக் கொடுக்கவும் தயாராக இருப்பான். அவன்தான் தியாகி எனப்படுவான்.

அப்படிப்பட்ட தியாகத்தின் அவதாரமாகிய காந்தியடிகளை மற்றெல்லா மக்களும் வணங்கினார்கள் – இன்றும் வணங்குகிறார்கள் – எண்ணிறந்த பக்தர்கள் அவரைப்போலவே 'தன்னுயிர்' 'தான்' என்பதையும் முற்றிலும் மறந்து தேசத்துக்குத் தொண்டு செய்ய முன் வந்தார்கள்; தியாகங்களும் செய்தார்கள்.

தமிழ் நாட்டில் அப்படிப்பட்ட தியாகிகளுக்குள் தலைசிறந்த இனத்தைச் சேர்ந்தவர்கள் எனது நண்பர் ஸ்ரீ பி. எஸ். சுந்தரமும், திருப்பூர் குமரனும்.

ஸ்ரீ சுந்தரம் வெகு நன்றாக விவரித்திருக்கிற இந்தக் 'குமரன் சரிதை'யைப் படிக்கு முன்னால், நம்முள் பெரும்பான்மையோருக்கு இதுவரையிலும் தெரியாத ஒரு வெகு ரஸமான வரலாற்றை வாச



கர்களுக்கு அறிவிக்கவேண்டியது மிகவும் அவசியம். அதைமட்டும் சொன்னால் போதும். இந்த முன்னுரை மின்னுரையாகிவிடும்.

அது என்னவென்றால்:—

1928-ம் வருஷ முற்பகுதியில் கதர் வேலைக்கு நிதி திரட்டுவதற்காக காந்தி அண்ணல் தென்னாட்டில் சுற்றுப் பிரயாணம் செய்து கொண்டிருந்தார். அப்போது அவர் ஓய்வு ஒழிச்சலில்லாமல் உழைத்த காரணத்தால் அவருக்கு மூளைக் கொதிப்பு உண்டாகி மிகவும் துன்புறுத்தியது. வைத்தியர்களும், நண்பர்களும் மிகவும் கட்டாயமாகக் கேட்டுக் கொண்டதன்மேல், ஒரு குளிர்ச்சியான ஏகாந்த இடத்தில் கொஞ்ச நாளைக்கு ஓய்வாக இருக்க மகாத்மா ஒப்புக் கொண்டார். அதற்காக மைசூர் நகரை அடுத்துள்ள நந்திக் குன்றத்தில் அவர் தங்கினார்.

அங்கே இருக்கும்போது ஒரு நாள் காந்தி மகானை தரிசிக்கவேணும் என்று இரண்டு இளைஞர்களுடன் ஒரு பிராம்மண மாது அந்த நந்தி மலைக்கு வந்தாள். மூளைக் கொதிப்பினால் உடல் நலம் குறைந்து ஓய்வுக்காகத்தான் காந்திஜி அங்கே தங்கியிருக்கிறார் என்பது அந்த அம்மாளுக்குத் தெரியாது. காந்தியடிகளை அந்த அம்மாள் தரிசிப்பதற்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்க வேணும் என்று ராஜாஜிக்கு எழுதப்பட்ட ஒரு சிபார்சு கடிதத்துடன் அந்த பிராம்மண மாது வந்

திருந்தார். அந்த சிபார்சு கடிதத்தை எழுதிக் கொடுத்தவர் ராஜாஜிக்கு ஆரம்ப காலத்தில் ஆசிரியராகவிருந்த ஸ்ரீ D. சிங்கம் ஐயங்கார் என்பவர். அந்த சிங்கம் ஐயங்காரிடத்தில் ராஜாஜிக்கு அத்யந்த மதிப்புண்டு என்பதை அந்த அம்மாள் அறிவார். அதனுல் நிச்சயமாக மகாத்மாவை தரிசிக்க ராஜாஜி தமக்கு வேண்டிய அனுகூலங்களைச் செய்து கொடுப்பார் என்ற திட நம்பிக்கையோடு அந்த அம்மாள் அந்த சிபார்சு கடிதத்தை ராஜாஜியிடம் கொடுத்தார். அதை வாங்கிப் படித்துப் பார்த்துவிட்டு, காந்திஜி அசௌக்யமாக இருப்பதால் அவரைப் பார்க்க யாராலுைம் அனுமதிக்க முடியாது என்று ராஜாஜி கண்டிப்பாகச் சொல்லிவிட்டார்.

அதைக்கண்டு அந்த மாது மிகவும் ஏமாற்றமடைந்து விட்டார். என்ருலும் அந்த அம்மாள் காந்திஜியிடத்தில் பரம பக்தியுடையவரானதால், காந்திஜியின் உடல் நலத்தைக் கருதி அவரைச் சந்திக்க யாருக்கும் அனுமதி இல்லை என்ற நியாயத்தை ஒத்துக்கொண்டு, காந்திஜியை தரிசிக்க வேணுமென்ற ஆவலை அடக்கி மனதைத் தேற்றிக் கொண்டு சும்மா இருந்துவிட்டார். வெய்யில் மிகவும் கடுமையாக இருந்ததினுல் உடனே திரும்பிப் போய்விட முடியவில்லை. வந்த களைப்புத்தீர சிறிது நேரம் தங்கியிருந்துவிட்டு வெப்பம் தணிந்தவுடன் போகலாம் என்று எண்ணி அந்த அம்மாளும், அவருடன் வந்த இரண்டு இளைஞர்களும் அங்கேயே ஒரு ஒதுக்கான இடத்தில் உட்கார்ந்தார்கள். மாலை நான்கு மணிக்குமேல் அகஸ்மாத்தாக ராஜாஜி அவர்கள் உட்கார்ந்திருந்த இடத்திற்கு வர நேரிட்டது. அவர்கள் இன்னும் அங்கே இருப்பதைக் கண்ட ராஜாஜி, "காந்திஜியை நீங்கள் பார்க்க முடியாது என்று சொல்லிவிட்டேன் அல்லவா? பின் ஏன் இன்னும் இங்கே இருக்கிறீர்கள்?" என்ருர். அதற்கு அந்த மாது,

"தாங்கள் காந்திஜியைப் பார்க்க எங்களுக்கு அனுமதி கிடைக்காதென்றுதானே சொன்னீர்கள்? கொஞ்சம் சிரம பரிகாரம் செய்துகொள்ளக்கூட இங்கே நாங்கள் தங்கியிருக்கக் கூடாதென்று சொல்லவில்லையே! வெய்யிலின் கடுமை குறையட்டும் என்றுதான் காத்திருந்தோம். யாருக்கும் எந்தவிதமான தொந்தரவுக்கும் இடமில்லாமல் பரிபூரண மௌனத்தோடு இங்கே ஒதுங்கி உட்கார்ந்திருந்தோம். அது குற்றமானுல் தயவு செய்து மன்னித்து விடுங்கள். இதோ போய்விடுகிருேம். நமஸ்காரம் விடைபெற்றுக்கொள்ளுகிருேம்" என்று பணிவுடன் சொல்லி வணக்கம் செய்து விட்டு வெளியே போகப் புறப்பட்டார். இந்த பேச்சைக் கேட்ட ராஜாஜி மனம் இளகி "நீங்கள் எந்த ஊர்?" என்ருர்.

அதற்கு,

"நான் எந்த ஊராயிருந்தால் என்ன? காந்திஜியை தரிசிக்கவேணும் என்று வெகு தூரத்

திலிருந்து வந்தவள். அதற்காகவே சிபார்சு கடிதமும் வாங்கி வந்தேன். அந்த பாக்கியம் கிடைக்கவில்லை"........என்று அந்த அம்மாள் பேச்சை முடிக்குமுன்......ராஜாஜி குறுக்கிட்டு,

"காந்திஜிக்கு சிரமம் கொடுக்காமல் எட்ட நின்று அவரை தரிசனம் செய்வதுமட்டும் போதுமானல் உங்களை அழைத்துக்கொண்டு போக ஏற்பாடு செய்கிறேன்" என்ருர்.

"அதுவே போதும், அதை என் ஜன்ம சாபல்யமாக எண்ணுவேன்" என்ருர் அந்த மாது.

உடனே ராஜாஜியே அவர்களை அழைத்துக் கொண்டுபோய் காந்திஜியை நன்ருக தரிசிக்கும்படி அவருக்கு எதிரில் நிறுத்தினர். மூவரும் அந்த மோகன மூர்த்தியை கண்குளிரக் கண்டு பரவசமடைந்து பக்தி சிரத்தையோடு அஞ்சலி செய்தார்கள். பின்னர் அந்த அம்மாள் தம் கையில் வைத்திருந்த பதினைந்து ருபாயை கதர் நிதிக்காக ராஜாஜியிடம் கொடுத்தார். ராஜாஜி அதை காந்திஜியிடம் தந்தார்.

அதைப் பெற்றுக் கொண்டு காந்தியண்ணல் அந்த அம்மாளிடம் தமது அருட் பார்வையைச் செலுத்தி, மிகவும் கூர்ந்து கவனித்துவிட்டு 'நீங்கள் யார்? எங்கிருந்து வருகிறீர்கள்? உங்கள் வரலாற்றைக் கொஞ்சம் சொல்லுங்கள்" என்ருர்.



டாக்டர் பரஞ்சீவன் மேத்தாவின் குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் மற்றும் ரங்கூனில் உள்ள எல்லா குஜராத்தி குடும்பங்களும் எங்களை ஆதரித்து வருகின்றன. பர்மா காந்தி என்று சொல்லப்படுகிற பிக்ஷு உத்தமர் நாங்கள் வசிக்கிற பகுதியில்தான் ஒரு மடத்தில் இருக்கிருர். அடிக்கடி அவருடைய தரிசனமும், உதவியும் எங்கள் சங்கத்துக்குக் கிடைக்கும். இந்த சேவைகளைத் தவிர என் மூத்த மகன் வேறு பல பொதுநலப் பணிகளிலும் ஈடுபட்டு உழைத்து வருகிருன்" என்று சொல்லி முடித்தார்.

வெகு ரஸனையோடு கேட்டுக்கொண்டு வந்த காந்திஜி, "பேஷ்! வெகு நல்ல வேலை செய்து வருகிறீர்கள். இவ்வளவு கதர் பக்தியுள்ள நீங்கள் எனக்கு இப்போது கொடுக்க வந்த காணிக்கையில் மட்டும் ஏன் இவ்வளவு கஞ்சத்தனம் காட்டி விட்டீர்கள்?" என்ருர்—புன்சிரிப்புடன்.

"ஆம், நான் கொடுத்தது மிகவும் குறைச்சல்தான். ஆனல் அதற்குமேல் கொடுக்க எனக்கு இப்போது சக்தியில்லை" என்ருர் அந்த அம்மணி.

"இதைவிட அதிகம் எனக்குத்தர உங்களிடம் பொருள் இருக்கிறது. அதை நான் நன்ருக அறிந்துகொண்டேன்" என்ருர் சாந்த மூர்த்தி.

"ஆம், இருக்கிறது. அது என் பிரயாணச் செலவுக்குத்தான் சரியாக இருக்கும். தங்களுக்கு இன்னும் தர அதில் மிச்சமிருக்காது" என்ருர் அந்த அம்மாள்.

"நான் கேட்பது ரூபாய் அணு பைசா கணக்கில் அல்ல. நான் விரும்புவது வேறே. உங்கள் குமாரர்கள் மூவரில் ஒருவரை தேசப்பணி செய்வ தற்காக அர்ப்பணம் செய்து என்னிடம் விட்டு விடும்படி கோருகிறேன்" என்ருர் மகாத்மா.

"தங்கள் சித்தமே என் பாக்கியம். தாங்கள் விரும்புகின்றபடியே என் மக்களுள் ஒருவனை தத்தம் செய்துவிடச் சம்மதிக்கிறேன்" என்ருர் அந்த அம்மாள்.

அதைக்கேட்ட மகாத்மா,

"நான் வேடிக்கையாகக் கேட்பதாக நினைத்து விடக்கூடாது. மனப்பூர்வமாகவே கேட்கிறேன். நான் தென்னுப்பிரிக்காவை விட்டு வரும்போது நண்பர்கள் தங்களுக்குள் வசூலித்து எனக்கு ஒரு பணமுடிப்பு அளித்தார்கள். அதற்கு நிதியளித்த வர்களில் என் நன்றிக்கும், நம்பிக்கைக்கும் மிகவும் பாத்திரமாயிருந்த பொதுஜன ஊழியர் ஸ்ரீ நாயுடு என்றவரின் பெயரும் இருந்தது. உடனே நான் அவரைக் கூப்பிட்டு "சகோதரா! மற்றவர்களைப் போலவே நீங்களும் பணம் மட்டும் கொடுத்து விட்டுத் தப்பித்துக்கொள்ள நினைக்கிறீர்களா? தாங்கள் பணத்தைவிடப் பெரிய வெகுமதி ஒன்று எனக்குத்தரவேண்டும். என்னுடன் வந்து, இந் தியத் தாய்நாட்டிற்குத் தொண்டுபுரிய உங்கள் மக்களில் ஒருவனைத் தந்துவிடவேண்டும்" என் றேன். அவர் உடனே அதை ஏற்றுக்கொண்டு



ஒரு பையனை என்னுடன் இந்தியாவுக்கு அனுப் பினுர். அவன் இப்போது என்னுடன் இருந்து தேசசேவை செய்கிருன். அதே மாதிரி நீங்களும் ஒரு பையனை கொடுத்துவிடவேணும் என்பதுதான் என் கோரிக்கை" என்ருர் காந்திஜி.

"அப்படியே நானும் என் மக்களில் ஒருவனை இதோ அர்ப்பணம் செய்துவிட்டேன்" என்று கணீரென்று பதில் சொன்னுர் அந்த மாதரசி மேற்சொன்ன விவரங்கள் 'நவஜீவன்' பத்திரி கையில் வெளிவந்தது.

இதை காந்திஜியின் 'எங்க் இந்தியா' என்ற ஆங்கில வாரப் பத்திரிகையிலும் ஸ்ரீ மகாதேவ தேசாய் ஒரு முழுப்பக்கத்தில் விவரமாக எழுதி வெளியிட்டிருந்தார்.

இது வெளியான அந்தப் பத்திரிகையை தான் மகாத்மாவைச் சந்தித்துப் பேசினதைப் பற்றிய ஒரு சொந்தக் கடிதத்துடன் வைத்து அந்த அம்மாள் ரங்கூனிலிருந்த தம் மூத்த மகனுக்கு அனுப்பினுர்.

இந்த இரண்டையும் படித்து, உணர்ச்சி பொங்கிவிட்ட அந்த மூத்த மகன் உடனே தான் நல்ல சம்பளம் வாங்கிக்கொண்டிருக்கிற கம்பெனி உத்தியோகத்தை ராஜினுமா செய்துவிட்டு, தம்பி மார்களை உறவினர்களிடம் ஒப்படைத்துவிட்டு கப்ப லேறி சென்னைக்கு வந்து சேர்ந்தான். அங்கே

அவனுடைய வரவை எதிர்பார்த்துக் காத்திருந்த அவனுடைய தாயாரை சந்தித்து இருவரும் சென்னை காதி வஸ்திராலயத்துக்குப் போனார்கள். அங்கே அவர்கள் எதிர்பாராதவிதமாக ராஜாஜி இருந்தார். தாயார் மகனை ராஜாஜிக்கு அறிமுகப் படுத்தினர். முதலில் ராஜாஜி அந்தப் பையன் அவசரப்பட்டு வேலையை ராஜீநாமா செய்துவிட்டு வந்ததற்காக கண்டித்து வருந்தினர். விரைவில் அந்த வருத்தம் மாறி, அவனைத் தம்முடன் பெங்க ளூருக்கு அழைத்துச் சென்றார். அங்கே ஓய்வுக் காகத் தங்கியிருந்த அகில பாரத சர்க்கா சங்கத்தின் கௌரவ காரியதரிசியான ஸ்ரீ சங்கரலால் பாங்க்க ரிடம் அந்தப் பையனை அறிமுகம் செய்துவைத்தார். ஸ்ரீ பாங்க்கர் அந்த வாலிபனை பலவிதமாகப் பரிக்ஷை செய்து பார்த்து கதர் விஷயத்தைப்பற்றி அனுபவ அறிவுடையவனாக இருப்பதைக் கண்டு மிகவும் திருப்தியடைந்து, அவனை கதர் வேலையில் ஈடுபடும் படி தம்முடைய அதிகார ஆணையுடன் திருப்பூருக்கு அனுப்பினர்.

அந்த வாலிபன்தான் நம்முடைய திருப்பூர் ஸ்ரீ பி. எஸ். சுந்தரம். இதன் சரித்திர உண்மை சுந்தரம் அவர்களுடன் நெருங்கிப் பழகுகின்றவர் களுக்குத்கூடத் தெரியாது என்றால், மற்றவர்களுக்கு எப்படித் தெரியப் போகிறது? அந்தக் காலத்தில் வெளிவந்த "எங்கிந்தி"யாவையும், "நவஜீவ"னை யும் படித்தவர்கள் யாராவது இன்னும் இதை நினை வில் வைத்திருந்தால் அவர்களுக்குத் தெரியும்.



அதிலும் அந்தக்காலத்தில் படித்ததை இந்தக் காலத் திலும் இன்னும் நினைவில் வைத்துக்கொண்டிருக் கிறவர்கள் ஏது? காந்தி மகானையே மறந்து விட்ட நமக்கு "எங்கிந்தி"யாவும், "நவஜீவ"னும் எங்கே நினைவிலிருக்கப் போகிறது? அந்தப் பெயர்கள் சிலசமயங்களில் நம்முடைய மூளையில் தாமாக வந்து முட்டினாலும், அவற்றில் எழுதியிருந் ததும் அதை நாம் படித்ததும் நினைவுக்கு வருமா? அபூர்வமாகிய இந்தச் சரித்திரத்தின் அடிப்படையை எண்ணிப்பார்த்தால்தான் ஸ்ரீ சுந்தரம் அவர்களு டைய பெருமையும் அவர் இதில் எழுதியிருக்கிற திருப்பூர் குமரனின் தீரமும் தியாகமும் விளங்கும். குமரன் சரிதையின் உண்மைகளை ஸ்ரீ சுந்தரம் சொல்லக் கிடைத்தது; ஸ்ரீ சுந்தரத்தின் சரித்திரத் தில் சில உண்மைகளை எழுத எனக்குக் கிடைத்தது. ஆனால் இப்படி எவரும் எழுதாமலும் சொல்லாமலும் மறைந்துபோன தியாகிகளைப் பற்றிய பெருமைகளை என்னென்று எண்ணுவது?

இப்படி 1928–ம் ஆண்டின் இறுதியில் திருப்பூ ருக்கு வந்து குடியேறி கதர் தொண்டில் ஈடுபட்ட ஸ்ரீ சுந்தரம் தேச விடுதலைக்காக மகாத்மா காந்தி நடத்திய எல்லா முயற்சிகளிலும் முன்னின்று சேவை புரிந்து சிறை வாசமும் செய்தவர். 1932–ம் வருஷ ஆரம்பத்தில் நடந்த சத்யாக்ரகத்தில் திருப் பூரில் அடிபட்டு உயிர் துறந்த குமரன் கோஷ்டிக் குத் தலைமை தாங்கித் தொண்டர்களை நடத்திச் சென்றவர் இந்த பி. எஸ். சுந்தரந்தான். குமரன்

ஒரே அடியில் உயிர் துறந்தான். ஆனல் குமரன் அடிபட்டிறந்த அதேசமயத்தில் தேகத்திலுள்ள எலும்பெல்லாம் நொறுங்கும்படியாக அடிக்கப்பட்டு, செத்தே போய்விட்டார் என்று. ஆஸ்பத்திரியில் போடப்பட்ட இந்த சுந்தரம் எப்படியோ தப்பிப் பிழைத்து, "குமரன் சரிதை" என்ற இந்த புத்தகத் தின் மூலமாக அந்த நிகழ்ச்சிகளின் உண்மைகளை உணர்ச்சி ததும்ப எடுத்துரைக்க நம்மிடையே இருக் கிருர் என்பது மிகவும் மகிழ்ச்சியளிக்கிறது. அந்தக் குமரன் கதையிலுள்ள தியாகத்தை நமக்குத் தெரி யப்படுத்த இந்தத் தியாகி சுந்தரத்தைக் காட்டிலும் தகுதியுடையவர் யார்?

ஸ்ரீ சுந்தரத்தின் அரும் பெரும் சேவைகளையும் தியாகத்தையும் நாம் பாராட்டும்போது அவரை இவ்வளவு சிறந்த தேசபக்தராகவும் தன்னலமற்ற ஊழியராகவும் செய்துவைத்தது அவருடைய தாயா ரின் பெருங்குணந்தான் என்பதை மறந்துவிடக் கூடாது. உலகத்தில் கீர்த்தியடைந்த எல்லா நல்ல வர்களுடைய சரித்திரங்களையும் ஆராய்ந்து பார்த் தால் அவர்களுடைய பெருமைகளுக்கெல்லாம் அஸ்திவாரம் அவர்களுடைய அன்னையர் இளம்பிரா யத்தில் அவர்களுக்கு ஊட்டிய நல்லுணர்ச்சிதான் என்று தெரியவரும்.

நந்திமலையில் காந்தியவர்களிடத்தில் தன் மக்க ளில் ஒருவனை தேசப்பணிக்கே அர்ப்பணம் செய்து விடுவதாகச் சொன்ன சுந்தரத்தின் அன்னையான



ஸ்ரீமதி லக்ஷ்மியம்மாள், பின்னர் தன்னுடைய மற்ற மக்களையும் தன்னையுங்கூட அதற்கே அர்ப்பணம் செய்து விட்டார்.

ஸ்ரீமதி லக்ஷ்மியம்மாளும் தியாகத் தீயில் முழுகி எழுந்தவர். ஸ்ரீராஜாஜி திருச்செங்கோட்டில் 1936-ம் வருஷம் நடத்திய தனிப்பட்டவர்கள் சத்யாக்ரகத் தில் சேர்ந்து 6-மாதக் கடின காவல் தண்டனை அடைந்த மூன்று ஸ்தீரிகளில் ஸ்ரீமதி லக்ஷ்மியம்மாள் ஒருவர். மற்ருெருவர் நம் சுந்தரத்தின் மனைவி யான ஸ்ரீ சுமித்ரா தேவி. மூன்ருவதவர் கோவை ஸ்ரீ ஐயாமுத்து அவர்களின் மனைவி ஸ்ரீ கோவிந்த அம்மாள்.

சிறு பிராயத்திலிருந்து காந்தி பக்தியிலேயே ஊறி தேசத் தொண்டும் அறப்போரும் செய்து இன்னும் காந்தீயத்தைக் கடைப்பிடித்து வாழ்ந்து வருகிற இந்த நூலின் ஆசிரியர் பி. எஸ். சுந்தரம் தமிழ் நாட்டின் நன்றிக்கு மிகவும் உரித்தானவர்.

அத்துடன் ஸ்ரீ சுந்தரம் எலும்புகள் நொறுங்க அடிபட்டு ஆஸ்பத்திரியில் கிடந்தபோது தன் மகன் இறந்து போவானே என்ற துக்கம் காட்டாமல் மனேதிடத்துடன் மகனுக்கு தைரியம் சொல்லி, மற்றவர்களுக்கும் அச்சம் அகற்றிய தீரப்பெண்மணி ஸ்ரீ லக்ஷ்மியம்மாளுடைய செயல்களை இந்தப் புத்த கத்தில் படிக்கும்போது ஒவ்வொருவருடைய உள்

ளத்திலும் உன்னத லக்ஷியங்களுக்காக உயிர் கொடுக்கவும் விரும்புகிற உணர்ச்சிகளே உண்டாகும்.

சுமார் முப்பது வருஷகாலம் இடைவிடாமல் மிகவும் பரிசுத்தமான சேவைகளில் ஈடுபட்டு பலவித இன்னல்களுக்கு ஆளாகி தன்னலமற்ற—ஓசையில்லாத—உழைப்புக்கு உதாரணமாக விளங்கும் ஸ்ரீ பி. எஸ். சுந்தரம் தமிழ் மக்களின் அன்புக்கு மிகவும் தகுந்த பாத்திரமானவர். அவர் எழுதிய இந்தக் "குமரன் சரிதை"யை தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் படித்துப் பயன் அடைய வேண்டுகிறேன். வாழ்க ஸ்ரீ பி. எஸ். சுந்தரம் !

*வாழ்க திருப்பூர் குமரனின் தீரம்!*

—வெ. இராமலிங்கன்.

# ஆசிரியர் முகவுரை

தியாக மூர்த்தியான திருப்பூர் குமரனது வாழ்க்கை வரலாறு பற்றிய குறிப்பை வெளியிட விரும்பும் பத்திரிகாசிரியர்களும், அவ்வீரனது திருஉருவப் படத்தைத் திறந்து வைக்க விரும்பும் சங்கத்தாரும், மகாநாடுகளின் செயலாளர்களும், குமரன் சரித்திரத்தை விரிவாக எழுதியனுப்பும்படி என்னைக் கேட்டுக்கொண்டு, கடிதங்கள் எழுதி வருகிறார்கள்.

தாய் நாட்டு விடுதலைப் போரில் தம் உயிரையே பலியிட்ட அத்தியாக மூர்த்தி எவ்வாறு அடிபட்டு உயிர் நீத்தார் என்ற தகவல் தமிழ் நாட்டில் மற்றெல்லோரையும்விட எனக்கே நன்றாகத் தெரியுமாதலால், பத்திரிகாசிரியர்கள் போன்றோர் என்னை அணுகுவதற்கு இடமிருக்கிறது. அதோடு அவரது மனவெழுச்சி, திடச் சித்தம் போன்றவை காரணமாக அந்த இறுதி நாட்களில் குமரன் நடந்து கொண்ட விதம், அறப்போரில் அவர் காட்டிய சாகசம் போன்றவைகளை உடனிருந்து கண்கூடாகக் கண்டவனாதலால், நானே அவற்றைச் சரியாக வர்ணிக்கத்தக்கவன் என்று பிறர் நம்புவதற்கும் போதிய இடமிருக்கிறது. ஆயினும் நான் இது வரையில் குமரனைப்பற்றி எழுதத் துணியவில்லை.

அதற்குச் சரியான காரணமும் உண்டு. குமரனது வாழ்க்கை வரலாற்றில், அவர் அறப்போரில் அடி பட்டு உயிர்நீத்த கட்டமே ஜீவனுள்ள பாக மாகும். அப்பகுதியில் என்னைப்பற்றிய சில விவரங் களும் பிரிக்க முடியாதபடி பின்னிக் கிடக்கின்றன. அவற்றை விவரிக்கவும் கூடவில்லை; விலக்கவும் முடியவில்லை. இத்தகைய தர்ம சங்கடமான நிலை யின் காரணமாகவே நான் இதுவரையில் குமரனைப் பற்றி எழுதக் கருதாமல் அல்லது எழுத முடியாமல் தயங்கிக்கொண்டிருந்தேன். இதன் பயன் விப்ரீத மாகிவிட்டது. குமரனைப்பற்றிய கட்டுக் கதைகளும், உண்மைக்கு முரணான விவரங்களும் நாட்டில் தோன்றிவிட்டன. இக்குறையை நிவர்த்திக்கவும், வருங்கால சந்ததிக்கு குமரனைப்பற்றிய உண்மை யான தகவலை அளிக்கவும், நான் தவறக்கூடா தென்று பல அன்பர்கள் எனக்குப் போதித்தனர். ஆகவே குமரன் போன்ற தியாகிகள் எந்த லட்சிய சித்திக்காகத் தங்கள் உயிரையும் பணயம் வைத்து உழைத்தார்களோ அந்த சுதந்திரக் குடியரசு உதயமான நன்னாளில் இச்சிறு நூலை எழுதத் தொடங்கி, முடித்தேன். ஏற்கனவே விளக்கியுள்ளபடி குமரனது ஜீவியச் சரித்திரத்தில் என்னைப்பற்றிய விவரங்களும் பின்னிக் கிடப்பினும், கூடியவரை சுய புராணம் தோன்ருதிருக்கும்படி செய்யவே கவனமாக இருந்து எழுதினேன். எனினும் ஓரளவு அது தோன்றிவிட்டது. நானே இதை உணருகிறேன். எனினும் குறை தவிர்க்க முடியவில்லை.



இவ் வரலாற்றை எழுதும்படி என்னைத்தூண்டி ஊக்கப்படுத்திய அனைவருக்கும் குறிப்பாக நான் இதை எழுதியே தீரவேண்டும் என்று வற்புறுத்திய தோடு, இதற்கு ஒரு அருமையான முன்னுரையும் அன்புடன் அளித்து கௌரவித்த என் அன்பரும், சென்னை அரசாங்க ஆஸ்தான தமிழ்க் கவிஞருமான நாமக்கல் ஸ்ரீ வே. இராமலிங்கம் பிள்ளை அவர் களுக்கும் என் நன்றி நிறைந்த வந்தனத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இந்நூலில் வெளியிடப்பட்டிருக்கும் திருவுருவப் படங்களை அன்பளிப்பாய்க் கொடுத்துதவிய அன்பர் களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளு கிறேன்.

சுதந்திரத்திற்காகப் போராடி உயிர் நீத்த திருப்பூர் குமரனின் வரலாறு அடங்கிய இந்நூலை சுதந்திர தினமாகிய 1950- ஆகஸ்ட் 15-ந் தேதி முதற்பதிப்பாக வெளியிட்டேன்.

அந்த முதற் பதிப்பு தமிழ்நாட்டில் குமரனைப் பற்றிய யதார்த்த விவரங்களை ஒருவாறு பலர் அறியச் செய்தது. எனினும் போதிய பிரதிகள் கிடைக்காத காரணமாகப் பலர் இந்நூலை வாங்கிப் படிக்க முடியாமற்போயிற்று. அக்குறையைப் போக் கவே இந்த இரண்டாம் பதிப்பை வெளியிடத்

துணிந்தேன். வீடுதோறும் குமரன் சரிதை இடம் பெறட்டும். வருங்கால சந்ததியார் அதனைப் படித் தறிந்து பயன் பெறட்டும். இதுவே என் அவா; வேண்டுகோள். வணக்கம்.

—திருப்பூர் **பி. எஸ். சுந்தரம்.**

நூல் ஆசிரியரின் முகவரி:—

**திருப்பூர் பி. எஸ். சுந்தரம்,**

தினமணி ஏஜெண்டு,

**7/73, பேங்க் ரோடு, கோயமுத்தூர்**

# திருப்பூர் குமரன்

## 1. தோற்றுவாய்.

காந்தி மகான் நமது தேசப் பிதா. அவரது தலைமையில் நம் நாட்டுமக்கள் ஒன்று திரண்டு எழுந்து, அவர் வகுத்துக் கொடுத்த அறவழியில் அரசியல் கிளர்ச்சிகளை ஆர்வமுடன் நடத்தியதால், 1947-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15-ஆம் நாள் நம் நாடு ஆங்கிலேயரின் ஆதிக்கத்திலிருந்து விடு பட்டு சுதந்திரநாடாக ஆயிற்று. அவரால்தான் நாம் அரசியல் சுதந்திரம் அடைந்தோம். அதோடு, நம் ஒழுக்கத்திலும் மேம்பாடு தோன்றச் செய்தார் மகாத்மா. எனவே, நம் நாட்டுமக்கள் அனைவரும் ஒருமுகமாக அவரைத் "தேசப்பிதா" என்று அழைக் கத் தொடங்கினர்.

காந்தி மகான், அரசியல் கிளர்ச்சியில் புதிய போர்முறை ஒன்றை வகுத்துக் கொடுத்தார். அதற்கு 'சத்தியாக்கிரகம்' என்று பெயர் சூட்டினார். அறம், அன்பு, வாய்மை, தூய்மை, அஹிம்சை முதலிய நற்பண்புகளை அடிப்படையாகக்கொண்டது அந்தச் சத்தியாக்கிரக முறை. பாமரமக்களின் மன தையும் கவர வல்ல திட்டங்களைத் தயாரித்து, அவற் றைப் பூரண சத்தியாக்கிரகமுறையில் நாடு முழுதும் பரவலாக நடத்தினர். எனவே, அவரது இயக்கங் களில் பாமரமக்கள் உட்பட பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டனர். இயக்கங்கள் வெற்றி பெற்று வந்தன. காந்தி மகான் நடத்திய விடுதலைப்

போர் விரைவில் வெற்றி பெற்றதற்கு, அவர், தமது போர்த் திட்டங்களை ஜனரஞ்சகமான முறையில் வகுத்துக்கொண்டதும், அறவழியிலேயே அவற்றை நடத்திச்சென்றதுமே முக்கிய காரணங்களாகும்.

1919-ஆம் ஆண்டில்தான் அண்ணல் காந்தி நமக்கு அறவழியைப் போதித்து, தமது புதிய போர் முறையை விளக்கிக் கூறி, பொல்லாத 'ரௌலட்' சட்டத்தை எதிர்க்கத் தூண்டினர். "எக்காலத்திலும், எந்த நிலைமையிலும் வாய்மையைக் கடைப்பிடித்து நில்; ஆண்டவனைப் பரிபூரணமாக நம்பு; சிந்தனை, சொல், செயல் என்ற மூன்றிலும் தூய்மையையே மேற்கொள்; இந்த நிலையில் திடமாக நின்று செயலாற்று; வெற்றி நிச்சயம்" என்பதே அவர் போதித்தவற்றின் சாராம்சமாகும்.

அவ்விதமே அறவழி நின்று, அக் கொடிய சட்டத்தை எதிர்த்தனர் நம் நாட்டுமக்கள். அதனல் அச் சட்டம் செயலற்றுப் போயிற்று. செத்து மடிந்து விட்டது என்றே கூறலாம். இம் முதல் வெற்றியில் பெருமிதம் கொண்ட நாட்டுமக்கள், 1920-ஆம் ஆண்டிலே, காந்தி மகான் ஒத்துழையாமைப் போர் முரசு கொட்டிய உடன் வீறுகொண்டு எழுந்தனர். ஆங்கில அரசை எதிர்த்து அறப்போர் செய்ய ஆயிரமாயிரக்கணக்கில் மக்கள் திரண்டு வந்தனர். அறநெறியில் நின்று, அஹிம்சைமுறையில் உழைத்து, சர்வ வல்லமை படைத்த ஆங்கில அரசை அகற்ற முற்பட்டனர்.



அதுகண்டு ஆங்கில அரசும், அதன் அதிகார வர்க்கமும் அஞ்சி நடுங்கின. யாது செய்வது என்று தெரியாமல் திகைத்தன. எனினும், அதிகாரத்தை விட்டு அகல மனமின்றி, மிருகபலத்தை உபயோகித்து ஒத்துழையாமை இயக்கத்தை ஒடுக்கத் தொடங்கின. பல்லாயிரக்கணக்கில் தேசத் தொண்டர்களைச் சிறையில் அடைத்தன. மகாத்மா காந்தியையும், ஆருண்டு சிறைத் தண்டனை அளித்து, உள்ளே தள்ளின.

ஆனல், சிறையில் குடல் நோய் கண்டு, அதன் காரணமாக ஆருண்டு முடியும் முன்பே காந்திமகான் விடுதலை செய்யப்பட்டார். வெளிவந்த அவர் அன்றிருந்த தேச நிலை கண்டு வருந்தினர். கடுமையாகச் சிந்தித்துப் பார்த்தார். அரசியல் கிளர்ச்சியை மீண்டும் துவக்காமல் கதர், மதுவிலக்கு, தீண்டாமை ஒழிப்பு முதலிய நிர்மாணத் திட்டங்களில் முழுக் கவனம் செலுத்தி, அத் திட்டங்களை வலுப்படுத்தி நடத்திக்கொண்டிருந்தார்.

இச்சமயத்தில்தான் சித்தரஞ்சன் தாஸ் என்ற பெருந் தலைவர் 'சுயராஜ்யக் கட்சி'யை ஆரம்பித்தார். மோதிலால் நேரு, வித்தல்பாய் படேல் என்ற வேறு இரு பெரும் தலைவர்களும் அதில் சேர்ந்துகொண்டனர். "சட்டசபைகளை கைப்பற்றிக்கொண்டு, அங்கு ஆளும் வர்க்கத்தின் அடாத செயல்களை எதிர்ப்பது; தேச நலனுக்கு விரோதமான செயல்களை அவர்கள் செய்யவொட்டாமல் தடுப்பது; 'மக்கள் பிரதிநிதி

களின் சம்மதம் பெற்றே யாவும் நடந்துவருகின்றன, என்று வாய் கூசாமல் அதிகார வர்க்கம் பொய்ப் பிரசாரம் செய்து, உலகமக்களின் பார்வையில் காட்டி வந்த பித்தலாட்டத்தைத் தகர்ப்பது; சட்டசபை களில் பிரத்தியட்ச நிலைமையை உள்ளது உள்ளபடி எடுத்துக் கூறுவதன் மூலம் உலகமக்களின் மனதில் நம் விடுதலைக் கோரிக்கையின் வேகத்தை நன்கு பதியவைப்பது'' இவையே சுயராஜ்யக் கட்சியின் நோக்கங்களாகும். காந்திமகான் இத்தகைய முயற் சிகளால் யாதொரு பலனும் கிட்டாதென்பதை நன்கு அறிவார். ஆயினும், அம் முயற்சியையும் நம்மில் ஒரு சிலர் கையாண்டு பார்ப்பதில் தவறில்லை என்று கருதி, சுயராஜ்யக் கட்சிக்கும் ஆசி கூறி அனுமதியளித்தார். இப்படி இணக்கமாக நடந்து கொள்வதுதான் காந்திஜியின் சிறப்பியல். சுய ராஜ்யக் கட்சி வியக்கத்தக்கமுறையில் சட்டசபை களில் பணியாற்றி வந்தது. அதன் சாதனைகள் சாமானியமானதல்ல. ஆனால், நாடாளும் ஆசை மிகுந்த ஆங்கில அரசு அக் கட்சியின் கர்ஜனையைக் கேட்டு அஞ்சவில்லை; சாதனைகளைக் கண்டு இணக் கம் காட்டி வழிக்கு வரவில்லை. ருசி கண்ட பூனை உறி தாவிச் சுரண்டுவதை லேசில் விட்டுவிடுமா?

1930-ஆம் ஆண்டு தேசத்தின் தளர்ச்சி நீங்கி, தலை நிமிர்வு ஏற்பட்டிருந்ததை காந்திமகான் கண்டார். சுதந்திரப் போரில் ஒரு புதிய, ஜனரஞ் சகமான திட்டமொன்றைப் புகுத்த முன்வந்தார். பலகாலம் சிந்தித்தபின் தம் அந்தராத்மாவின்



தூண்டுதல் பெற்று அத் திட்டத்தை மக்கள்முன் வைத்தார். உப்புச் சத்தியாக்கிரகம் என்று அதற்குப் பெயரிட்டார். உப்பு இன்றி மனிதன் வாழமுடியாது. கால்நடைகளுக்கும் அதை உணவில் கலந்தளித்து வருகிறோம். சிலவகை மரம் செடிகளுக்கு அதை உரமாகப் போடுகிறோம். ஆகவே, உப்பு நமக்கு ஒரு அத்தியாவசியப் பண்டமாகும். அது கடற்கரைகளில் தானாக விளைகிறது. கடல்நீரைப் பாத்திகளில் தேக்கிவைத்து, சூரிய உஷ்ணத்தால் உலர்த்தி உப்பைத் தயாரிப்பதும் உண்டு. இப்படி இயற்கை இலவசமாக நமக்களித்துவரும் உப்பை ஆங்கில அரசு தனதாக்கிக்கொண்டு, வரி செலுத்தியவருக்கே உப்பு எடுக்கும் உரிமையைக் கொடுத்துப் பணம் திரட்டிவந்தது. 'உப்புக்கு வரி போட்டது தப்பு. நீருக்கும் காற்றுக்கும் வரி போட்டால் நாம் ஒப்ப மாட்டோம். உப்புக்கு வரி போட்டதை அறமுறை யில் எதிர்ப்போம்' என்றார் காந்தி. இந்த வாதம் பாமரமக்களைத் தட்டியெழுப்பியது. 'உப்பு விளையும் கடற்கரையில் உப்புச் சட்டத்தை மீறி உப்பெடுப் போம். அதோடு மற்ற இடங்களிலும் உப்புமண்ணை நீரில் கரைத்துக் காய்ச்சி உப்புச்சட்டத்தை சாத்வீக முறையில் எதிர்ப்போம். முதலில் நானே இச் சட் டத்தை மீறுவேன். பின்னர் நாடு முழுவதும் என் னைப் பின்பற்றி உப்புச் சத்தியாக்கிரகம் செய்யட்டும்' என்றார் காந்தி மகான்.

## 2. காந்தி - இர்வின் உடன்படிக்கை.

பம்பாய் மாகாணத்தின் மேலைக் கடற்கரையில் உப்பளங்கள் பல உண்டு. அவற்றில் 'தண்டி' என்பது ஒன்று. 1930-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் அந்த உப்பளத்தை நோக்கி காந்திமகான் கால் நடையாகவே புறப்பட்டார். அவருடன் சுமார் அறுபது தொண்டர்கள் அணிவகுத்துச் சென்றனர். வழியெல்லாம் உப்புச் சட்டத்தை எதிர்த்துப் பிரசாரம் செய்துகொண்டே போனார் மகாத்மா. சத்தியாக்கிரக முறையையும், அதன் சிறப்புகளையும் விளக்கிக்கொண்டே போனார். அவரது சொற் பொழிவுகளின் கருத்துக்கள் உலகிலுள்ள எல்லாப் பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்டு விரிவாகப் பரவின.

காந்தி மகானைப் பின்பற்றி, நமது தமிழகத்தின் தன்னிகரற்ற தலைவர் ராஜாஜி அவர்களும், பல பொறுக்கி எடுக்கப்பெற்ற சத்தியாக்கிரகிகளை உடன் அழைத்துக்கொண்டு, திருச்சியிலிருந்து வேதாரண் யம் என்ற இடத்திலுள்ள உப்பளம் நோக்கிப் புறப் பட்டார் கால்நடையாக. அங்கு உப்புச் சட்டத்தை மீறினர் அனைவரும். சென்னை கடற்கரையில் ஆந் திரகேசரி பிரகாசம் பந்துலுகாரு என்ற மாபெரும் தலைவரும் உப்புச் சட்டத்தை மீறினார். இவ்விதம் நம் நாடு முழுவதும் உப்புச் சத்தியாக்கிரகம் வலு வாக நடைபெற்றது.



தேச முழுவதும் இவ்வியக்கம் பரவலாகவும் வலு வாகவும் நடந்துவந்ததைக் கண்ட ஆங்கில அரசு அரண்டுபோயிற்று. அதன் அடக்குமுறை செய லற்றுப் போயிற்று. தேசமே ஒன்று திரண்டு எழுந்த பொழுது, அதனை எங்ஙனம் அடக்குவது? பம்பாய் மாகாணத்தில் பர்தோலி வட்டத்தில் இவ் வியக்கம் பிறிதொரு புது வடிவம் கொண்டது. அங்குள்ள விவசாயிகள் சர்க்காருக்கு நிலவரி செலுத்த மறுத் தனர். இந்த வரிகொடா இயக்கத்தை காந்திஜியின் வலக்கரம் போன்று இருந்த சர்தார் வல்லபாய் படேல் அவர்களே முன் நின்று நடத்திக்கொடுத் தார். இரும்புமனிதர் என்று இவரை அழைப் பார்கள். அவ்வளவு திடசித்தமும், விடாமுயற்சியும் கொண்டவர். உலகமே இந்த வரிகொடா இயக்கத் தின் முன்னேற்றம் கண்டு திகைத்தது. இறுதியில் அவர் வெற்றி பெற்றது கண்டு மகிழ்ந்தது.

அதையும் கண்ட ஆங்கில அரசாங்கம் அசை வற்றுப் போயிற்று. இந்த உப்புச் சண்டையின் ஓர் அங்கமாக மதுபானக்கடைகளையும், அயல்நாட்டு ஜவுளிக்கடைகளையும் மறியல் செய்யும் இயக்கங்கள் தோன்றின. பரவலாகவும், தீவிரமாகவும் நடை பெற்றன. அகந்தை மிகுந்த ஆங்கில அதிகார வர்க்கம் கையைப் பிசைந்துகொண்டு நின்றது. ஆங்கிலேயர் இங்கு நடத்திவந்த அந்நிய ஆலைத் துணி வியாபாரம் படுத்துவிட்டது. சட்ட அமுல் நடத்தமுடியாது போனதைவிட, துணி வியாபாரம் குன்றிய காரணந்தான் ஆங்கில அரசின் கண்களில் நீர் வடியச் செய்துவிட்டது.

அச்சமயம் இங்கு ஆங்கில அரசப் பிரதிநிதியாக இருந்தவர் இர்வின் பிரபு என்பவராவர். அவரால் பொதுஜன எழுச்சியை. அடக்கவும் முடியவில்லை; அரசு காரியங்களை நடத்திக்கொண்டுபோகவும் முடியவில்லை; அரசு காரியங்களைவிட ஆங்கிலேயர்களால் பெரிதும் மதிக்கப்பட்ட ஜவுளி முதலான பண்டங்களின் வர்த்தகம் சிதைவுற்றதையும் சீராக்க முடியவில்லை. எனவே, வழிக்கு வந்தார். காந்தி மகானைத் தருவித்து, அண்ணலுடன் கூடிப் பேசி ஒரு உடன்படிக்கை ஏற்படுத்திக்கொண்டார். அதையே காந்தி-இர்வின் ஒப்பந்தம் என்று சரித்திரம் கூறுகிறது. இந்த ஒப்பந்தப்படி கடல் ஓரங்களில் வசிக்கும் ஜனங்கள் தமக்குத் தேவையான அளவுக்கு கடற்கரையிலிருந்து இலவசமாக உப்பு எடுத்துக் கொள்ள உரிமை பெற்றனர். மதுபானக்கடைகளையும், விதேசி ஜவுளிக்கடைகளையும் சாத்வீகமான முறையில் தடையின்றி மறியல் செய்துகொள்ளவும் உரிமை பெற்றனர். இவ்வுரிமைகள் பெற்ற காரணத்தால், காந்திஜி உப்புச் சத்தியாக்கிரகத்தை நிறுத்திவிட இணங்கினர். அதோடு, நாட்டின் அரசுரிமை வருங்காலத்தில் எவ்விதம் இருக்க வேண்டும் என்பதைக் கூடிப் பேசி நிர்ணயம் செய்வதற்கு என்று லண்டன் மாநகரிலே கூட்டப்பட்ட வட்டமேஜை மகாநாட்டுக்கும் நம் நாட்டின் பிரதிநிதியாகச் சென்றுவர இசைந்தார்.

காந்தி - இர்வின் ஒப்பந்தம் கையெழுத்தானவுடன் சிறைகளில் அடைபட்டுக் கிடந்த எல்லாத்



தலைவர்களையும், தொண்டர்களையும் அரசாங்கம் விடுதலை செய்துவிட்டது. இதை உப்புச் சத்தியாக்கிரகத்தின் மாபெரும் வெற்றியாகக் கருதி, மக்கள் புத்துணர்ச்சியும் அக மகிழ்ச்சியும் அடைந்தனர்.

லண்டன்மா நகரத்துக்குச் செல்ல மகாத்மாஜி ஆயத்தங்கள் செய்யத் தொடங்கினர், இதற்கு இடையில் அதிகார வர்க்கத்தின் மனதில் சைத்தான் புகுந்துகொண்டது. 'ஆளவே பிறந்தோம்' என்று இறுமாந்து கிடந்த அதிகார வர்க்கம் காந்தி-இர்வின் ஒப்பந்தம் கண்டு மனதூடே ஆத்திரம் கொண்டது. எனவே, அப் புனித ஒப்பந்தப்படி நடந்துகொள்ள அவ் வர்க்கம் விரும்பவில்லை. இந்த மாதிரி நிலைமை மாறிவரும் சமயத்தில் இர்வின் பிரபு தமது பதவிக் காலம் தீர்ந்துவிட்ட காரணத்தால் 18-4-1931-ல் கப்பலேறி இங்கிலாந்துக்குப் புறப்பட்டார். அவரது பதவியில், ஏகாதிபத்தியத் திமிர்பிடித்த வெல்லிங்டன் பிரபு அமர்த்தப்பட்டார். இவர் ஏற்கனவே ஐந்தாண்டு காலம் அரசப் பிரதிநிதியாக இருந்து ஆட்சி நடத்தியவர். இந்தியரின் விடுதலை ஆர்வத்தை வெறுப்பவர். அவர்களுக்கு இம்மியளவுகூட விட்டுக் கொடுக்கக்கூடாது என்ற மனப்போக்கு கொண்டவர்.

இத்தகையோர் அரசப் பிரதிநிதியாக வந்ததையே தனக்குச் சாதகமாகக் கருதிக்கொண்டு அதிகார வர்க்கம் முன்னிலும் அதிகமாக காந்தி-இர்வின் ஒப்பந்தத்தை அலட்சியம் செய்யத்

தொடங்கியது. தட்டிக் கேட்க யாரும் இல்லை; அதற்கு மாருக, தட்டிக்கொடுத்து ஊக்குவிக்க கிழ வெல்லிங்டன் பிரபு இருந்தார். பின்னர் கேட்கவா வேண்டும், அதிகார வர்க்கத்தின் அட்டகாசத்தைப் பற்றி? நிலைமை இவ்விதம் மாறியது கண்ட மகாத்மா வருந்தினுர். லண்டன் வட்டமேஜை மகாநாட்டுக்குப் போக மறுத்துவிட்டார். இதை வெல்லிங்டன் எதிர்பார்க்கவில்லை. காந்தியை எப்படியாவது வட்டமேஜை மகாநாட்டில் கலந்து கொள்ளச் செய்யவேண்டியது அவரது பொறுப்பான கடமை. ஆனுல், காந்திஜியோ லண்டன் போக முடியாது என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டார். எனவே, வேறு வழியின்றி வெல்லிங்டன் பிரபு இறங்கிவந்தார். நாட்டில் ஆங்காங்கு நடந்த விபரீதச் செயல்களைத் தடுக்கவும், பர்தோலியில் நடந்த அதிகார வர்க்கப் பேயாட்டங்களைப் பற்றி பகிரங்க விசாரணை செய்து பரிகாரம் செய்து தரவும் உடன்பட்டு உறுதி அளித்தார்.

அதன் பின்னரே, 29—8—1931-ல் மகாத்மா லண்டன் செல்லக் கப்பலேறினுர். அதிகாரவர்க்கத்திடம் நல்லெண்ணம் கிடையாது என்பதைக் காந்தி மகான் நன்கு அறிவார். எனினும், சத்தியாக்கிரகி என்ற முறையில் புனித ஒப்பந்தப்படி லண்டன் மகாநாட்டுக்குப் போய்வருவதைத் தம் கடமை என்று கருதிப் புறப்பட்டார்.



## 3. மீண்டும் போர்.

காந்திஜி லண்டன் போய்ச் சேர்ந்தார். அங்கு நடந்த வட்டமேஜை மகாநாட்டில் பலதரப்பட்ட வகுப்புவாதிகளும், ஏகாதிபத்திய வெறியர்களும், தேச விடுதலையை விரும்பாத ஆங்கில அரசின் கையாட்களுமே நிறைந்திருந்ததைக் கண்டார். நாட்டுக்குப் பிரதிகூலமான நடவடிக்கைகளில் தாம் கலந்துகொள்ளும்படி நயவஞ்சகமாக ஏற்பாடு செய்துவிட்டார்கள் என்பதை அறிந்துகொண்டார். 'இதோ, உங்கள் காந்தியே கலந்துகொண்ட வட்டமேஜை மகாநாடு ஏகோபித்து உருவாக்கிய அரசியல் திட்டம்' என்று கூறி, ஏற்கனவே அவர்கள் தயாரித்துவைத்திருந்த ஒரு உதவாக்கரை அரசியல் மாறுதலை நம் நாட்டு மக்கள்மீது திணிக்கப்போகிருர்கள்; அதற்குத் தம்மையே ஒரு கருவியாகப் பயன்படுத்திக்கொள்ளுகிருர்கள் என்பதை காந்தி மகான் அறிந்துகொண்டார். ஆயினும் அவ்வளவு தூரம் வந்தபின் மகாநாட்டில் கலந்துகொள்ளாமல் இருப்பது சரியாகாது என்று கருதி, அந்த வட்டமேஜை மகாநாட்டில் கலந்துகொண்டார். தேச நலத்துக்கு உகந்தது எதுவோ அதையே எடுத்துக்கூறி வாதித்தார். ஆனுல், ஆங்கில அமைச்சர் மனதில் காந்தி மகானின் சொற்கள் புகவில்லை. சுயராஜ்யம் கொடுக்க அவர் விரும்பவில்லை. நமது காந்திஜி வாதித்தவை அவர் காதுகளில் விழுந்தும், மனதில் புகவில்லை. தூங்குவோனை

எழுப்ப முடியும்; தூங்குவதாகப் பாசாங்கு செய்து கொண்டு விழிப்புற்றுள்ள ஒருவனை எழுப்புவது எங்ஙனம்?

'வாக்களித்தபடி மகாநாட்டுக்குப் போனேன். என் கடமையை, கடவுளுக்குப் பயந்து நன்கு செய்தேன்' என்ற திருப்தியுடன் காந்திமகான் தாய்நாடு திரும்பி வந்து சேர்ந்தார்.

அவர் லண்டனில் இருந்த சமயம், இங்கு அடக்குமுறை கோர உருப் பெற்றுத் தாண்டவம் ஆடத் தொடங்கிவிட்டது. அதிகார வர்க்கத்தின் ஆர்ப்பரிப்பும் மிதமிஞ்சிவிட்டது. ஜவஹர்லால் நேரு, சர்தார் படேல் போன்ற மாபெரும் தலைவர்கள் சிறையிடப்பட்டனர். காங்கிரஸ் மகா சபையை சட்ட விரோதமான ஸ்தாபனம் என்று அறிவித்ததோடு, அதனை நிர்மூலமாக்கிவிட்டு மறுவேலை பார்ப்பதாகவும் அதிகாரவர்க்கம் கொக்கரித்தது.

இந்தியா திரும்பியதும், இவையனைத்தையும் அறிந்தார் காந்திஜி. பதட்டம் அடையவில்லை. அந்தக் கொந்தளிப்பான நிலைமையிலும் சமரசமே காண விழைந்தார். இதுதான் மகாத்மாவின் பெருங் குணம். வெல்லிங்டன் பிரபுவுக்கு மூன்று கடிதங்கள் எழுதியனுப்பினர். அவரைப் பேட்டி கண்டு தமது நிலையை விளக்க விரும்பினர். ஆனல் அப் பிரபுவோ காந்திஜிக்குப் பேட்டியளிக்க மறுத்து விட்டார். மேலே என்ன செய்வது என்று தீர்மானித்துக்கொண்டார் காந்திஜி. அதனை அரசப்



பிரதிநிதிக்கு அறிவிக்காமல் செயல்படுத்த காந்திஜியின் சத்தியாக்கிரக உள்ளம் இடந்தரவில்லை. எனவே, வெல்லிங்டன் பிரபுவுக்கு ஒரு இறுதிக் கடிதம் எழுதி அனுப்பினர். அதன் சாராம்சம் இவையே :-

"காந்தி-இர்வின் ஒப்பந்தத்தை தங்கள் சர்க்கார் கிழித்தெறிந்துவிட்டதாகவே தெரிகிறது. எனவே, அந்த ஒப்பந்தப்படி நிறுத்திவைக்கப்பட்டிருந்த சட்ட மறுப்பு இயக்கத்தை மீண்டும் துவக்கும்படி காங்கிரஸ் மகாசபைக்கு யோசனை கூறுவதைத் தவிர எனக்கு வேறு வழி இருப்பதாகத் தோன்றவில்லை. திக்கற்றவருக்கு தெய்வமே துணையாதலால், அவர் மீது பாரத்தைப் போட்டுவிட்டு, நாங்கள் செயலில் இறங்கப்போகிறோம். இதை முன்கூட்டியே அறிவித்துவிடுவது என் கடமை எனக் கருதி, இதனைத் தங்களுக்கு எழுதினேன்."

இக் கடிதம் கண்டவுடன் சண்டைக்கு கொடி காட்டும் சிரமங்கூட வெல்லிங்டன் பிரபுவுக்கு ஏற்படவில்லை. அதற்கு முன்பே, அப்பிரபு வலுவில் சண்டையை ஆரம்பித்துவிட்டார் அல்லவா? எனினும், உலகத்து அரசியல் நோக்கர்களின் பார்வையில் காந்தியே வலுச்சண்டையை ஆரம்பித்தார் என்று காட்டுவதற்காக, காந்திஜி எழுதிய கடிதத்தையே ஆதாரமாக வைத்துக்கொண்டு, அவரை 4-1-1932-ல் கைது செய்து சிறைப்படுத்திவிட்டார் வெல்லிங்டன் பிரபு. சுதந்திரப் போரில் இரண்டில்

ஒன்றைப் பார்த்துவிட வேண்டும் என்று துடித்துக் கொண்டிருந்த தேசத் தொண்டர்களும், காந்தி-இர்வின் ஒப்பந்த காலத்தில், அப் புனித ஒப்பந்தம் அலட்சியம் செய்யப்பட்டது கண்டு மனம் வெதும்பிக் கிடந்த பொதுமக்களும் திரண்டு எழுந்து போரில் குதிக்கத் தம்மைத் தயார் செய்துகொள்ளத் தொடங்கினர்.

ஆங்கில அரசு கண்மூடித்தனமாக அடக்கு முறைகளைக் கையாளத் தொடங்கியது. தடியடி தர்பார் நடத்துவதிலும் அதி தீவிரம் காட்டத் தொடங்கியது. அந்த 1932-ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட அடக்குமுறைக்கு ஆளாகி சிறையில் அடைக்கப்பட்டவர்களைத் தவிர, மண்டை பிளந்தும், மார்பு ஒடிந்தும், தோள் முறிந்தும், கை கால் எலும்புகள் நொறுக்கப்பட்டும் அல்லலுற்ற தேசபக்தர்களின் எண்ணிக்கைக்கு ஒரு கணக்குண்டோ? இந்தக் கோரக் காட்சிகளைக் கண்டு தேசபக்தர்கள் மனம் இடிந்துபோகாமல், மேலும் மேலும் இயக்கத்தில் கலந்துகொள்ளத் தம்மிச்சையாக முன் வந்தனர்! இது எதற்காக? நாடு விடுதலை பெறவேண்டும் என்ற ஆர்வம் ஒன்றே அவர்களை அவ்வாறு வீறு கொண்டு எழச் செய்தது.

போலீஸ் படையிலும் உற்சாகம் நிறைந்திருந்தது. தங்கள் தேசம், தங்கள் இனத்தவர், தங்கள் உற்றார் உறவினர் என்ற பாசங்களையே மறந்து, ஆங்கில ஆட்சியாளரின் பாராட்டுதலையும் சன்மா



னத்தையும் பெறவே பெரிதும் விழைந்தனர் போலும். அரக்க சுபாவமே, அன்று, அவர்களிடம் மலிந்து காணப்பட்டது. எனவே, அதிகார வர்க்கம் எதிர்பார்த்ததைவிட அளவு மீறியே கொடுமை பல புரிந்தனர். இவ்வளவையும் பொருட்படுத்தாமல் தேசத்தொண்டர்கள் பல்லாயிரக்கணக்கில் இயக்கத்தில் கலந்துகொண்ட செயலை நினைத்துக்கொண்டாலே உள்ளம் உருகும்; உணர்ச்சி பெருகும். அங்ஙனம், 1932-ஆம் ஆண்டு அறப்போரில் தன்னிச்சையாகக் குதித்து, போலீஸ் சித்திரவதைக்கு ஆளாகிய வீராதி வீரரில் - அந்தவிடுதலைப் போரில் தம் உயிரையே பலி கொடுத்து அமரவாழ்வெய்திய திருப்பூர் குமரனும் ஒருவராவர்.

## 4. திருப்பூரின் சிறப்பு.

வீரம் செறிந்த தமிழ்நாட்டிலே கொங்குநாடு என்பது ஒரு பகுதி. 'கார் உலவும் கொங்குநாடு' என்று காளமேகப்புலவரால் பாடப்பெற்ற பிரதேசம் அது. அக்கொங்குநாட்டின் தலைசிறந்த நகரங்களில் ஒன்று திருப்பூர்.

பஞ்சாலைகள் நிறைந்தது இக் கொங்குநாடு. அவைகளுக்கு வேண்டிய மூலப்பொருளான பருத்தி-பஞ்சுக்கு சென்னை ராஜ்யத்திலேயே மிகப் பெரிய கேந்திரச்சந்தை திருப்பூராகும். இங்கு நடைபெற்று வரும் பஞ்சு வியாபாரம் அகில இந்தியா மட்டுமின்றி

அகில உலகத் தொடர்பும் கொண்டது. ஆதலால், இதுவே திருப்பூரின் பிரசித்திக்கு முதற் காரண மாகும்.

இங்கே ஆண்டுதோறும் வைகாசி மாதத்தில் நடக்கும் தேர்த்திருவிழா சமயத்தில் ஒரு கால்நடைக் கண்காட்சியும், பெரிய மாட்டுச்சந்தையும் நடை பெறும். திருப்பூரின் பெயரைப் பிரபலமாக்கியதற்கு இவைகள் இரண்டாவது காரணமாகும். இந்தக் கால்நடைக் கண்காட்சியை, இன்றுள்ள அளவுக்கு அகில இந்தியப் புகழ் பெறும்படி வழிவகை செய்த வர் காலஞ்சென்ற திரு. நல்லதம்பி சர்க்கரை மன்ரு டியார் என்ற பெரியாராகும். அவர் கொங்குநாட்டு வேளாள சமூகத்தின் மாபெரும் தலைவர். அச் சமூ கத்தின் பட்டக்காரர். பொதுவாக, இவரைப் பழையகோட்டைப் பட்டக்காரர் என்றே அழைப் பார்கள். தாமே நேரில் வந்து, மாட்டுச்சந்தையின் மையத்தில் கூடாரம் போட்டுக்கொண்டு தங்கி அனைத்தையும் நிர்வகித்துவந்தார். இன்று அவரது தகுதி வாய்ந்த திருக்குமாரர் திரு. நல்லசேனபதி சர்க்கரை மன்ருடியார் M. L. C. தமது தந்தையின் வழி நின்று, அவர் பேணி வளர்த்த காரியங்களை அவரை விட அதிக அக்கறையுடன் நடத்தி வருகி ருர். காலத்திற்கு ஏற்றபடி கலா நிகழ்ச்சிகளும் (நாடகம், நாட்டியம், இசைக்கச்சேரி முதலியன) சேர்ந்துகொண்டு, இன்று இக் கண்காட்சி மிகச் சோபிதம் அடைந்துவிட்டது, ஸ்தல முனிசிபல் சேர்மன் அவர்களும் முனிசிபல் சபையும் சேர்ந்து தந்துவரும் உழைப்பால்.



"நான் ஒரு சாமான்யமானவள். எனக்கு விசேஷ வரலாறு என்ன இருக்கப்போகிறது? தங்களை தரிசிக்கவேணும் என்று எனக்கு நெடு நாளாக இருக்கிற அடக்க முடியாத ஆசையால் வந்தேன்" என்ருர் அந்த அம்மாள். "விசேஷ வரலாறு இருக்கவேணும் என்பது அவசியமில்லே. கதர் நிதிக்காக இந்தப்பணத்தைக் கொடுத்தீர்களே, அந்தக் கதர் இயக்கத்தில் தங்களுக்கு நம்பிக்கை உண்டா? அதற்காக இதுவரையிலும் ஏதாவது செய்திருக்கிறீர்களா? தினமும் சிறிது நேரமாவது தவருமல் நூல் நூற்கிறீர்களா? வெறும் பணம் மட்டும் கொஞ்சம் கொடுத்துவிட்டு வேடிக்கையாக என்னைப் பார்த்துவிட்டுப் போகமட்டும் வந்தீர்களா என்ற விஷயங்களை நான் அறியவேணும்" என்ருர் அண்ணல். அதற்கு அந்த சகோதரி "கதர் இயக் கத்தில் எனக்கு நம்பிக்கையுண்டு. அது சாதாரண நம்பிக்கை அல்ல. மிகவும் திடமான நம்பிக்கை. எனக்கு மட்டுமல்ல. என் மக்கள் எல்லோருக்குமே அந்த நம்பிக்கை உண்டு. தாங்கள் கதர் இயக்கம் ஆரம்பித்த இந்த ஏழு வருஷகாலமாக நானும் என் மக்களும் கதரைத் தவிர வேறு ஆடைகளை கட்டுவ தில்லை. அது தவிர கதர் அபிவிருத்திக்கு நான் என்ன செய்திருக்கிறேன் என்பதைச் சொல்லு கிறேன். நாங்கள் வசிப்பது ரங்கூன்."

"என்ன! ரங்கூனு? பர்மாவிலிருந்தா வந்தி ருக்கிறீர்கள்? என்று காந்திஜி குறுக்கே கேட்டார். "ஆம், நாங்கள் இருப்பது ரங்கூனுக்கு அடுத்த

மேற்கு காமாயு என்ற பிரதேசம். அங்கேதான் பல இந்தியக் குடும்பங்கள் இருக்கின்றன. அங்கே என்னுடைய முயற்சியினுல் 'கதர் சேவா சங்கம்' என்ற ஒரு சங்கத்தை ஏற்படுத்தி அதன் மூலமாக சுமார் நூறு குடும்பங்கள் தினந்தோறும் தவருமல் கை ராட்டையில் நூல் நூற்று வருகின்றன. அந்த நூலே இதுவரையிலும் நானே என் யுக்தியால் செய்து பூட்டிய ஒரு தறியில் நெய்து வந்தேன். இப்போதுதான் மதுரையிலிருந்து ஒரு தறி வேலைக் காரரை தருவித்திருக்கிரேம். அந்தச் சங்கத்துக்கு காரியதரிசி என்னுடைய மூத்த மகன். அவன் ஒருவன் தான் என் குடும்பத்துக்கு சம்பாதனைக் காரன். ஒரு கம்பெனியில் இருந்துகொண்டு கதர் சங்க வேலைகளையும் கவனித்துக் கொள்ளுகிருன். இந்த நூற்றல் நெய்தல் வேலைகளைத்தவிர எங்கள் சங்கம் திருச்செங்கோடு ஆச்ரமத்திலிருந்தும், மற்ற இடங்களிலிருந்தும் கதர் தினுசுகளைத் தருவித்து, அங்கத்தினருக்கு அசல் விலைக்கு விற்று அவர்கள் அனைவரும் கதரே அணியும்படி செய்திருக்கிறது. அதையும் என் மூத்த மகன்தான் கவனித்து வருகிருன். என்னுடைய மற்ற இரண்டு பையன்கள் படிக்கிருர்கள். எனக்கு ஒரே பெண். அந்தப் பெண்ணின் விவாக முயற்சிக்காக பெங்களூருக்கு வந்தேன். தாங்கள் இங்கிருப்பதை அறிந்து தரிசிக்க வந்தேன்.

"தங்களுடன் தென்னுப்பிரிக்காவில் சேவைகள் செய்த மதன்ஜித் பாபுவும், தங்கள் நண்பரான



அகில இந்தியா மட்டுமல்லாமல், நம்மவர் கடல் கடந்து குடியேறியுள்ள நாடுகளிலும் திருப்பூரின் சிறப்பைப் பரப்பியது 'திருப்பூர் கதரே'யாகும். தர உயர்விலும், உற்பத்தியின் அளவிலும், செய்முறை நேர்த்தியிலும் மிக மிகப் பிரபலம் அடைந்துவிட்டது திருப்பூர் கதர். எனவே, திருப்பூருக்கு இஃது அழியாப் புகழைத் தேடித் தந்துவிட்டது.

இன்று, திருப்பூர் நகரில் நடைபெற்றுவரும் பனியன் உற்பத்தி வேலை, திருப்பூருக்கு, அதன் பஞ்சு மார்க்கெட், கால்நடைக் கண்காட்சி, கதர் உற்பத்தி முதலியவற்றுல் ஏற்கனவே ஏற்பட்டிருந்த அழியாப் புகழை மேலும் பன்மடங்கு அதிகரிக்கச் செய்துவிட்டது. திருப்பூர் மண்வாக்கே தனிச் சிறப்புடையது போலும்! எதைச் செய்தாலும், இங்கு, அது உச்சவரம்பை எய்திவிடுகிறது.

மேலே கூறிய காரணங்களே திருப்பூரின் பெருமையைப் பரிமளிக்கச்செய்யப் போதியவை. ஆனுல் இவற்றேடு, சத்தியாக்கிரக வீரன் 'திருப்பூர் குமர'னின் உயிர்ப்பலியும் கூடிக்கொண்டதனுல் சரித்திரத்தில் பொன்னெழுத்துக்களால் எழுதக்கூடிய அளவுக்கு திருப்பூரின் பெயர் பேறு பெற்றுவிட்டது.

விராடதேசத்து மன்னனின் மாடுகளை அபகரித்துச் சென்ற துரியோதனனைத் துரத்தியடித்து, மாடுகளைத் திருப்பி ஓட்டிக்கொண்டு போனது திருப்பூர் அமைந்துள்ள இடத்தில்தான் என்றும், எனவே

இவ்வூருக்குத் திருப்பூர் என்று பெயர் ஏற்பட்டது என்றும் கர்ணபரம்பரையாகச் சொல்லப்பட்டு வருகிறது. அது சரியாயின், இதிகாச காலத்திலிருந்தே திருப்பூருக்குப் புகழ் மண்டிக்கிடந்தது என்றும் கூறலாமல்லவா?

தென்னுட்டிலே நடந்துவரும் கதர்த் தொழிலுக்கு கேந்திரதலமாகத் திருப்பூர் இருந்துவரும் காரணத்தால், இஃது ஒரு தேசிய யாத்திரா தலமாகவும் மாறிவிட்டது. காங்கிரஸ் பிரசார நிமித்தம் தென்னுட்டில் சுற்றுப்பிரயாணம் செய்யும் பிராந்தியத் தலைவர்களும், பிற மாகாணத் தலைவர்களும் தவருமல் திருப்பூருக்கு விஜயம் செய்துகொண்டிருந்தனர். திருப்பூர் நகர காங்கிரஸ் கமிட்டி, அப்படி வரும் தலைவர்களை நன்கு பயன்படுத்திக்கொண்டு நகரிலும், சுற்றுப்புறக் கிராமங்களிலும் அஹிம்சாப் புரட்சியின் வேகம் கரைகடந்து ஓடும்வண்ணம் இடைவிடாப் பிரசாரம் நடத்திக்கொண்டே இருந்தது. (அச்சமயம் இந்த நூலாசிரியர்தாம் நகர காங்கிரஸ் கமிட்டியின் செயலாளராக இருந்தார்) எனவே, திருப்பூர் மக்கள், காந்தீய அற நெறியில் ஆழ்ந்த பற்றுள்ளவர்களாகவும், தேசீய விடுதலை இயக்கத்தில் பேரார்வம் காட்டக்கூடியவர்களாகவும் இருந்துவந்தனர்.

கொங்குநாட்டுப் பெருங்குடிமக்களில் 'கவுண்டர்கள்' எனப்படுவோர் ஒரு பிரபல வகுப்பைச் சேர்ந்தவர்கள். விவசாயத் தொழிலையும், வர்த்தகத்தையும் சீராக நடத்திப் பெரும் பொருள் ஈட்டிக்கொண்டு, நல்ல வாழ்க்கை வசதிகளோடு கவுண்டர்கள் பலர் இந் நகரில் வசித்துவருகிருர்கள். அவர்களில் ஒருவர் திரு. கே. எஸ். இராமசாமிக் கவுண்டர் என்பவர். பிரதான தெரு ஒன்றிலுள்ள அவரது இல்லத்திற்கு 'மங்கள விலாஸ்' என்று பெயர். இப் பெரியார் ஒரு சிறந்த தேசபக்தர். திருப்பூரில் செல்வாக்குப் படைத்தவர். அவரது 'மங்கள விலாஸ்' என்ற இல்லமே ஒரு சத்தியாக்கிரகப் பண்ணையாக விளங்கிவந்தது என்ருல் அது மிகையாகாது.



உப்புச் சத்தியாக்கிரக காலத்தில் இருந்தே அவ்வுத்தம தேசபக்தர் திரு. கே. எஸ். இராமசாமிக் கவுண்டர் அவர்களும், அவரது ஒரே மகனை திரு. கே. ஆர். ஈசுவரமூர்த்திக் கவுண்டர் அவர்களும் அரும் பெரும் தொண்டு செய்துவந்தனர். திருப்பூரிலும், அந்த அடுத்துள்ள கிராமங்களிலும் தமது செல்வாக்கை உபயோகித்து பொதுமக்களின் பேராதரவைத் திரட்டினுர்கள். கொண்டவனது பலமிருந்தால் கூரை ஏறிச் சண்டை போடலாம் அல்லவா? அங்ஙனமே, மக்களின் பேராதரவு பெற்ற கவுண்டர்கள், ஆங்காங்கு கள்ளுக்கடை மறியல் வேலைகளைச் செய்ய முன்வந்த தேசீயத் தொண்டர்களை ஆதரித்து நின்றனர். அதனுல், தொண்டர்கள் மறியல் வேலையில் வெற்றிக்கு மேல் வெற்றி பெற்று வந்தனர். பெரிய கவுண்டர், சின்னக் கவுண்டர் என்று அழைக்கப்படும் இவ்விரு கவுண்டர்களும்

அன்றுடம் ஓய்வு ஒழிவு இன்றி தேசசேவையிலேயே தமது நேரத்தில் பெரும் பகுதியைச் செலவிட்டுச் செயலாற்றிவந்தனர். காந்தி பக்தர்களில் சிறந்த வர்கள். மக்களின் மனதைக் கவரவல்ல பேச்சா ளர்கள். எளிமையும், இனிமையும் மிக்கவர்கள். 1930-ஆம் ஆண்டின் இறுதியில் நடைபெற்ற சட்ட மறுப்பு இயக்கத்தில் கலந்துகொண்டு, ஆறு மாதம் சிறைத்தண்டனை பெற்று சிரமம் தாங்கியவர் திரு. கே. எஸ். இராமசாமிக் கவுண்டர். காந்தி - இர்வின் சமாதான காலத்தில், திருப்பூர் நகர காங்கிரஸ் கமிட் டியின் தலைவராக இருந்து, அருந்தொண்டு ஆற்றி வந்தார் சின்னக் கவுண்டர் ஈசுவரமூர்த்தி.

*

## 5. சர்வாதிகார மூர்த்தி.

காந்திமகான் 4-1-1932-ல் ஆங்கில அரசினுல் சிறை செய்யப்பட்டவுடன், நாடெங்கும் அந்த அநீதியை எதிர்த்துப் போராட ஆயத்தங்கள் நடை பெறலாயின. அத்தருணம் திருப்பூர் பின்வாங்குமா? முன்னணியில் முந்திக்கொள்ளவே முயன்றது. போருக்குரிய ஆயத்தவேலைகளைக் கருத்துடன் செய் யத் தொடங்கியது. திருப்பூர் நகர காங்கிரஸ் கமிட்டி கலைக்கப்பட்டது. அதன் ஸ்தானத்தில் இருந்து கொண்டு, இயக்கத்தை இடையருது நன்ருக நடத் திக்கொண்டு போவதற்காக, கிரமப்படி பல சர்வாதி



காரிகள் நியமிக்கப்பட்டனர். திரு. ஈசுவரமூர்த்தியே முதல் சர்வாதிகாரியாக அமர்த்தப்பட்டார். மனம் உவந்து அவரும் அதனை ஏற்றுக்கொண்டார்.

திருப்பூர் நகரிலும், அதன் சுற்றுப்புறக் கிராமங் களிலும் அச்செய்தி மக்கள் மனதில் மிக்க பரபரப்பை உண்டாக்கிவிட்டது. ஈசுவரமூர்த்தி சட்டமறுப்புச் செய்வதைக் காண மக்கள் பேரவாக் கொண்டனர். 6—1—1932 தேதி மாலை நொய்யல் நதியில், காந்தி கட்டத்தில் ஒரு பொதுக்கூட்டத்திற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. காந்திமகானைச் சிறை செய்ததைக் கண்டிப்பதே அக் கூட்டத்தின் நோக்கம். ஆயின், அன்று மாலை ஈசுவரமூர்த்தி சட்டமறுப்புச் செய்வார் என்ற வதந்தி எப்படியோ மக்கள் மத்தியில் பரவி விட்டது. அவ்வாறு யாரும் அறிவிக்கவே கிடை யாது. மட்டற்ற உணர்ச்சிவசப்பட்ட மக்கள் பல தூர தூர கிராமங்களில் இருந்தெல்லாம் திருப்பூர் வந்து கூடிவிட்டனர். அன்று மாலை நடந்த பொதுக் கூட்டத்திற்கு வந்த மக்களின் எண்ணிக்கை யைப்போல் அதற்கு முன்பு எச்சமயத்திலும் திருப் பூர்வாசிகள் கண்டதில்லை. முன்னர் பலவாறு யோசித்து முடிவு செய்திருந்த பிரகாரம் திரு. ஈசுவர மூர்த்தியின் சட்டமறுப்பு 10—1—1932 தேதியன்று தான் நடைபெறும் என்ற தகவலை மக்களுக்கு அறிவித்ததோடு, பொதுமக்கள் அன்று அவ்வளவு பெரும் திரளாகக் கூடியதற்கு நன்றி கூறினர். வரப்போகும் அறப்போரில் மக்கள் பரிபூரண அமை

தியோடு இருந்து ஆதரிக்கவேண்டுமென்று கோரிக் கொண்டு கூட்டத்தைக் கலைத்தனர்.

10—1—1932 தேதி காலை திருப்பூரில் சட்ட மறுப்பு நடைபெறும் என்ற செய்தி காட்டுத் தீயைப் போல் எங்கும் பரவிவிட்டது. ஆங்கில அதிகார வர்க்கத்திற்கு அச் செய்தி முறைப்படி எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டது. அதன்பின் அந்த வர்க்கம் வாளாயிருக்குமா? மக்களின் மனதில் அச்சத்தை மூட்டத் தொடங்கியது; குழப்பத்தை வளர்க்க முனைந்தது. தனது வலிமையை உணராத யானையை, அதன் பாகன் ஒரு முழக் கம்பு கொண்டே ஆட்டிவைக்கிறான். அதுபோல் ஆங்கில அரசும் மக்களைத் தனது தடிகளைக் காட்டி பயப்படுத்தி அடக்கிவந்தது.

தன் பலத்தை யானை உணர்ந்துவிட்டால், அங்குசத்தை உபயோகித்து அடக்க முற்படுவான் பாகன். ஆங்கில அரசும், அதுபோல், மக்கள் தம் பலத்தை உணர்ந்துகொண்டதைக் கண்டு, துப்பாக்கியைக் காட்டி மக்களை பயந்து பதுங்கச் செய்ய முயன்றது.

ஆங்கில அரசுக்கு அச்சாணி போன்றது அதன் போலீஸ் படை. ஆயுதம் தாங்கிய போலீஸ் ரிசர்வ் படையைத் தருவித்து, அவர்கள் அன்றாடம் இரு முறை திருப்பூர் நகரத்தின் வீதிகளில் அணிவகுத்துச் சென்றுவரச் செய்தனர்.

*



## 6. போலீஸின் அட்டகாசம்

கைப்பிரம்பைக் காட்டி இளம் மாணவர்களை அச்சுறுத்துவதுண்டு முற்காலத்தில். (இன்று அப் பழக்கம் அடியோடு மறைந்துவிட்டது) அதுபோல் ஆயுதம் தாங்கிய போலீஸ் ரிசர்வ் படையை ஏவி மக்களைப் பயப்படுத்த முற்பட்டது அதிகாரவர்க்கம். தேளுக்கு மணியம் கொடுத்த கதையாயிற்று இச் செயல். போலீஸ் ரிசர்வ் படை காலை, மாலை இரு முறை ஊரின் மூலை முடக்குகள்தோறும் பவனி வந்ததோடு, ‘பொதுக்கூட்டம் போடக்கூடாது, ஊர்வலம் நடத்தக்கூடாது’. என்ற தடை உத்திரவையும் பிரகடனம் செய்துவந்தது.

‘பழைய யமனா? புதிய யமனா?’ என்று கேட்கும் மனவலி படைத்த மரபில் வந்த மக்கள் இந்த போலீஸ் அட்டகாசம் கண்டு அருண்டுவிடவில்லை; மருண்டுபோகவும் இல்லை. சுதந்திரப் போரிலே எல்லாம் பார்த்தாக வேண்டும் என்றே காத்துக் கிடந்தனர். ஆயினும் பத்தாம் தேதி சட்டமறுப்பு நடக்கும்பொழுது, போலீஸின் செயல் மிகக் குரூரமாகவே இருக்கும் என்பதை நன்கு உணர்ந்து கொண்டு, அதற்காகச் சிறிது கவலை கொண்டவர்களாகவும் இருந்தனர்.

தேசமெங்கும் அடக்குமுறையின் வேகமும், கடுமையும் சொல்லமுடியாத அளவை எட்டியிருந்தது அனைவருக்கும் தெரியும். எனினும் திருப்பூரில்

அவ் வேகமும் கடுமையும் தலைமிஞ்சிவிடும் என்றே பலர் நினைத்தனர். அவர்களின் நினைப்பு சரியான தென்றே பின்னர் நடந்தவற்றைக்கொண்டு அறியக்கூடும். அப்படிப் பலர் நினைத்ததற்குக் காரணம் அச்சமயம் அவ்வூரில் இருந்துவந்த போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டரேயாவார். காங்கிரஸ் தொண்டர்கள் என்றால் அவருக்கு முகம் கடுக்கும். அவர்களைச் சமயம் நேர்ந்தபொழுதெல்லாம் காரணமின்றித் தாக்குவதில் ஆசை மிகுந்தவர். ஆங்கில அரசுக்கு அரும் தொண்டு செய்வதாக நினைத்துக் கொண்டோ, அல்லது தமது அசுரகுணத் தூண்டுதல் மேலோங்கிய காரணத்தாலோ, அவர் பல தீச்செயல்களையும், விபரீதங்களையும் விளைவித்துவந்தார். தொண்டர்களை அவர் 'கண்-மண்' தெரியாமல் அடித்ததுபற்றிக் கேள்விப்பட்ட பொழுதெல்லாம் மக்கள் துடித்தனர். தொண்டர்கள்பேரில் மட்டற்ற அபிமானமும், ஆதரவும் காட்டத் தொடங்கினர். ஆங்கில அரசின்பேரில் அடங்காத வெறுப்புக்கொள்ளத் தொடங்கினர்.

அந்தப் போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டரின் திருவிளையாடல்களைப்பற்றி இங்கு சிறிது விவரிப்பது அவசியம் என்று கருதுகிறேன். 1930-31-ஆம் ஆண்டிலே சட்டமறுப்பு நடந்துவந்த காலத்தில் திரு. மகமது என்ற இந்த சர்க்கிள் இன்ஸ்பெக்டர் பொள்ளாச்சி நகரில் வேலை பார்த்துவந்தார். ஒருநாள் அங்கு பிரசார நிமித்தம் சென்றிருந்த ஈரோடு ஈசுவரன் என்ற மெய்த்தொண்டரையும், அவருடன் இருந்த காலஞ்சென்ற கணபதி சுப்பைய கவுண்டர், பசுபதி என்ற தொண்டர்களையும் இந்த அதிகாரி போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துப்போய் நையப்புடைத்து அனுப்பினார். அவர்களில், பின் இருவரது மீசையிலுள்ள ரோமங்களை ஒவ்வொன்றாகப் பிடித்து இழுத்துப் பிடுங்கி ரணவேதனை உண்டாகச் செய்தார். அத்தனைக்கும் காரணம் யாது? அத் தொண்டர்கள் சட்டமறுப்புச் செய்தார்களா? இல்லை. சாதாரண காங்கிரஸ் பிரசாரம் செய்யத் தம் வழியே போய்க்கொண்டிருந்தார்கள். இச் செய்தி கோவைமாவட்டம் எங்கும் பரவிற்று. மக்கள் மனதில் இது ஆத்திரத்தை மூட்டியது. மனக் கொந்தளிப்பை வளர்த்தது. இனி, திருப்பூரிலே அவர் செய்த லீலைகளைப் பார்ப்போம்.



"காங்கிரஸ் பிரசாரமா? கள்ளுக்கடை மறியலா? என்ன வாலாட்டம், இவையெல்லாம்? என் அதிகார எல்லையில் இவை நடக்க இடங் கொடேன். நடந்தால் வாலை ஒட்ட நறுக்கிவிடுவேன். கண்டதுண்டமாக எலும்பை முறித்துத் தள்ளுவேன். ஜாக்கிரதை!" என்றெல்லாம் கொக்கரித்தார். அவரது பேச்சில் அனல் பொறி பறக்கும். ஆத்திரம் பொங்கி வழியும்.

## 7. மூர்த்தியின் மனமறுக்கம்

அந்தப் போலீஸ் அதிகாரியின் சுபாவம் அனைத்தும் திரு. ஈசுவரமூர்த்திக்கு நன்கு தெரியும். அனைத்தையும் எண்ணிப் பார்த்தார். முடிவில் 'யாது நேரினும் சரி; பத்தாம் தேதி சட்டமறுப்பு இயக்கத்தைத் தொடங்கிவைக்க நான் தயார்' என்று கூறி சர்க்காருக்கும் அறிவித்துவிட்டார்.

மக்கள் அம்முடிவு கேட்டு மனத்துடிப்பு அடைந்தனர். காந்தி - இர்வின் சமாதான காலத்தில் தோன்றி, காங்கிரஸ் கமிட்டியுடன் இணக்கமாக அருமையாக வேலை செய்துவந்த திருப்பூர் 'தேசபந்து வாலிபர் சங்க'த்தின் அங்கத்தினர்கள் ஒன்பது பேர் சட்டமறுப்பை ஆரம்பித்துவைக்கும் முதல் தினத்திலேயே திரு. ஈசுவரமூர்த்தியுடன் சேர்ந்துகொண்டு சத்தியாக்கிரகம் செய்ய முன்வந்தனர். இத் தொண்டர் கூட்டம் 10—1—1932 தேதி அதிகாலை 6 மணிக்கே ஆயத்தமாக வந்து, திரு. ஈசுவரமூர்த்தியின் வீட்டுவாசலிலே அணிவகுத்து நின்றுகொண்டது.

தலைவரும், முதல் சர்வாதிகாரியுமான திரு. ஈசுவரமூர்த்தி குறித்த நேரத்திலே படைத் தலைமை பூண வந்து சேரவில்லை. அவர் வரவை எதிர்பார்த்துக் காத்திருந்த தொண்டர் படை பொறுமை இழக்கத் தொடங்கியது. வண்டியில் பூட்டப்பட்ட உயர்ந்த ஜாதிக் குதிரை, சவாரி தொடங்குவதில் காலதாமதம் ஏற்படுமானல், அதைப் பொறுக்காமல் பதைபதைப் பதைக் கண்டிருக்கிறீர்களல்லவா? அதே நிலையில் தான் தொண்டர் படை அன்று காணப்பட்டது.



முதல் சர்வாதிகாரிக்கும், அவருடன் செல்ல இருந்த தொண்டர்களுக்கும் ஆசி கூறி வழியனுப்பிக் கொடுப்பதற்கென அச்சமயம் நான் அங்கு போய்ச் சேர்ந்தேன். தலைவர் தயங்கித் தவிப்பதை தொண்டர்கள் மூலம் அறிந்துகொண்டு, தலைவரைக் காண அவர் இல்லத்திற்குள் விரைந்தேன். வீட்டில் அவர் காணப்படவில்லை. அதன் பின்புறமிருக்கும் பஞ்சு அரைக்கும் யந்திரசாலையில் ஒரு ஒதுக்குப்புறத்தில், பஞ்சுப் பொதிகளுக்கு நடுவில், விரிப்பு ஏதும் இல்லாத கயிற்றுக் கட்டிலின் பேரில் அவர் சுருண்டு படுத்துக்கொண்டிருந்தார்.

"என்ன கவுண்டரே! தூக்கம் பலமோ? இரவெல்லாம் கண் விழித்து நாடகம் பார்த்துக்கொண்டிருந்தீர்களோ?" என்று கேலியாகக் கேட்டேன். அவரை எழுப்பி உட்கார வைத்துப் பேசவைக்கவே முயன்றேன்.

"வாருங்கள். நமஸ்காரம். ஆம், நாடகந்தான் பார்த்துக்கொண்டிருந்தேன். நாடக முடிவில் நாடக பாத்திரங்களான ஸ்ரீ P. D. ஆஷர் அவர்களும், அவரது மனைவியார் ஸ்ரீமதி பத்மாவதி தேவியாரும் இன்று அதிகாலை 5 மணிக்கே கைது செய்யப்பட்டு பொள்ளாச்சியிலுள்ள சப் கலெக்டரின் முன்னல்

கொண்டுபோய் நிறுத்தப்பட்டுள்ளனர். இது விபரம் தங்களுக்குத் தெரியாதா?" என்று அவர் கேட்டார்.

"தெரியும். வரும் வழியில் அதுபற்றி அறிந்தேன். அந்த குஜராத்திய தம்பதிகள், முதல் சத்தியாக்கிரகியாகிய தங்களை முந்திக்கொண்டனர். பரவாயில்லை. அதிகாரபூர்வமான சட்டமறுப்பு இயக்கம் இதுவரை தொடங்கப்படவில்லை. சேட் தம்பதிகள் சிறைப்படுத்தப்பட்டது முற்றிலும் வேறு விஷயம். அவர்கள் கைது செய்யப்பட்டதால் தங்களுடைய அந்தஸ்து எவ்விதத்திலும் மாறுபடவில்லை. இனியும் தாமதம் செய்யவேண்டாம். எழுந்து வாருங்கள். தொண்டர்படை வெகுநேரமாக உங்கள் வருகையை எதிர்பார்த்துக்கொண்டு நின்றுகொண்டிருக்கிறது" என்று கூறினேன்.

"சுவாமி! இன்று என்னை மன்னித்துவிடுங்கள். சட்டமறுப்புச் செய்ய இன்று நான் முன்வர இயலாது" என்று வெளிப்படையாகவும், உடனடியாகவும் தெரிவித்துவிட்டார். சுற்றி வளைத்துப் பேசாமல் உள்ளதை உள்ளபடி உரைப்பதையே நான் பெரிதும் விரும்புவேன். எனினும் திரு. கவுண்டர் கூறிய பதில் எனக்குப் பிடிக்கவில்லை. எனவே அவரது தோளைப் பிடித்துக் குலுக்கியவாறு "என்ன சொன்னீர்கள்? இன்று நீங்கள் மனமறுக்கம் கொள்ளும்படி என்ன நடந்துவிட்டது? இவ்வளவு முன்னேற்பாடுகள் செய்துவிட்டு, கடைசி நிமிடத்தில் பின் வாங்குவது ஏன்?" என்று வினவினேன்.



"காரணத்தைத்தான் ஆரம்பத்திலேயே சொன்னேன். நீங்கள் அதை சரிவரப் புரிந்துகொள்ளவில்லை என்று தெரிகிறது. நேற்று இரவு முழுவதும் கூடிக் கூடிப் பேசி, சேட் தம்பதிகள் இன்று என் தலைமையில் சட்டமறுப்பு செய்வது என்ற முடிவுக்கு வந்தோம். இதைத்தான் நாடகம் பார்த்ததாக ஆரம்பத்தில் கூறினேன். இந்த முடிவு ஏற்பட்ட பின், நள்ளிரவுக்குப் பின் நான் வீடு வந்து சேர்ந்தேன். அதன்பின்னர் என்ன நடந்ததோ தெரியவில்லை. ஆஷர் சேட்டும், அவர் மனைவியாரும் விடியற்காலை 5 மணிக்கே கைது செய்யப்பட்டு, பொள்ளாச்சிக்கு அனுப்பப்பட்டனர். போலீஸ் அதிகாரிக்கு நம் இருவர்பேரிலும் அளவுகடந்த ஆத்திரம் உண்டு. என்னைவிட, இதுபற்றி நீங்களே நன்கு அறிவீர்கள். சேட் தம்பதிகள் இன்று நடக்கவிருக்கும் சத்தியாக்கிரக இயக்கத்தில் என்னுடன் இருந்தால், போலீஸ் அதிகாரி என்னை அதிகக் கொடுமைக்கு உட்படுத்தமாட்டார். அந்த சேட் தம்பதிகளின் துணை எனக்கு இல்லாமல் போனது என் துரதிர்ஷ்டம். இன்று நான் மட்டும் தனியாகத் தொண்டர்களை அழைத்துக்கொண்டு போனால் என் உயிருக்கே ஆபத்து ஏற்படுவது நிச்சயம் என்று என் பெற்றோரும், மற்றோரும் கருதி, என்னை இன்று புறப்படவேண்டாம் என்று தடுத்துவிட்டனர்" என்று கூறிக் கண் கலங்கினர்.

"வருந்தவேண்டாம் கவுண்டரே, சட்டமறுப்பு இயக்கத்தில் சேர்ந்துகொள்வதும், சேர மறுப்பதும்

அவரவர் விருப்பத்தையும் சூழ்நிலையையும் சார்ந்த செயலாகும். யாரையும் அவரது விருப்பத்திற்கு மாறாக சத்தியாக்கிரகத்தில் வலுக்கட்டாயமாகச் சேர்க்க முடியாது. அது சத்தியாக்கிரக முறைக்கே முரணான செயலாகிவிடும்.

எனவே, சட்டமறுப்பில் கலந்துகொள்ள முடியாதுபோன தங்களை அந்தப் பொறுப்பில் இருந்து விலக்கிவிடுவதே நலம் என்று கருதுகிறேன். ஆரம்பத்தில் இவ்வளவு முன்னேற்பாடுகள் செய்துகொண்டபின் பின்வாங்குவது சரியா என்று நான் கேட்டது நட்பு முறையில் தகவலறியக் கேட்ட கேள்வியாகும். அதற்காக வருந்த வேண்டாம். சரி, நேரமாகிறது. நான் போய்வருகிறேன். வணக்கம்" என்று கூறிவிட்டு எழுந்து சென்றேன்.

*

## 8. ஆஷர் தம்பதிகள்

இந்த இடத்தில் மேலே பிரஸ்தாபிக்கப்பட்டுள்ள சேட் தம்பதிகளைப் பற்றி ஒரு சிறிது கூறுதல் அவசியமாகிறது.

திருப்பூரின் சிறப்பு என்ற முகப்பிலே, திருப்பூர் பஞ்சு வியாபாரத்தைப் பற்றி எழுதியிருக்கிறேன். இங்கு அதுபற்றி மீண்டும் எழுதுவது, கூறியது கூறிய தவறாகிவிடும்.



பம்பாய் மாகாணத்திலே பஞ்சு ஆலைகள் அதிகம். (கோயமுத்தூர் ஜில்லாவில் - திருப்பூர் உட்பட இன்று பஞ்சாலைகள் பெருகிவிட்டன. எனினும், 1932-ல் இருந்த நிலைமையை வைத்துக்கொண்டு இதை எழுதுகிறேன் என்பதை வாசகர்களுக்கு நினைவுபடுத்துகிறேன்) அங்கு பஞ்சு ஏராளமாகத் தேவை. திருப்பூர் பஞ்சு பம்பாய் மாகாணத்திற்கு ஏற்றுமதியாகும். அம்மாகாணத்தில் ஆலைத் தொழிலையும், அதற்கு வேண்டிய மூலப்பொருள்களில் வர்த்தகத்தையும் நடத்திவருவோர் பெரும்பாலும் கூர்ஜர நாட்டைச் சேர்ந்த குஜராத்தியரே. இவர்களைப் பொதுவாக நாம் 'சேட்மார்கள்' என்றே அழைப்போம்.

காந்திமகான் பிறந்தது இந்த கூர்ஜர நாட்டில் தான். இந்த கூர்ஜர தேசத்தவருக்கு வாணிபத்திலும் ஆலைத் தொழிலிலும் பெரும் அக்கறையுண்டு. எனவே, அவர்கள் வேறு மாகாணங்களுக்குப் போய் குடியேறி, நன்றாக வாழ்வார்கள்.

அத்தகைய குஜராத்தியர் சிலர் நெடுநாட்களுக்கு முன்பே திருப்பூரில் வந்து குடியேறினர். தம் தாய்மொழி குஜராத்தியைப் போலவே தமிழ் மொழியையும் கற்றுணர்ந்து கொண்டனர். காலக்கிரமத்தில் தமிழரின் நடை, உடை, பாவனைகளையும் மேற்கொண்டுவிட்டனர். சுருங்கக் கூறுமிடத்து, அவர்கள் அனைவரும் தமிழருடன் தமிழராக இரண்டறக் கலந்துவிட்டனர்.


இவர்களிடம் பணி புரிந்துவரும் தமிழர்கள் விரைவில் குஜராத்தி பாஷையைக் கற்றுக்கொண்டு அம் மொழியிலேயே இவர்களது கணக்குகளைப் பதிந்து கொடுக்கும் திறம் பெற்றுவிட்டனர்.

பர்தோலி வட்டத்து விவசாயிகளின் வரிகொடா இயக்கம்பற்றியும், அவர்களது வீரம், தியாகம், ஒழுக்கம், தேசப்பற்று, ஒற்றுமையுணர்ச்சி முதலிய அருங் குணங்களைப்பற்றியும் அங்கிருந்து வந்துகொண்டிருந்த நபர்கள் வாயிலாகவும், பத்திரிகை வாயிலாகவும் அறிந்த இந்த குமாஸ்தா வர்க்கம் அதனை நகர் முழுவதும் பரப்பிவிட்டது.


இவ்விதம் திருப்பூரில் குடியேறிய குஜராத்தியர் சமூகத்தின் தலைவராகத் திகழ்ந்தவர் புருஷோத்தம தாஸ் தாமோதர ஆஷர் என்பவர். இவரது தர்ம பத்தினியின் பெயரே பத்மாவதி ஆஷர் என்பது.

ஸ்ரீ P. D. ஆஷர் பிரபல பஞ்சு வியாபாரி. கதர் ஸ்தாபனம் ஒன்றையும் ஒரு லிமிடெட் கம்பெனி முறையில் நடத்திவந்தார். செல்வம் மிக்கவராயினும் இந்தத் தம்பதிகளிடம் தர்மசிந்தனையும், தன்னடக்கமும், தேசிய உணர்ச்சியும், இனிய உரையாடும் சுபாவமும் மலிந்து கிடந்தன. திருப்பூர் மக்கள் இவர்களை மிகவும் மதித்துவந்தனர்.

1930-ஆம் ஆண்டு இறுதியில் திருப்பூரில் நடந்த சத்தியாக்கிரக இயக்கத்தை ஸ்ரீமதி பத்மாவதி அம்மையார்தான் தலைமை வகித்து ஆரம்பித்துக்



ஆர்வமுடன் இயக்கங்களில் ஈடுபட்ட இடுவம்பாளையத்தைச் சேர்ந்த தொண்டர்களில் ஒருவரான ஸ்ரீ மா. பொங்காளி முதலியார்.



சிறுவயதிலிருந்தே விடுதலை இயக்கத்தில் தீவிரமாக ஈடுபட்டுழைத்த ஸ்ரீ அ. அப்புக்குட்டி.



தியாகி ஸ்ரீ R. ராமன் நாயர். (நீலகிரித் தோட்டத்தொழிலாளர் சங்கத் தலைவர், குன்னூர்)



திருப்பூர் B. S. சுந்தரத்தை ஈன்றெடுத்தவரும், சிறைசென்று தியாகம் செய்தவருமான வீரத்தாய் லக்ஷ்மி அம்மாள்.

கொடுத்தார்கள். அதுசமயம் ஆறு மாத சிறைத் தண்டனை பெற்றுப் புகழ் பெற்றார்கள். இத்தகைய சேட் தம்பதிகள் உடன் இருந்தால் தமக்கு போலீஸ் அதிகாரியால் அதிகக் கொடுமை நேராது என்று திரு. ஈசுவரமூர்த்தி நினைத்தது தவறல்ல. இந்தத் தம்பதிகளுடன் போர் செய்திருந்தாலும், இவர்களை மட்டும் முதலில் கைது செய்து போலீஸ் ஸ்டேஷனுக்கு அனுப்பிவிட்டு, திரு. ஈசுவரமூர்த்தியை ஒரு கை பார்த்திருக்கலாம் போலீஸ் அதிகாரி. நடக்காததைப்பற்றி வாதமிட்டுப் பயன் என்ன?

*

## 9. தியாகத்துள்ளல்.

மங்கள விலாஸ் மாளிகையின் தலைவாசல் பக்கத்தில் நின்றுகொண்டிருந்த தொண்டர்கள் என் வரவை ஆவலுடன் எதிர்பார்த்திருந்தனர். அவர்களிடம் நான் தயங்கிக்கொண்டே ஈசுவரமூர்த்தியின் மன மறுக்கத்தைப்பற்றி விவரமாகக் கூறினேன். அப் படையின் தளபதியாக இருந்த திரு. நாச்சிமுத்து என்பவர் முன்வந்து நின்றுகொண்டு, "அப்படியாயின் எங்கள் கதி என்ன?" என்று வினவினர்.

"அதைப்பற்றியே நான் யோசித்துக் கொண்டிருக்கிறேன். தமது சித்தம்போல் போரில் குதிக்கு முன் எந்தக் கட்டத்திலும் விலகிக்கொள்ள சத்தியாக்கிரகிகளுக்கு உரிமை உண்டு. அப்படி அவர்

விலகிக்கொண்டதால் நமக்கு வருத்தமில்லை. ஆனால் அவர் ஸ்தானத்தில் வேறு ஒரு தலைவரைத் தேடிப் பிடித்து வந்து அமர்த்த அவகாசம் இல்லாமல் செய்துவிட்டார். இரண்டாவது சர்வாதிகாரியை அழைத்து வரலாம் என்றாலோ, அவரை எங்கே போய்த் தேடிப்பிடிப்பேன்? பிடித்தாலும் இன்று சத்தியாக்கிரகம் செய்ய அவர் ஆயத்தமாக இருப்பார் என்பது என்ன நிச்சயம்? என்று கூறி ஆதங்கப் பட்டேன்.

இது கேட்ட தொண்டர்களில் அதிதீவிர உணர்ச்சியுள்ள திரு. விஸ்வநாத நாயருக்குப் பொறுக்கவில்லை. "அப்போது இன்று சட்டமறுப்பு கிடையாது. நாங்கள் கலைந்துபோய் விடவேண்டும் என்பது தங்கள் நினைப்பா?" என்று மலையாள உச்சரிப்புடன் பரபரப்பாகக் கேள்வி கேட்டார்.

"அப்படி யார் சொன்னது? இயக்கத்தை நிறுத்திவிடும் எண்ணமே எனக்கு லவலேசம் கூடக் கிடையாது. தலைமைக்கு யாரைப் போடுவது? இது பற்றி முடிவு செய்வதற்கே நான் யோசிக்கிறேன்" என்று கூறினேன்.

என்னுடன் கதர்த்தொண்டு செய்துகொண்டிருந்த ஸ்ரீ R. ராமன் நாயர் என்ற வாலிபர் என்னை நோக்கி "ஏன், ஐயா! இன்று நீங்களே தலைமை தாங்கி எங்களைப் போருக்கு அழைத்துக்கொண்டு போக என்ன தடை? என்று கேட்டார்.



"தடையொன்றுமில்லை. நானே இன்று உங்களை அழைத்துக்கொண்டு அறப்போரில் குதிப்பதை ஒரு பெரும் பாக்கியமாகவே கருதுகிறேன். ஆண்மை, வீரம், நெஞ்சுறுதி மிக்க உங்களைப் போன்ற தொண்டர்கள் எனக்குக் கிடைத்ததுபற்றி பெருமிதம் கொள்ளுகிறேன். எனவே நான் உங்களுடன் புறப்படுவதைப் பற்றித் தயங்கவில்லை. தயாராகவே இருக்கிறேன். ஆனால் என்மீது ஒரு புனிதமான, பெரும் பொறுப்புள்ள கடமை சுமத்தப் பட்டிருப்பதை நீங்கள் அனைவரும் நன்கு அறிவீர்கள். சட்ட மறுப்பு இயக்கம் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கும்படி பார்த்துக் கொள்வது என் பொறுப்பாகும். இங்ஙனம் கலைக்கப்பட்ட காங்கிரஸ் கமிட்டி எனக்கு ஆணையிட்டுள்ளதை அறிவீர்கள். அதற்காகவே கடைசிவரை செயலாற்றிக் கொண்டிருந்து, இறுதியில்தான் நான் சட்டமறுப்புச் செய்யவேண்டும் என்பது எனக்கு அளிக்கப் பட்ட உத்திரவு என்பதை நீங்கள் மறந்திருக்க முடியாது. உணர்ச்சி வேகத்தால் உந்தப்பட்டு, இன்று நானே உங்கள் படைக்குத் தலைமை வகித்துக் கொண்டு போகக் கிளம்பிவிட்டால், வருங்கால வேலைகளை நடத்துவது யார்? என்மீது சுமத்தப் பட்ட கடமை என்ன ஆவது? கடமையில் தவறியவன் என்று எல்லோரும் என்னை இகழ்வார்கள். இகழ்ச்சியைப்பற்றி எனக்குக் கவலையில்லை. ஆனால் இயக்கம் தொடர்ந்து நடக்க வேண்டும் என்பதில் எனக்குக் கவலை அதிகமுண்டு. எனினும் எனக்கு

இதற்கு ஒரு உபாயம் தோன்றுகின்றது. எனக்கு அளித்துள்ள பொறுப்பை திரு. ஈசுவரமூர்த்தி யிடம் ஒப்படைத்துவிட்டு வருகிறேன். சற்றுப் பொறுங்கள். ஒரு நொடியில் திரும்பி வருகிறேன்" என்று கூறிவிட்டு மீண்டும் திரு. கவுண்டரைச் சந் திக்க விரைந்தேன்.

இந்தப்பதவி மாற்றிக்கொண்ட சடங்கு ஒரு நொடியில் பூர்த்தியாயிற்று. மீண்டும் நான் தொண் டர்கள் முன் ஆஜரானேன்.

*

## 10. தொண்டருக்கு நல்லுரை.

திரு. K. S. ராமசாமி கவுண்டரின் தர்ம பத்தினி யும், அவரது குமாரத்தியும் ஹாரத்தி சுற்றி, திருஷ்டி கழித்து எங்களை வாழ்த்தி அனுப்ப ஒரு சிறிது அவ காசம் கோரினர். வயது சென்ற அந்த சுமங்கலித் தாயின் கோரிக்கையை ஒரு நற்சகுனமாகவே கருதி, அவர் கோரிக்கையை ஏற்றுக் கொண்டோம். அந்த இடைக்காலத்தைப் பயன் படுத்திக் கொண்டு தொண்டர்களுக்கு நல்லுரை கூறுமாறு என்னைப் பலர் வற்புறுத்தினர். பேசுவதற்கு அது சமயமல்ல. மனம் கசிந்து மாதவனை தியானிக்கவேண்டிய சமயம் அது. எனினும் எதிலும் ஒருவித சம்பிர தாயத்தைப் புகுத்தி விடுவது நமது சுபாவம். இது



மாதிரி போருக்குக் கிளம்பும் தொண்டர்களை ஊக்கிப் பேசுவது ஒரு சம்பிரதாயமாகி விட்டபடியால், பேச உடன்பட்டேன்.

"அன்பர்களே பேசுவதற்கு அவசியம் இல்லை. ஆனல் பேசியே தீரவேண்டும் என்ற கட்டாயம் ஏற்பட்டு விட்டதால், ஒரு விஷயத்தை மட்டும் வலி யுறுத்திக் கூற விரும்புகிறேன். என் கருத்தை ஒரு சரித்திர நிகழ்ச்சியைக் கூறி விளக்குகிறேன், கவன மாகக் கேளுங்கள்.

"பிஸாரோ என்ற தளகர்த்தர் பெரும்படை திரட்டிக் கொண்டு, தன் தந்தையர் நாட்டுக்காக வேறு நாடு ஒன்றை வாள் வலியால் வென்று, தன் நாட்டின் ஆதிக்கத்தை அங்கு நிலை நாட்டப் புறப் பட்டார்.

"வேற்று நாட்டின் எல்லைப்புறத்தை அடைந்த உடன் தன் படை வீரர்களை அணிவகுத்து நிறுத்தி ஞர். அவர்கள் முன் நின்றுகொண்டு பேசலுற்ருர்.

"வீரர்களே! இதோ உங்களுக்கும் எனக்கும் இடையே தரையில் ஒரு கோடு வரையப்பட்டுள் ளது. கிழ மேலாக வரையப்பட்ட இந்தக் கோட்டின் வடக்கே நீங்கள் நிற்கிறீர்கள். நானே அதற்குத் தெற்கில் நிற்கிறேன். இந்தக் கோட்டைக் கடந்து தெற்கு நோக்கிப் போதல் உங்கள் கடமை. அக் கடமை மிகக் கடுமையானது.

"கோட்டிற்கு தெற்கே போகத் தயாராக வருவோர் முன்பின் அறியாத தேசம் ஒன்றுக்குப் போகிறுர்கள். அங்கே காட்டிலும் மலையிலும் திரிந்து, ஆறுகளை நீந்திக் கடந்து அல்லல்பட நேரிடும். வேளாவேளைக்கு உண்ண ஒன்றும் கிட்டாமல், பசியால் வாடி வதங்க நேரிடும். களைதீர உட்கார்வும், சோர்வு நீங்க உறங்கவும் அவர்களுக்கு அவகாசம் கிடைக்காது. சதா நடந்து கொண்டே இருக்க நேரிடும்.

"மேலும் கொடிய வன விலங்குகளுடன் போராடிக்கொண்டு, அவற்றின் கூரிய நகங்களுக்கும் கொடிய பற்களுக்கும் இலக்காகி மாண்டு மடிய நேரிடலாம். விஷ சுரமும், உதிரத்தை உறிஞ்சும் பூச்சிகளும் அவர்களை உயிரோடு சித்திரவதை செய்யக் கூடும். இவை அனைத்தையும் பொறுத்துக்கொண்டு பணியாற்றுவோர் நாட்டபிமானிகள். நல்ல விசுவாசமுள்ள வீரர்கள் என மதிக்கப்படுவர். போற்றிப் புகழப்படுவர். இஃது நம் தேசப்பணி. நம் தந்தையர் நாட்டின் கீர்த்தியை ஓங்கச் செய்யும் தர்மப்பணி.

"இக்கோட்டிற்கு வடக்கேயே தங்கி விடுவோர் சுகபோகத்தை அனுபவித்துக் கொண்டிருக்கலாம். இந்த இரண்டில் ஒன்றை தம் இச்சையாக அவரவரே ஆர அமர யோசித்து முடிவு செய்து கொள்ளும் உரிமை உங்களுக்கு உண்டு. தெற்கே நோக்கிச் செல்லும் பணியில் ஈடுபடும்படி உங்களில்



யாரையும் நான் வற்புறுத்த மாட்டேன்" என்று கூறி முடித்தார்.

"அங்ஙனம் பிஸாரோ என்ற தளகர்த்தர் பேசி முடித்ததும் பல்லாயிரக் கணக்கான வீரர்கள் நிறைந்த அந்த சேனையிலிருந்து ஒரு சிறு பகுதியினரே தெற்கு நோக்கிப் போகும் பணியை ஏற்றுக் கொண்டனர் என்று சரித்திர நிகழ்ச்சி ஒன்று கூறுகிறது. ஆதலால் சகோதரர்களே, அவர் கூறிய விதமே நானும் சொல்லத் துணிந்ததற்கு மன்னிப்பீர்கள் என்று நம்புகிறேன்.

"நமது திருப்பூரிலே சென்ற ஒரு வார காலமாக ஆயுதம் தாங்கிய போலீஸ் படை பவனி வந்து கொண்டிருப்பதை நீங்கள் அறிவீர்கள். அவர்கள் செய்துவரும் ஆர்ப்பாட்டங்களைப்பற்றி என்னைவிட நீங்கள்தாம் நன்கு அறிந்தவர்கள். அத்தகைய போலீஸ் இன்று நம்மீது பாய்ந்து, கொடுமை பல நமக்கு இழைப்பது உறுதி. மேலும் இதுமாதிரி சட்ட மறுப்பு கோஷ்டி மீண்டும் புறப்படாதிருக்கச் செய்யும் நோக்கத்துடன் மக்கள் மனதில் பயத்தை உண்டுபண்ணுவதற்காகவே, முன்னேடிகளான நம்மை மிகக் கோரமாகச் சித்திரவதை செய்வார்கள் என்பதும் உறுதி. எனவே இன்று சட்ட மறுப்புச் செய்யப்புகும் தொண்டர்கள் நிச்சயமாக மரணத்துடன் விளையாட நேரிடும். போலீசாரின் குண்டுகள் நம் உடல்களைச் சல்லடைக் கண்கள்போல் துளைக்க நேரலாம். துப்பாக்கி முனையில் செருகப்

பட்டுள்ள ஈட்டிகள் நம் சதையைக் கிழித்து, நமது குடல்களை வெளிப்படுத்தக்கூடும். போலீசாரின் கைகளிலுள்ள பூண் போட்ட குண்டாந் தடிகள் நமது மண்டையைப் பிளக்கும். உடம்பிலிலுள்ள எலும்புகளை நொறுக்கும். என்ன நடக்கும் என்று திட்டவட்டமாகக் கூறமுடியாது. ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். நம்மைப் போலீசார் சிரமம் இன்றி கைது செய்துவிட மாட்டார்கள். நம்மைத் தொலைத்து எறிவதே அவர்களது திட்டம் என்பதை நாம் நன்கு அறிவோம். உங்கள் மனதில் பீதியை உண்டாக்கி, நீங்கள் இங்கிருந்து பின்னடைந்து ஓடிவிடும்படி செய்ய நான் முயற்சி செய்வதாக நினைக்க மாட்டீர்கள் என்று நம்புகிறேன்.

"ஆனால் நமக்கு வர இருக்கும் ஆபத்தைப்பற்றி நன்கு விளக்கி விடுவதும், எச்சரிப்பதும் தலைவன் என்ற முறையில் என் கடமையாகிறது. அதற்காகவே இவற்றைச் சொன்னேன். மேலும் கேளுங்கள். பிஸாரோவின் வீரர்களது குறிக்கோளும், அவர்கள் அதைப்பெற வகுத்துக்கொண்ட வழி முறைகளும் நமது குறிக்கோள், வழி முறைக்கு முறணானவை. அவர்களோ ஆயுதபாணிகள். தங்களது அஸ்திரங்களைத் தங்கு தடையின்றி உபயோகித்து எதிரிகளை நிர்மூலப்படுத்தவும், தங்களைப் பாதுகாத்துக் கொள்ளவும் உரிமை பெற்றவர்கள். நாமோ நிராயுதபாணிகள். அஹிம்சையே நமது விரதம். எதிரிகளை எதிர்த்தடிக்க நமக்கு உரிமை இல்லை. எதிர்த்தடிக்கும் எண்ணம் கூட நம் மனதில்



எழக்கூடாது. அதுமட்டுமா? அவர்களை எதிரிகள் என்றுகூட கருதக்கூடாது. நம்மைச் சித்திரவதை செய்தால், அதற்காக அவர்கள்மீது கோபதாபம் கூட காட்டக்கூடாது. மற்றும் கேளுங்கள். பிஸாரோவின் வீரரில் ஒரு சிலரோ அல்லது பலரோ உயிர் தப்பி வாழக்கூடும். நம்மில் ஒருவர்கூட இன்று தப்பிப் பிழைப்பார் என்று எதிர்பார்க்க முடியாது.

"பிஸாரோவின் வீரர்களோ நாடு பிடிக்கும் இழிவான வேலையில் புகுத்தப்பட்டவர்கள். வெள்ளியும் பிற கனிப்பொருளும் மலிந்து கிடக்கும் தென் அமெரிக்காவை மிருக பலத்தால் எதிர்த்துப் பிடிக்கும் சுயநலமிகளின் கூலி ஆட்கள். அங்குள்ள ஆதிவாசிகளை அடியோடு அழித்து, அங்கு தம்மவரைக் குடிபுகுத்த முற்பட்ட மண் ஆசை பிடித்தோரின் பணியாளர்.

"நாமோ எந்தவிதமான ஆக்ரமிப்பு வேலையிலும் இச்சை கொள்ளவில்லை. பிறரது நாட்டைக் கவர முற்படவில்லை. தன்மானம் கொண்டெழுந்து, நம் சொந்த நாட்டை அன்னியரது ஆதிக்கத்திலிருந்து விடுவிக்க விரும்புகிறோம். தவிர நாமோ காந்திமகானின் அறவழியை அந்தரங்க சுத்தியுடன் ஒப்புக்கொண்டு, அவ்வழியே பணியாற்றி வருபவர்கள்.

"நமது குறிக்கோள் மிகவும் சீரியது. அதனை அடைய நாம் மேற்கொள்ளும் முறைகளும் தூய்மையானவை. சத்தியாக்கிரக நியமங்களிலிருந்து நாம்

இம்மியளவுகூட தவறிவிடக் கூடாது. நமக்கு யாரிடமும் பகைமையில்லை. அன்பால் அன்பை வளர்த்து, ஆன்ம பலத்தால் அனர்த்தங்களைச் சகித்துக்கொண்டு, நமது தேசத்தை விடுவிக்கவே நாம் முயன்று உழைத்து வருகிறோம்.

"பிஸாரோவின் வீரர்களை விட நமக்கு பன் மடங்கு அதிகமான ஆபத்துகள் உண்டு. எனவே தான் அவர்தம் வீரர்களுக்கு உரைத்ததைக் காட்டிலும் அதிகமாகவே உங்களுக்கு நான் எச்சரிக்கை செய்ய நேர்ந்தது. இன்றைய இயக்கத்தில் கலந்து கொள்ளும்படி யாரையும் நான் வற்புறுத்தவில்லை. இதை மிகத் தெளிவாக எடுத்துக் கூறுவது என் கடமை. முடிவாக ஒரு வார்த்தை கூற விரும்புகிறேன். இன்று நடக்கும் போராட்டத்தில் கலந்து கொள்ளாமல் விலகிவிட யாரேனும் விரும்பினால், மனம் கூசாமல், வெட்கப்படாமல் அதை என்னிடம் அறிவிக்கலாம். தொண்டர் படையில் சேர்ந்த பின்பு பின் வாங்கலாமா? அவ்வாறு செய்தால் ஊரிலே நமக்கு என்ன மதிப்பு இருக்கும்? என்றெல்லாம் எண்ணித் தயங்க வேண்டாம்.

"வாய்மையை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டது நமது போர் முறை. சத்திய சந்தர் எதற்கும் அஞ்சவோ அவமானம் கொள்ளவோ கூடாது. கடைசி நிமிஷத்தில் பின்வாங்குவோரையும் ஏசிப் பேசக்கூடாது. இதுவே நம் பண்பாடு.



"அதனால்தான் இன்று இப்படைக்குத் தலைமை தாங்கி நடத்த முன் வர முடியாமல் போன திரு. ஈசுவர மூர்த்தியின் பேரில் நமக்கு கோபதாபம் ஏற்படவில்லை. அவர் மீது வெறுப்பு உதிக்கவில்லை. ஆதலால் அன்பர்களே! எல்லாவற்றையும் ஆர அமரச் சிந்தித்துப்பாருங்கள். அதற்காக ஒரு ஐந்து நிமிட அவகாசமளிக்கிறேன். அவகாச முடிவில் கூச்சமோ, தயக்கமோ கொள்ளாமல் ஒவ்வொருவரும் தமது முடிவை எனக்கு அறிவியுங்கள்" என்று கூறி முடித்தேன்.

✳

## 11. மனவலியின் சாயல்.

ஐந்து நிமிட அவகாசம் தீர்ந்தது. படையில் இருந்து விலகிக்கொள்ள யாரும் முன் வரவில்லை. எல்லாரும் ஊக்கம் மிகுந்து உற்சாகத்துடன் தென்பட்டனர். 'ஜயமுண்டு பயமில்லை; முன் வைத்த காலைப் பின்வைக்க மாட்டோம்' என்று முழக்கம் செய்தனர். அவர்களின் உறுதி கண்டு அகமகிழ்ந்தேன். பின்னர் அந்த ஒன்பது தொண்டர்களையும் ஒவ்வொருவராக உற்று நோக்கினேன். அவர்களில் ஒருவர் மட்டும் எனக்கு ஏற்கனவே பழக்கமில்லாதவர். ஏனையோர் நெஞ்சம் துணிந்த மெய்த் தொண்டர்கள். நம்பத்தகுந்தவர்கள். பன்னாள் என்னுடன் நெருங்கிப் பழகியவர்கள். காந்தி - இர்வின்

சமாதான காலத்திற்கு முன்பிருந்தே தேசத் தொண்டில் என்னுடன் தோளோடு தோள் நின்று, ஓய்வு ஒழிவின்றி பணியாற்றியவர்கள். கள்ளுக் கடைகளையும், அயல் நாட்டு ஜவுளிக் கடைகளையும் நல்ல முறையில் மறியல் செய்ய எனக்கு உதவி யளித்தவர்கள். திருப்பூர் பொதுமக்களின் நன் மதிப்பைப்பெற்ற அரும் தொண்டர்கள். படையின் விதிமுறைகளை நன்கு உணர்ந்து நடப்பவர்கள். பம்பாய் நகரப் பிரமுகர் ஸ்ரீ K. F. நாரிமன் அவர் களின் தலைமையில் 1931-ம் ஆண்டின் இறுதியிலே திருப்பூரில் நடந்த கோவை ஜில்லா தேசீய வாலிபர் மகாநாடு வெற்றிகரமாக நடைபெற்றதற்கு ஆவன அனைத்தும் செய்த ஊழியர்களிலிருந்து பொருக்கி எடுக்கப்பட்டவர்களாவர் அந்த எட்டுத் தொண்டர் களும். எனவே பயிற்சி பெற்றுப் பக்குவம் எய்திய பரிபூரணமான தொண்டர்கள்.

ஒன்பதாவது நபர் – அதாவது எனக்கு ஏற் கனவே அறிமுகம் ஆகாத நபர் பற்றியே நான் யோசித்தேன். அவர் முகத்தில் ஒளி காணப்பட வில்லை. உடலிலே தெம்பு தென்படவில்லை. ஒரு வாறு சோர்வுற்றவராகவே தோன்றினர். ஆதலால் இயக்கத்தில் சேர வேண்டாம் என்று அவருக்கு யோசனை கூறினேன். ஆனல் அவரோ அவ்வாறு பின்வாங்க முடியாதென்று உறுதியாக உரைத்து விட்டார். ஆகவே அவரையும் உடன் அழைத்துக் கொண்டு போக ஒருவாறு ஒப்பினேன்.



அத்தொண்டர் படையில் அப்புக்குட்டி என்ற ஒரு இளம் தொண்டர் இருந்தார். அடிநாளி லிருந்தே சதா என்னுடன் இருந்து, பணி புரிந்து வந்தவர். நான் சிறைப்படுத்தப்பட்ட பொழுதெல் லாம் அவரும் கைது செய்யப்பட்டு, ஆனல் சிறுவன் என்ற காரணத்தால் உடனுக்குடனே விடுதலை செய்யப்பட்டவர்.

என் முகத் தோற்றத்தில் ஏற்படும் மாறுதல் களைக் கண்டு, என் மனதில் தோன்றிய எண்ணங் களை உள்ளது உள்ளபடி அறிந்து கொள்ளும் மதி யூகம் பெற்றவர். அவர்தாம் அச்சமயம் என்னை நோக்கி, 'சுவாமி அந்த நபரைப்பற்றித் தாங்கள் சரியாக அறிந்துகொள்ளவில்லை என்று தெரிகிறது. அவரை விலக்கக் கருத வேண்டாம். அவர்தாம் எங்கள் அனைவரிலும் வலிவு மிக்க மனம் படைத் தவர். பன்னுள் ஆலோசித்த பின்னரே படையில் வந்து சேர்ந்தார். அதோடு பரிபூரண ஆயத்தம் செய்துகொண்டு வந்தவர் அவர். இன்று நேர மில்லை. மற்றொரு சமயம் அவரைப்பற்றி விரிவாகக் கூறுவேன். இது சமயம் அவரையும் ஏற்றுக் கொண்டு புறப்படுவோம்' என்று கூறினர்.

'அப்படியா ? மெத்த சந்தோஷம். அவரும் நம்முடன் வரட்டும். அவரது உள்ளத்தை நான் சரியாக அறியத் தவறிவிட்டேன். வெளித் தோற்றம் கண்டு ஏமாந்து விட்டேன். அதற்காக வருந்து கிறேன். "அவரையும் ஏற்றுக் கொள்ளுகிறேன்'

என்று கூறி அவர் பெயரை விசாரித்தேன். அவர் பெயர் திரு. குமாரசாமி என்று சொன்னார்கள். 'நல்லது எல்லோரும் புறப்படுங்கள்' என்று கூறினேன்.

மங்கள விலாஸ் மாளிகையின் மாதரசிகள் மனங்கனிந்து முன்வந்து எமக்குத் திலகமிட்டு, ஹாரத்தி சுற்றி திருஷ்டி கழித்தனர். மனமார வாழ்த்தி வழி அனுப்பினர். தெய்வ வணக்கத்தை முடித்துக்கொண்டு மகாத்மா காந்திக்கு ஜே! என்று கோஷமிட்டுக்கொண்டு புறப்பட்டோம். [அப்பொழுது காலை 8-30 மணி இருக்கும்.] வீதியில் பரவசத்துடன் புகுந்தோம். மகிழ்ச்சியும் கவலையும் கலந்த மனத்தினராக மகாஜனங்கள் தெரு ஓரங்களில் எங்களை எதிர்நோக்கிக்கொண்டு நின்றிருந்தனர்.

உடல், பொருள், ஆவி ஆக மூன்றையும் அன்னையின் பணியில் நிவேதனம் செய்வதற்காகவே அஞ்சாது போர் முகம் நோக்கிப் போன வீரரின் மன வலி கண்டு மட்டற்ற மகிழ்ச்சி ஒரு புறம். அந்தோ போலீஸ் படை இந்த உத்தமத் தொண்டர்கள் மீது பாய்ந்து இவர்களை அடித்துக் கொல்லுமே என்ற கவலை மறுபுறம். 'ஆண்டவனே நீதான் இவர்களைக் காப்பாற்ற வேண்டும்' என்று சொல்லிக் கை கூப்பித் தொழாதவர் அந்த ஜனக் கூட்டத்தில் கிடையாது.

*

V 2M:5N9 N04 N59
LIBRARY MADRAS
No. 103870



## 12. குமரனின் மூளை சிதறல்

பிரதான வீதியிலே தொண்டர் படையைச் சேர்ந்தவர்கள் இரண்டு இரண்டு பெயராக அணி வகுத்துச் சென்றனர். வீதியின் இரு மருங்கிலும் கூடி நின்ற மக்கள் ஆனந்த ஆரவாரம் செய்து, எங்களை ஊக்கிக்கொண்டிருந்தனர். படையின் முன்னணியிலே கையில் தேசீயக் கொடியைப் பிடித்துக்கொண்டு தலை நிமிர்ந்து நடந்தார் குமாரசாமி.

அவ்வீதியிலே நாங்கள் சென்று கொண்டிருந்த பொழுது, எங்களை மும்முறை பின் தங்கவைத்து விட்டு அவர் முன்னேறிவிட்டார். அவரைக் கூவி அழைத்து, நிதானமாக அனைவருடன் சேர்ந்து போகும்படி அவரை நான் மும்முறை திருத்த நேர்ந்தது.

தொண்டர் படையின் ஒழுங்கு முறைகளை நன்கறிந்தவர் என்றே குமாரசாமியைப் பற்றி எனக்கு அறிவித்திருந்தார்கள். எனினும் அன்று மும்முறை எங்களை விட்டுப்பிரிந்து, அவர் மட்டும் தனியாக முன்னேறியது ஏன்? உணர்ச்சியின் வேகமா? அல்லது பின்னர் நிகழ்ந்ததைச் சேர்த்துப் பார்க்கும் பொழுது, ஏதோ ஒரு சக்தி அவரை அப்படித் தள்ளிக்கொண்டு போயிற்று என்று கூறலாமா? அதை யாரே அறிவார்? அவன் ஆட்டிவைத்தால், ஆடாதார் யார்? அவனன்றி ஓர் அணுவும் அசையாதன்றோ?

நாங்கள் சென்ற பிரதான ரஸ்தாவில்தான் நகர போலீஸ் ஸ்டேஷன் உளது. அதற்கு எதிர்ப்புறம் சாலையிலே நாங்கள் சென்றுகொண்டிருந்த பொழுது, சுமார் முப்பது போலீஸ் வீரர்களும், இரண்டு அதிகாரிகளும் போலீஸ் ஸ்டேஷனை விட்டுப் பாய்ந்து வந்தனர். வந்ததும் கண்மூடித்தனமாக எங்களை அடிக்கத் தொடங்கினர். அதிகார விதிமுறையும் ஒழுங்கும் எப்படி?

"கொடி பிடித்துக்கொண்டு ஊர்வலம் போவது சட்ட விரோதமாகும் என்று அறிவித்திருக்கிறோம். எனவே அணிவகுத்துச் செல்வதைத் தடை செய்கிறோம். கலைந்து போய் விடுங்கள். இன்றேல் பலாத்காரத்தை உபயோகித்துக் கூட்டத்தைக் கலைக்க முற்படுவோம்" என்று எச்சரிப்பதுதான் முறை. அவ்விதம் எச்சரிக்கை செய்யவே இல்லை. செய்திருந்தாலும், கலைந்து போக எங்களில் யாரும் தயாராக இருக்கவில்லை. ஆனால் அது வேறு விஷயம். போலீசார் தம் ஒழுக்கத்தைத் தாமே மீறி விட்ட தகவலை இங்கு பதிவு செய்துவிடவே இதனை விளக்கினேன்.

மற்றும் ஒரு விஷயம். போலீஸ் சேவகர்களுக்குத் தடியடிப் பிரயோகம் கற்றுக் கொடுக்கப்படுவதுண்டு. ஆளுக்கு ஆபத்து நேராமல் அடிக்கவே பயிற்சி அளிக்கப்படும். அவ்விதமே தடியடி நடந்திருந்தால், எந்த ஊரிலும் தொண்டர்களுக்கு உயிர்ச்சேதமே நேர்ந்திராது. அங்கஹீனமும் ஏற்பட்டிராது.



ஆயின் அன்று போலீஸ்காரர் தேளுக்கு மணியம் கிடைத்த நிலையில் இருந்தனர். தொண்டர்களை வரம்பின்றி அடித்து நொறுக்கி, அவர்களது ஆர்வத்தைக் குலைப்பதே அவர்களின் குறிக்கோளாக இருந்தது. இதை அனைவரும் அறிவர். ஆனால் திருப்பூரில் நடந்த தடியடிப் பிரயோகமோ தனித்தன்மை வாய்ந்தது. அது பழி வாங்கும் போக்குக்கொண்டது.

எனவே திருப்பூர் போலீஸார் தொண்டர்களை அடித்து நொறுக்கினர். திருப்பூரின் மண் வாக்கே அப்படி எதிலும் உச்ச வரம்பை எட்டச்செய்யும் என்பதை முன்பே விளக்கியிருக்கிறேன் அல்லவா? புகழ் பெறுவதில் உச்ச நிலை பெற்றதுபோல், திருப்பூர் மண் போலீஸ் நிதானம் தவறி நடந்து கொண்ட செயலிலும் உச்ச வரம்பைத் தாண்டி விட்டது. வெறி நாயை அடிப்பதுபோல் அடித்தனர். பேய் அடித்தது என்பார்களே, அப்படி குரூரமாக அடித்தனர். பலசாலியான சலவைத் தொழிலாளி கனமான கதர் பீஸ் ஒன்றைத் தூக்கி அடித்து வெளுப்பதைப் பார்த்திருக்கிறீர்களா? அது மாதிரி அடித்தார்கள். இது பற்றிய வர்ணனை இதோடு போதும் என்று நிறுத்திக் கொள்ளுகிறேன்.

படுகளத்தே சமர் புரிவோர் தமது பகைவரின் பாசறையை முதலில் கைப்பற்றுவர். இது அவர்களின் எதிர்ப்பு சக்தியை ஒடுக்குவதற்காம். கோட்டை கொத்தளங்களை முற்றுகையிட்டுப் பிடிப்பார்கள். இது பகைவரை முற்றிலும் நிர்மூலமாக்கு

வதற்காம். சட்ட மறுப்புப் போரை எதிர்க்க முனைந்த போலீஸார் நமது தொண்டர் வசமிருந்த தேசீயக் கொடிகளைப் பிடுங்கி எறிவதையே தமது முதல் வேலையாகக் கருதிச் செய்து வந்தனர்.

எனவே கொடி தாங்கி முன் சென்ற குமாரசாமி மீதுதான் அந்த முப்பத்து இரண்டு போலீஸ் காரரின் முனைப்பும் குவிந்தன. ஆகவே முதலடி குமரனுக்கே விழுந்தது. அதுவும் ராக்ஷஸ அடியாக விழுந்தது. ஐம்பது கஜ தூரத்திலிருந்து பாய்ந்து வந்த வேகத்தோடு வேகமாகக் கொடுத்த அடி யல்லவா அது! ஆதலின், இடதுபுறம் காதுக்கு நேராக அவரது மண்டை பிளந்துவிட்டது. மேலும் மேலும் அதே இடத்தில் பல அடிகள் விழுந்தன. எனவே மண்டை பிளந்த இடத்தில் சுமார் இரண் டங்குல நீளமும் ஒன்றரை அங்குல அகலமும் உள்ள மண்டை ஓடு துண்டாகி, இடம் விட்டுப் பெயர்ந்து, தலை மயிரைப் பற்றிக்கொண்டு செங்குத் தாக எழுந்து நின்றது. மற்றொரு அடி அதன்மீது விழவே, அது இரணத்தை ஊடுருவிக்கொண்டு சுமார் இரண்டரை அங்குல ஆழம் சென்று, மூளைக் குள் பதிந்துகொண்டது. இதனுல் மூளை செயல் அற்றுப்போயிற்று.

ராக்ஷஸ அடிகள் விழுந்த காலத்திலும் வீரக் குமரன் நிலைதவருது நின்றிருந்தார். மூளை செய லற்றுப் போனவுடன் வேரற்ற மரம்போல் மண் ணில் சாய்ந்துவிட்டது மாபெரும் அவ்வீரனது



சடலம். அந்த நிலையிலும் தேசீயக் கொடியை அவரது வலக்கரம் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு இருந்தது! அவரது கொடிப்பற்றை என்னென்று கூறுவேன்? அவரது நாட்டுப்பற்றை எவ்வாறு புகழ்வேன்? அப்படி அவர் கொடியைப் பற்றிக் கொண்டிருந்தது போலீஸ் சேவகர்களுக்குப் பிடிக்க வில்லை. ஆதலால் பலவந்தமாக அதனைப் பிடுங்கி எடுத்து வீசி எறிந்தனர்.

*

## 13. போலீஸாரின் மிருகச் செயல்.

வீரக்குமரனுடன் முன்னணியில் ஜோடியாக நின்றவர் திரு. R. ராமன் நாயர் என்பவர். இவர் ஒரு பண்பட்ட அரும் தொண்டர். கோவை நகரில் 1930 — 31-ஆம் ஆண்டு நடந்த சட்ட மறுப்பு இயக் கங்களில் கலந்து கொண்டு, ஏற்கனவே போலீஸ் தடியடி பட்டுச் சிறை சென்று வந்தவர். அச்சமயம் அவர் மண்டை கிழிய பலமான அடிபட்டுப் பிழைத் தவர். திருப்பூரில் குமரனுடன் நின்ற பொழுதும் இவருக்கு முன்னர் மண்டை கிழிய அடிபட்ட அதே இடத்தில் பல அடிகள் விழுந்தன. அதுதவிர மார்பின் இடதுபுறம் ஹிருதயத்திற்குப் பக்கத்தில் பலத்த அடி விழுந்ததால், அங்கு விலா எலும்பு ஒன்று முறிந்துவிட்டது. எனவே இவரும் நினைவு இழந்து, நிலைதவறிக் கீழே விழுந்து விட்டார்.

வீரக்குமரனும் தீர ராமனும் நடுத்தெருவில் நினைவு தவறி, உயிரற்ற சவங்களைப்போல் ரத்த வெள்ளத்தில் கிடந்தனர். அவர் இருவரின் நிலை கண்டால் கொடும் பேயும் சற்று இரக்கம் காட்டும். ஆனால் மானிட உருத்தாங்கி விலங்கென நடந்து கொண்ட போலீஸ் வீரர்களின் இதயத்தில் ஈர மில்லை. தங்கள் பூட்ஸ் காலால் அவ்விருவரையும் மிதித்துத் துவைத்தனர்.

வீரர்களின் தேகத்திலிருந்து உதிரம் ஒழுகிக் கொண்டிருந்தது. மிதித்து மிதித்துத் துவைத்த தால் அவர்கள் உடல் எங்கும் ரத்தக்கரை ஏறி, கோரக் காட்சியளித்தது. இதைக்கண்டு எவ்வாறு போலீஸ் சேவகர்கள் சகித்தனரோ! மனிதரிலே மனிதர் உண்டு; மனிதரிலே மிருகம் உண்டு; மனி தரிலே நாய் நரி பேய் கழுகுகளும் உண்டு.

இரத்த வெறி பிடித்த புலி பசுவைப் பிடித்துக் கடித்துக் கடித்து உறுமும். காட்டுப் பூனை எலியைக் கௌவிக் கடித்துக் கீழே வீசும். மீண்டும் கௌவிக் கடித்துக் கீழே போட்டுக் களிப்புடன் நோக்கும். தான் இரை கொள்ளும் எலியை இவ்விதம் பன் முறை கௌவிக் கடித்துச் சித்திரவதை செய்யும். வெறி பிடித்த போலீஸ் சேவகரின் மிருகப் பிராய மான இக்கொடும் செயலுக்கு இதைவிட வேறு என்ன உவமை கூறுவேன்?

இனி ஏனைய தொண்டர்களின் கதியைப் பார்ப் போம். குமரனையும், ராமனையும் குமைந்த பின்



ஏனைய தொண்டர்கள் மீது தலைக்கு மும்மூன்று சேவகர் வீதம் ஏவப் பெற்றனர். அந்த ஏவல் பிறந்த உடன் தம் பிடியில் சிக்கிய தொண்டர்களை கையும் மனமும் சலிக்கும் வரையில் நையப் புடைத்து, "சட்ட மறுப்பா செய்ய வந்தீர்கள்? சத்தியாக்கிரகமா புரிய வந்தீர்கள்? அங்கே பார் இரண்டு பேர் செத்துக் கிடப்பதை. உங்களுக்கும் அதே கதிதான்" என்று கூறிக்கொண்டே காலையும் கையையும் பிடித்து இழுத்துக் கொண்டுபோய் சந்து பொந்துகளில் வீசி எறிந்து விட்டுத் திரும்பினர். இவ்விதம் ஒன்பது தொண்டர்களில் இருவர் நினைவு இழந்து, குத்துயிர் குலையுயிராகக் கிடந்தனர். எஞ்சியுள்ள எழுவர் உதிரம் கசிய சந்து பொந்து களில் துடித்துக் கொண்டிருந்தனர்.

அந்த ஒன்பது தொண்டர்களுக்கும் தலைமை தாங்கி வந்த என்னை சேவகர்கள் அதுவரையில் அணுகவில்லை. எங்கும் குழப்பமே மிகுந்த நிலையில் என்னை நோக்கி வந்த இரண்டொரு சேவகரும் என்னைக்கண்டு விலகிச் சென்று விட்டனர்.

*

## 14. கணுக்கணுவாக முறித்தல்.

தொடக்கத்தில் இவ்விதம் போலீஸ் சேவகர்கள் என்னைத் தாக்காமல் விட்டது ஏன்? அவர்கள் இழைத்த குரூரச் செயல்களை நான் நன்றாகக் காண

வேண்டும் என்பதற்காகவா? 'உனக்கும் இதே கதிதான் நேரப் போகிறது' என்று எனக்கு எச்சரிக்கை செய்வதற்காகவா? என்ன நினைத்து அவ்வாறு நடந்து கொண்டார்களோ, அதை ஈசனே அறிவார். ஆனால் அது ஒரு வகையில் நன்மையாகவே முடிந்தது.

ஆரம்பத்திலேயே என்னை அடிக்கத் தொடங்கி இருந்தால், போலீஸ் சேவகரின் பேயாட்டத்தையும், தொண்டர்களின் கதியையும், அவர் அச்சமயம் காட்டிய தீரத்தையும் சகிப்புத் தன்மையையும் அடியேன் அறிந்து வர்ணித்திருக்க முடியாது.

என்னை மட்டும் அடிக்காமல் விட்டுப் பின் சிறைப்படுத்துவது என்பது அவர்கள் கருத்தாயிருக்குமோ என்றுகூட எனக்கு எண்ணத் தோன்றியது. அந்த அகந்தையான எண்ணம் என் மனதில் தோன்றி மறையுமுன் போலீஸ் தலைமை அதிகாரி என் மீது பாய்ந்தார். என்னைத் தம் கையாலேயே புடைக்க வேண்டும் என்பது அவரது எண்ணம் போலும். தொண்டர் படையில் இருந்த ஒன்பது நபர்களையும் அடித்துத் துவைத்த பின்னர், சாவகாசமாகத் தமது போலீஸ் படையின் முழு பலத்தையும் ஒன்று திரட்டி என் மீது ஏவத் திட்டமிட்டிருந்தார் என்று நம்பத் தோன்றியது அனைவரும் என் மீது பாய்ந்தபொழுது.

ஏனைய சேவகர்களும் சேர்ந்து என்னை அடித்தனர் என்றாலும், என்னைச் சித்திரவதை செய்ததில்



பெரும் பங்கேற்றுக்கொண்டு இயங்கியவர் போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் மகமது என்பவரே. என்னை அடித்துக்கொண்டு இருக்கையிலேயே அவரது வாய் ஓயாமல் உறுமிக்கொண்டே இருந்தது.

'சட்ட மறுப்பா செய்யத் தொண்டர்களை அழைத்து வந்தாய்? ஜாக்கிரதை! இது பிரிட்டிஷ் ராஜ். உங்கள் காந்தியைக் கட்டிச் சிறையில் தள்ளியாயிற்று. இனி அவர் அங்கேயே கிடந்து மடிய வேண்டியதுதான். மீண்டும் வாலாட்ட அவரை வெளியே விடப்போவதில்லை. ஆங்கில அரசை எதிர்க்கவா துணிந்தாய்? போடுகிறேன் பார் அந்தப் பிரசங்கம் செய்யும் உன் வாயின் பேரில் இரண்டு' என்று கூறிக்கொண்டு அடித்தார். 'தாலூக்கா முழுவதும் கள்ளுக்கடை மறியல் நடத்தித் தொல்லை கொடுத்தது நீ தானே. இதோ அந்தக் கையையும் காலையும் முறிக்கிறேன் பார்' என்று சீறிக்கொண்டு அடித்தார்.

அப்பேயடி தாளாமல் என் இரு கால்களின் எலும்புகள் முறிந்துவிட்டன. அதனால் நிற்க முடியாமல் வீழ்ந்துவிட்டேன். வீழ்ந்தவனைத் தூக்கிப் பிடித்துக்கொள்ளச் செய்து மீண்டும் மீண்டும் அடித்தார்.

தொண்டர் படைத் தலைவனை என்னையும் குமரனைப்போல், ராமனைப்போல் நொறுக்கித் தீர்க்கவே அவர்கள் எண்ணினார்கள். ஆனால் அவர்கள் இருவரையும்விட எனக்குப் பன்மடங்கு அதிக அடி

விழுந்ததையும், அதிக இடங்களில் எலும்பு முடிவுற்றதையும் அந்த அடித்துக்கொண்டு இருந்த வெறியர்கள் உணரவில்லை. ஆனால் எல்லாவற்றையும் மேற்பார்வையிட்டுக் கொண்டிருந்த ஒரு போலீஸ் அதிகாரி இதனை நன்கு உணர்ந்துவிட்டார் போலும். அவர்தாம் 'சரி, போதும். அடிப்பதை நிறுத்துங்கள்' என்று உத்திரவிட்டுத் தடுத்தார். அவர் அந்த உத்திரவு கொடுக்காதிருந்தால் என் நிலை யாதாகி இருக்குமோ? ஆண்டவனே அறிவார். வீரக்குமரனை முந்திக்கொள்ள அல்லது பின்பற்ற எனக்கு பாக்கியம் கிடைக்கவில்லை. இது உளம் கலந்த உரை.

✳

## 15. மருத்துவசாலையில் மரண நிலை.

அப்பால் போலீஸார் என்ன செய்தார்கள் தெரியுமா? தங்கள் அளவு மீறிய செயலை மூடிவைக்கவும், மக்களின் மனதில் மாறுபட்ட எண்ணத்தை யூட்டவும் தீர்மானித்தனர். நாங்கள் போலீசாரை எதிர்த்துக் கல்லால் அடித்ததாகவும், இதனால் எழுந்த பொதுஜனக் குழப்பம் கட்டுக்கு அடங்காமற் போனதாலேயே தடியடி செய்து, எங்கள் மூவரையும் கைது செய்து, சிகிச்சைக்காக மருத்துவசாலைக்கு அனுப்பி, அங்கு எங்களை காவலில் வைத்ததாகவும் வழக்கு ஜோடித்துக் கொண்டனர்.



ஒரு காலி பஸ் தருவிக்கப்பட்டது. அதில் ஒரு விறகு வண்டியின் பேரில் விறகுக்கட்டைகளைத் தூக்கி எறிவதைப்போல் எங்கள் மூவரது சடலங்களையும் தூக்கிப் போட்டுக்கொண்டு சர்க்கார் மருத்துவசாலைக்குப் போனார்கள். அச்சாலையின் தாழ்வாரத்திலே எங்கள் உடல்களை அலட்சியமாக இறக்கிப் போட்டனர். நினைவு தப்பிய நிலையில் இருந்த குமரனுக்கும், ராமனுக்கும் பஸ் ஏற்றி இறக்கிய செயலின் தன்மையால் வேதனை ஏற்பட்டு இருந்தாலும், அது அவர்களுக்குத் தெரியாது போயிற்று. ஆனால் உடல் முழுவதும் கண்டதுண்டமாக நொறுக்கப் பெற்றும், நினைவு இழக்காதிருந்த எனக்கோ அவ்வேதனை தாங்க முடியாததாக இருந்தது.

குமரன், ராமன், நான் ஆகிய மூவரை மட்டும் மருத்துவசாலைக்கு எடுத்துப்போயினர். தெருச் சந்துகளில் எறியப்பட்ட மற்ற ஏழு தொண்டர்களையும் போலீஸ் அதன்பின் கண் எடுத்துப் பார்க்கவில்லை. போலீஸார் தலத்தை விட்டகன்ற பின்னர் அத்தொண்டர்களின் உற்றாரும், மற்றோரும் விரைந்து சென்று, அவர்களை எடுத்துப் போய் ஆவன செய்தனர்.

அதுசமயம் திருப்பூர் சர்க்கார் மருத்துவசாலையில் பிரதம வைத்திய அதிகாரியாக இருந்தவர் உத்தமப் பண்புகள் நிறைந்த திரு. கோபால மேனோன் என்பவராவர். இவர் மருத்துவத் தொழி

வில் ஒரு மேதாவி, சஸ்த்திர சிகிச்சையில் கை தேர்ந்தர். ஆயிரக்கணக்கான நபர்களின் துயரைத் தமது சஸ்த்திர சிகிச்சையின் திறனல் தீர்த்து வைத்தவர். மேலும் அவர் ஒரு நல்ல கைராசிக்காரர். வைத்தியத் தொழிலை உயர்ந்த பொதுநலப்பணியெனக் கருதி நடத்தி வரும் பண்புடையவர்.

அத்தகைய டாக்டர் கோபால மேனேன் அவர்களே எங்கள் மூவரையும் கவனிக்க வந்தார். குமரனது நிலேயே மிக மோசமாக இருந்ததைக் கண்டார். உடனே குமரனைப் பரிசோதித்துப் பார்த்தார். அவரது முகத்தில் கவலைக்குறிகள் தோன்றின. தம்முடன் இருந்த கௌரவ டாக்டர் ரங்கநாதனை விளித்து, 'இந்த நபரின் நாடி தளர்ந்துவிட்டது. அளவு கடந்து ரத்தம் சேதமாகிவிட்டதே இவர் நலிவுக்குக் காரணம். மற்றும் இவரது மண்டை சிதறியிருக்கிறது. அந்த ரணத்தின் வழியாக மூளைக்குள் ஏதோ ஒன்று புகுந்து கொண்டிருப்பதைக் காண்கிறேன். அதை அகற்ற வேண்டும். அவ்வாறு செய்தால்தான் இவரைப் பிழைக்க வைக்க முடியும். ஆனல் இந்த நபரின் இப்போதுள்ள தேக நிலை அத்தகைய சஸ்திர சிகிச்சையைத் தாங்காது. ஆதலால் இன்று முழுவதும் இவரைப் படுக்கையில் கிடத்தி, யாரும் தொந்திரவு செய்யாதிருக்கும்படி கவனித்துக்கொள்ளுங்கள். பரிபூரண ஓய்வு தேவை. கவனமிருக்கட்டும்' என்று கூறி எச்சரித்தார். உடனே குமரனைத் தாழ்வாரத்திலிருந்து வைத்தியசாலைக்குள் எடுத்துச் சென்றனர்.



பின்னர் ராமன் நாயரைப் பரிசோதித்தார். அவரது உடை முழுவதும் ரத்த வெள்ளத்தில் புரண்டதால், ரத்தம் தோய்ந்து பார்ப்பதற்கு பயங்கரமாகத் தோற்றமளித்ததே தவிர, அவருக்கு உயிருக்கு ஆபத்தான அம்சம் யாதும் இல்லை யென்று கண்டார். இதயத்திற்கு அருகில் விழுந்த அடிகளால், அங்கு ஒரு விலா எலும்புதான் முறிபட்டிருந்தது. இதயம் யாதொரு விதத்திலும் பாதிக்கப்படவில்லை. தலையில் பட்ட அடியால் மண்டையில் பெரிய கிழிவு ஏற்பட்டிருந்தது. அது மூளையைப் பாதிக்கவில்லை. எனவே ரணமும், முறிவும் கண்ட இடங்களில் விரைவில் கட்டுகள் போட்டு, அவரையும் உள்ளே எடுத்துப்போய் படுக்கையில் அமர்த்தினர்கள்.

பின்னர் எனது நிலையைக்கண்ட டாக்டர் மலைத்துவிட்டார். பெரிதும் கவலை தெரிவித்தார். ஏன் எனில் என்னுடைய உடலிலே கை கால்கள், இடுப்பு, முதுகு முதலிய பல இடங்களில் மொத்தம் பத்தொன்பது எலும்பு முறிவுகள் ஏற்பட்டிருந்தன! அவை அனைத்திற்கும் கட்டுகள் போட வேண்டும். அதற்கு அத்யாவசியமான சாதனங்கள் அச்சமயம் வைத்தியசாலையில் கையிருப்பில் இல்லை.

கட்டுகள்போட சிம்புகள் வேண்டும். அந்தந்த உருப்புகளுக்கு ஏற்றபடி அந்த சிம்புகள் செதுக்கப்

பட்டு இருக்க வேண்டும். ஆனுல் அவைதான் கிடைக்கவில்லை. எங்கிருந்தோ ஒரு கள்ளிப் பெட்டியை வாங்கிவந்து உடைத்து, அதன் பலகைகளைத் தேவையான அளவுகளில், வடிவங்களில் அறுத்துச் செதுக்கினுர்கள் வைத்தியசாலை சிப்பந்திகள். பிணம் அறுக்க உபயோகித்துவந்த தச்சுக் கருவிகளைக் கொண்டே இவ்வளவும் செய்யப்பட்டன. இவ்விதம் தயாரிக்கப்பட்ட சிம்புகளைக் கொண்டே ஒருவாறு கட்டுகளைக் கட்டி, குமரன் கிடத்தப்பட்டிருந்த இடத்திற்கு எதிரில் என்னைக் கொண்டுபோய்க் கிடத்தினர்.

"இப்பொழுது குளிர்காலம். ஆதலால் எலும்புகள் முறிந்து ரணமேற்பட்ட இடங்களில் சீழ் பிடித்துக் கொள்ளக்கூடும். சுரம் உண்டாகலாம். இசிவு தாங்க முடியாத காரணத்தால் ஜன்னியும் தோன்றலாம். அதோடு எலும்பு முறிவு பெற்ற உருப்புக்கள் அசையாமல் இருத்தல் வேண்டும். இன்றேல், எலும்புகள் கூடுவதில் தாமதம் ஏற்படும். விபரீத விளைவுகளும் உண்டாகலாம். உதாரணமாக ரத்தத்தில் விஷம் தோன்றிப் பரவி, அதைத் தடுக்க கை கால்கள் எதையேனும் வெட்டி அகற்ற நேரிடலாம். இந்த அனர்த்தங்கள் ஏற்படாதிருக்க வேண்டுமானுல், இவரை இரவு பகல் வித்தியாசமில்லாமல் சர்வ ஜாக்கிரதையாகக் கண்காணித்து வரவேண்டும். இவ்வளவும் சரிவரச் செய்தால்தான் இவரைக் காப்பாற்ற முடியும். இன்றேல் இவர் பிழைப்பது சந்தேகமானதே" என்று தமது சக



டாக்டரிடம் கூறி வருத்தப்பட்டாராம் டாக்டர் கோபால மேனுன். அதோடு என்னைக் கண்காணித்து வரும் பொறுப்பை யாரிடம் ஒப்படைக்கலாம் என்பது பற்றி தீவிரமாகச் சிந்தித்தாராம். இதை அவரே நான் பிழைத்து எழுந்த பின்னர் ஒருநாள் என்னிடம் விளக்கமாகக் கூறினுர்.

*

## 16. தாயும் சேயும்.

அன்று காலையில் நான் வீட்டை விட்டுப் புறப்பட்ட பொழுது, நான் சட்ட மறுப்பில் கலந்து கொள்ள நேரிடும் என்று கருதவில்லை. எனவே அதைப்பற்றி நான் என் தாயாரிடம் அறிவிக்கவில்லை.

ஆனுல் விரைவில் சட்ட மறுப்பில் நான் கலந்து கொண்டு அடிபட்ட தகவல் என் தாயாருக்கு எட்டிவிட்டது. அடிபட்ட இடத்தில் இருந்து சுமார் ஒரு மைல் தூரத்தில் என் குடியிருப்பு இருந்தது. அந்தத் தாயின் இதயத்தில் தன் சேயைக் காண ஏற்பட்ட வேதனை அந்த ஒரு மைல் தூரத்தையும் சுமார் ஐந்து நிமிடங்களுக்குள் கடந்துசெல்லும் வேகத்தைத்தந்தது. அத்தனை வேகத்தில் ஓடி வந்தார். அந்த இடம் ஒரே ரத்தக்காடாகக் காட்சி அளித்தது. ஆனுல் அங்கு யாரும் காணக்கிடைக்கவில்லை. மலைத்துப் போனுர். செய்வது இன்னதென்று தோன்ருமல் திகைத்து நின்ருர்.

சந்து பொந்துகளில் இழுத்தெறியப்பட்ட மற்ற தொண்டர்களை எடுத்துப்போவதில் முனைந்திருந்த அன்பர்களில் சிலர் அது கண்டு, விஷயத்தை விளக்கி, அவரை வைத்தியசாலைக்குப் போக வழி காட்டினர். அவருக்குத் திருப்பூரில் வழியா தெரி யாது? ஓடினார் மீண்டும் ஒரு மைல் ஆஸ்பத்தி ரியை நோக்கி.

வைத்தியசாலையின் பிரதான வாசல் பூட்டிக் கிடந்தது. அதைச் சுற்றி ஜனத்திரள் நிரம்பி நின்று, எட்டி எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தது. பெரும் பாடுபட்டு அனைவரையும் விலக்கிக்கொண்டு முன்னேறி, வாசல் கதவைப் பிடித்துக்கொண்டு தம்மை உள்ளே அனுமதிக்கும்படி மன்றாடிக் கொண்டிருந்தார்.

அதுசமயம் காலம் சென்ற விட்டல்தாஸ் சேட் என்ற குஜராத்தியப் பிரமுகரும், அச்சமயம் திருப் பூர் முனிசிபல் சேர்மெனாக இருந்த திரு. K. R. ராயப்ப கவுண்டர் அவர்களும் அங்குள்ள தாழ்வா ரத்தில் வைத்தியசாலை சிப்பந்திகளுடன் கலந்து நின்று கொண்டிருந்தனர். எனவே அவ்விருவரும் என் தாயாரை அடையாளம் கண்டு கொண்டு, அவரை மட்டும் உள்ளே அனுமதிக்கும்படி டாக்ட ரிடம் வேண்டுகோள் தெரிவித்தனர். ஆனால் டாக் டர் தயங்கினார். அவரை உள்ளே அச்சமயம் அனு மதிக்கக்கூடாது என்பது அவர் கருத்து. ஏன் எனில் கட்டுகள் போடுவதற்கு முன் உடலெங்கும்



எலும்பு முறிவுற்று ரத்தக்கறை படிந்திருந்த நிலை மையில் என்னைக்கண்டால், பெற்ற மனம் பற்றி எரியும்; அலறி அழச் செய்யும். அத்தகைய தாயின் பரிதாப நிலைமையைக் கண்டால் நான் இடிந்து போவேன். என் உயிருக்கு ஆபத்து நேரும் என் பவை போன்ற காரணங்களே டாக்டர் என் தாயை உள்ளே அனுமதிக்க மறுக்கச் செய்ததாம்.

பின்னர் பன்முறை வாதாடி சேட்ஜி என் தாயை என்னிடம் அழைத்துவந்து விட்டார். டாக் டரும் மற்றேரும் எதிர்பார்த்து இருந்தபடி என்னைக் கண்டவுடன் என் தாயார் அலறித் துடிக்கவில்லை. கண்கலங்கிக் கதறவில்லை. செயலற்றுப்போகவில்லை. மூர்ச்சித்துக் கீழே விழவில்லை!

அதற்கு மாறாக அமைதியாக என் முன் அமர்ந்து, என் தலை, கன்னங்களைத் தடவிக் கொடுத்தார். என் புண்களையெல்லாம் ஊர்ந்து கவனித்துக் கணக்கிட்டுக்கொண்டார். பின்னர் "அப்பா, மகனே! உன் கடமையை நன்றாகச் செய்து முடித்தாய். எனக்கு அதுகண்டு திருப்தியே ஏற்படுகிறது. கவலைப்படாதே. தைரியமாக இரு. வலியைப் பொறுத்துக்கொள். பகவான் எல்லாம் தாங்கிக் கொள்வார். அவர் அருளால் விரைவில் நீ குணமடைந்து, பிழைத்துக்கொள்வாய். காந்திஜிக்கு நான் அளித்த வாக்கைக் காப்பாற்றிவிட்டாய். அவர் ஆசியால் விரைவில் எல்லாம் நன்றாக முடியும்" என்று கூறி என்னைத் தேற்றினார்.

அதைக்கேட்ட நான் அகமகிழ்ந்தேன். அதோடு என் உடல் வலியும் மாயமாக மறைந்தது. தெம்பு ஏற்பட்டது. முகத்தில் களை கட்டியது. இதை ஊன்றிக் கவனித்துக்கொண்டிருந்த டாக்டரும் விட்டல்தாஸ் சேட்டும் ஏக காலத்தில் "பலே, பேஷ்! நல்ல வீரத்தாய் !! கருத்துடன் சுந்தரத்தைக் கவனித்துக்கொள்ள இவரே ஏற்றவர்" என்று கூறி மகிழ்ந்தனர். என்னைக் கவனித்துக் கொள்ளும் பணி இவ்விதம் என் அன்னைக்கே கிடைத்தது. விரைவில் என்னுடன் பிறந்த சகோதரன் B. S. சடகோபன் அங்கு வந்து சேர்ந்து, அன்னையுடன் சேர்ந்துகொண்டு உழைத்தான். அவ்விருவரும் எனக்குச் செய்த சேவைகளை நான் மறக்கவே முடியாது.

நான் வைத்தியசாலையில் தங்கியிருந்த 108 நாட்கள் கொண்ட ஒரு மண்டல காலத்தில், ஒரு தடவைகூட என் தாயார் என் பொருட்டு கண் கலங்கி அழுதது கிடையாது. என் உயிருக்கு ஆபத்து நேர்ந்து விடுமோ என்று அஞ்சும்படியான நெருக்கடி நிறைந்த நாட்களில்கூட என் ஆருயிர் அன்னை மனங்கலங்கவில்லை. எனக்குப் பணிவிடை செய்ததில் நிதானம் தவறவே இல்லை. அதுகண்டு டாக்டர் கோபால மேனன் அவர்களே பேராச்சர்யப்பட்டார். தமது மனதாரடே அந்த வீரத் தாயைப் போற்றிப் புகழ்ந்தார்.



சுமார் 3½ மாத சிகிச்சைக்குப் பின்னர் அங்கிருந்தபடியே என்னைச் சிறைக்கு அழைத்துச் சென்றனர். அன்று டாக்டரிடம் விடை பெற்றுக் கொள்ளுமுன் அவருக்கு நன்றி தெரிவித்து, உபசார வார்த்தைகள் கூறினேன். அவற்றை அவர் ஏற்றுக்கொள்ள மறுத்துக் கூறினர் :- "இதோ, பார் சுந்தரம்! நீ பிழைத்து எழுந்ததற்குக் காரணம் உன்னைப் பெற்றெடுத்து நல்ல முறையில் உருவாக்கிய உன் வீரத்தாயின் மனவலியும், அவரது சீரிய பணிவிடையுமே என்பதை நீ அறிவாயாக. எனது சிகிச்சையால் மட்டும் நீ உயிர் பிழைத்து விடவில்லை. இந்த வீரத்தாய் ஸ்ரீமதி லட்சுமி அம்மாளின் திடமனதும், தீரம் நிறைந்த பாராட்டுதலுமே உன்னைக் காத்துப் பிழைத்து எழச்செய்தது. இது வெறும் உபசார மொழியல்ல. என் கண் கண்ட உண்மை".

அவ்விதம் கூறி வருகையில் டாக்டரின் நா தழதழத்தது. நயனங்களில் ஆனந்தக் கண்ணீர் சுரந்தது. கரங்கள் என் அன்னையை நோக்கிக் குவிந்தன. அவரது உணர்ச்சியின் வேகத்தையும், என் அன்னையின் பேரில் அவருக்கு ஏற்பட்ட மதிப்பையும் எவ்வாறு வர்ணிப்பேன்? என் அன்னை 12—9—1958-ல் தமது 72-வது வயதில் காலமாகி விட்டார். அவரது இறுதி நாட்களில் கருத்துடன் வைத்திய உதவி செய்து, அவரைப் பிழைக்க வைக்கப் பெரும் பிரயத்தனம் செய்தவர் இதே

டாக்டர்தான். ஆனல் காலத்தை யாரால் மாற்ற முடியும்? காலம் சென்ற சேட்ஜியும் தமது இறுதி நாள் வரையில் சமயம் கிடைத்த பொழுது எல்லாம் தமது நண்பர்களிடம் என் தாயாரின் புகழ் பாடுவதை நிறுத்தவே கிடையாது. பெற்ற தாயின் பேரன்புக்கு ஈடேது? அவரது அன்பை உச்ச பக்ஷம் அனுபவித்த என் பாக்கியமே பாக்கியம்.

*

## 17. குமரன் அமரனனது.

அன்று (அதாவது 10—1—1932) இரவு நடு நிசி வரையில் நான் மெய் மறந்து தூங்கினேன். பின்னர் எனக்கு விழிப்பு ஏற்பட்டது. என் முன்னே கிடத்தப்பட்டு இருந்த குமரனின் சடலம் காலையில் போட்டது போட்டபடியே சலனமற்றுக் கிடந்தது. அதுகண்டு உளம் பதைத்தேன். "என்ன, இன்னும் அவருக்கு நினைவு தோன்றவில்லையா? உடனே ஓடி டாக்டரை அழைத்து வாருங்கள்" என்று கூறினேன்.

"ஈசா! யாவும் உன் செயல்!" என்று ஆண்டவன் பேரில் பாரத்தைப் போடுவதைத் தவிர எனக்கு வேறு ஒன்றும் தோன்றவில்லை. என் உடல் நோயை நான் மறந்து குமரன் நிலைகண்டு ஏங்கினேன்; துடித்தேன். அப்பொழுது அங்கு



வந்த டாக்டர் நான் அவ்வாறு துக்கப்படக்கூடாது என்று கருதி, எனக்கு மயக்க மருந்தை ஊசி முனையில் ஏற்றி நான் மீண்டும் தூங்கிப்போகும்படி செய்தார்.

எனினும் விரைவில் கண் விழித்தேன். என் முன் குமரனது தேகத்தில் அசைவு தோன்றியது ஏதேதோ வார்த்தைகள் அவர் வாயில் இருந்து கிளம்பின. அதுகண்டு அவர் அருகில் குழுமி இருந்த உற்றார் உறவினரில் இருவர் விரைந்து சென்று, மீண்டும் டாக்டரை அழைத்து வந்தனர். அகால வேளை என்பதைப் பொருட்படுத்தாமல் அந்த உத்தம டாக்டர் கூப்பிட்டபொழுதெல்லாம் விரைந்தோடி வந்தார். இரவில் இரண்டாம் முறையாக டாக்டர் வந்தபொழுது அதிகாலை 4 மணி இருக்கும். குமரனைப் பரிசோதித்தார். அது அவர் இறுதிக்காலம் என்பதை உணர்ந்தார். குமரனது மரண வேதனையை நான் காணக்கூடாதென்பது அவரது கருத்தாகும். எனவே குமரனை வேறு ஒரு தனி அறைக்கு மாற்றிவிட்டார்.

அதன் பின் என்னிடம் வந்து "ஏன் அவ்வளவு விரைவில் விழித்துக்கொண்டாய்" என்று கேட்டார். ஆதரவாகப் பேசினர். சஸ்திர சிகிச்சை செய்து குணப்படுத்தவே குமரனை அதற்குரிய இடத்திற்கு

எடுத்துக்கொண்டு போனதாகக் கூறினர். குமரனைப் பற்றி அப்பொழுது அவர் சொன்னது கலப்பற்ற பொய். என்ன செய்வார், பாவம். எனக்கு அதிர்ச்சி யேற்பட்டு மரணம் நேராதிருக்கச் செய்வது அவரது நோக்கம். அச்சீரிய நோக்கம் நிறைவேறு வதற்காக அவ்வாறு பொய் சொன்னர்.

அவர் ஊசி மூலம் என் உடலில் செலுத்திய மருந்து வேலை செய்யத் தொடங்கியது. நான் மீண்டும் தூங்கி வழிந்தேன். "நல்லது, நீ தூங்கு. நான் குமரனைக் கவனித்துக்கொள்ளுகிறேன். அவன் பிழைத்தெழும்படி செய்வது என் பொறுப்பு. கவலைப்படாமல் நீ தூங்கு" என்று ஊக்கி, தூங்க வைத்தார்.

மறுநாள் (11—1—1932) காலை 10 மணிக்கு நான் கண் விழித்தேன், "குமரன் எப்படியிருக்கி ருர்? சஸ்திர சிகிச்சை செய்துவிட்டார்களா? டாக் டர் என்ன சொல்லுகிருர்? குமரன் பிழைத்துக் கொள்வாரு? என்று கேட்டேன். சத்திய சந்த ரான என் தாயாரே அதற்குப் பதில் சொன்னர். "ஆம் குமரனுக்கு சஸ்திர சிகிச்சை முடிந்துவிட்டது. அடுத்த அறையில் குணமடைந்து வருகிருர்" என்று அறிவித்தார். பின்னர் அச்சொல் என் தாய் தம் நெஞ்சாரச் சொன்ன பொய்யுரை என்று அறிந்தேன். ஆனல் அவர் பதில் சொன்ன பொழுது, அதை நம்பி அமளிக்கு நடுவில் நிம்மதி



யுடன் படுக்கையில் கிடந்தேன். உண்மை என்ன வென்ருல், என் ஆருயிர் குமரன் அச்சமயம் உயி ருடன் இருக்கவில்லை. என் பார்வையிலிருந்து அப்புறப்படுத்தப்பட்ட சிறிது நேரத்திற்கெல்லாம் அவரது ஆவி பிரிந்துவிட்டது. அவர் அமரராகி விட்டார். சஸ்திர சிகிச்சை செய்யப்படவே இல்லை.

சஸ்திர சிகிச்சை செய்யவேண்டிய நேரத்தில் தான் டாக்டர் உயிர் அற்ற அவரது தேகத்தை அறுத்துப் பரிசோதனை நடத்திக்கொண்டிருந்தார். எனக்கு விரைவில் இது தெரிந்துவிட்டது. எவ் வளவு நேரத்திற்கு உண்மையை மறைத்து வைக்க முடியும்? குமரன் இறந்தது கேட்டுப் படுக்கையில் இருப்புக் கொள்ளாமல் துடித்தேன். என் உடல் நடுங்கியது. உள்ளம் ஒடுங்கியது. என்ன செய் வேன்?

எனது மனத்துயரை அறிந்த என் தாயார் எனக்கு எவ்வளவோ சொல்லி, ஆறுதல் அளிக்க முயன்ருர். நண்பர் ராமன் நாயரும் பல பல சொல்லி, என் துயர் தீர்க்கப் பிரயத்தனப்பட்டார். அதுசமயம் நாயரின் கரங்கள் விலங்கிடப்பட்டிருந்த தைக் கண்டேன். வெலவெலத்தேன். திடுக்குற் றேன். அவரைக் காரணம் என்னவென்று கேட் டேன். "சுவாமி! நம் மூவரையும் கைது செய்து கொண்டு வந்து, சிகிச்சைக்காக இங்கு ரிமேண்டில் வைத்திருக்கின்றனர். அதோ போலீஸ்காரர் பாரா

செய்து வருவதைப் பாருங்கள்" என்று பதில் கூறினர்.

"நாயடி அடித்து, நம்மை குத்துயிராக்கி, இங்கு கொண்டுவந்து போட்டது போதாது என்று கருதி கைதும் செய்துள்ளாரா? சரி அதிருக்கட்டும். கைகளில் விலங்கு எதற்கு? எங்கள் ராமன் நாயர் சிறை செல்ல விரும்பாது ஓடி ஒளியக்கூடியவரா?" என்று வியப்புடன் வினவினேன், அங்கிருந்த ஒரு போலீஸ் சேவகரை நோக்கி.

"ஐயா! இந்த ராமன் நாயரை மட்டும் அல்ல, உங்கள் மூவரையுமே கைகால்களில் விலங்கிட்டே இங்கு வைத்திருக்கும்படி எங்களுக்கு உத்திரவு வந்துள்ளது. உங்கள் மூவரில் ஒருவர் இந்த விலங்கு போடவே அவசியம் இல்லாதபடி வேறு உலகம் சென்றுவிட்டார். உங்கள் உடம்பிலோ டாக்டர் கட்டுகள் போடாத இடமே கிடையாது. எனவே உங்களுக்கு எந்த இடத்தில் இந்த விலங்கைப் போடுவது என்றே எங்களுக்கு விளங்கவில்லை. ஆதலின் உங்களுக்குப் பூட்டவேண்டிய விலங்கை இதோ பத்திரப்படுத்தி வைத்திருக்கிறேன் பாருங்கள்" என்று கூறித் தன் சட்டைப்பையில் இருந்த விலங்கை எடுத்துக் காட்டினர். இந்த விநோதத்தை அனுபவித்து, வாய்விட்டுச் சிரித்தார்



## 18. அமரனது அடக்கம்.

குமரன் அமரன் ஆகிவிட்டார். அவரது ஆன்மா தங்கியிருந்த உடலை அறுத்துச் சோதனை செய்தனர். எதற்காக? என்ன உண்மை கண்டறிய?

ஊர் அறிய, உலகம் அறிய, உண்மையின் வடிவான ஆண்டவன் அறிய, போலீஸாரால் அடித்துக் கொல்லப்பட்டார் குமரன். அவரது சாவுக்கு அந்த அடிகளே நேர் காரணம். இந்நிலையில் சவப் பரிசோதனை ஏனோ! அர்த்தமற்ற சட்ட விதிப்படி இந்த சவச் சோதனை செய்வது ஒரு சடங்காகி விட்டது போலும்.

11—1—1932-ஆம் தேதி பகல் 1 மணி வரையில் சவச்சோதனை நடந்தது. அதன் பின்னரே குமரனது உடலத்தை உறவினரிடம் ஒப்படைத்தனர். ஒரு ஈரிழை துப்பட்டியால் தூளி ஒன்று செய்து, அதில் குமரனது சவத்தைக் கிடத்தி, ஒரு மூங்கில் கழியை அத்தூளியில் நுழைத்து, இருவரே அதனைத் தூக்கிச்சென்றனர் மயானத்திற்கு.

நடந்தது இது. இப்படியிருக்க, "குமரனது சடலம் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது. அப்பொழுது தெருவெல்லாம் மக்கள் நிறம்பி நின்று, மலர் தூவி மரியாதை செய்தனர். அமரனுக்கு அஞ்சலி செய்தனர்" என்று மாபெரும் கூட்டங்களில் பிரபல பேச்சாளர்கள் பேருரை

நிகழ்த்தியதை என் காதாரக் கேட்டிருக்கிறேன். அத்தகைய வர்ணனை வெறும் கற்பனையே அன்றி உண்மை அல்ல.

குமரனது உடலத்தை ஊர்வலமாக எடுத்துச் செல்லவில்லை. இருவரே தூளி கட்டித் தூக்கிச் சென்றனர். சென்றதும் ஜன நடமாட்டம் அதிகம் இல்லாத சந்து–பொந்துகளின் வழியாக. அன்றியும் குமரனது சடலத்தை எடுத்துச் சென்ற நேரத்தை மக்களுக்கு அறிவிக்காமல், மறைத்து வைத்திருந்னர்.

எங்கள் மூவரையும் வைத்தியசாலையில் ஒப்படைத்துவிட்டுத் திரும்புங்கால், போலீஸ் அதிகாரி திருப்பூர் நகரின் பிரதான வீதிகளில் பெரும் அட்டகாசம் செய்துவிட்டார். தெருவில் வீடு அல்லது கடைகள் தோறும் பரக்கவிட்டு இருந்த தேசீயக் கொடிகளைப் பிடுங்கி எறிந்தார். சுவர்களில் மாட்டப் பட்டிருந்த தேசத் தலைவர்களின் படங்களை அகற்றி உடைத்துப் போட்டார். கதர் அணிந்து கொண்டிருந்த அனைவரையும் அடித்துத்திட்டினர். முன்னர் ஸ்தல ரயில் நிலையத்தில் உதவி ஸ்டேஷன் மாஸ்டராக இருந்து, பின்னர் உப்புச் சத்தியாக்கிரக காலத்தில் அப்பதவியை உதறிவிட்டு எளிய கதர்த் தொண்டராகப் பணி ஆற்றி வந்த திரு. சிதம்பரம் அய்யர் என்பவரை நொய்யல் நதி வாராவதிக்கு அருகில் கை, கால் ஒடியும்படி கடுமையாக அடித்துப்



போட்டார். காந்திக் குல்லாய் அணிந்திருந்த குற்றத்திற்கே திரு. சிதம்பரம் இவ்விதம் குமையப் பட்டார்.

இத்தகைய சூழ்நிலையில் குமரனது இறுதி யாத்திரையும் பிரதான வீதிகளில் ஆடம்பரமாக நடந்திருந்தால் — மக்களும் அதில் பல்லாயிரக் கணக்கில் கலந்துகொண்டு இருந்தால், அந்தப் போலீஸ் அதிகாரி அதைக்கண்டு வாளா இருந்து விட விரும்புவாரா ?. அதைத் தடுக்க முற்பட்டு இருப்பார். மனம் வெதும்பிக்கிடந்த திருப்பூர் பொதுமக்கள் அச்சமயம் வீறுகொண்டு எழுந்து போலீசை எதிர்க்க முற்பட்டிருக்கலாம். ஆனல் எல்லாம் ஈசன் செயல். அத்தகைய கலவரம் ஏற்பட்டு திருப்பூரின் நற்பெயருக்குக் களங்கம் ஏற்படாமல் ஈசனே தடுத்தார் என்பது என் துணிவு.

அந்தோ ! அந்தோ !! திருப்பூர் குமரன், வீரக் குமரன், தியாக வீரன், அன்னையின் பணியில் ஆருயிரை வழங்கிய வள்ளல், போலீஸ் தடியடிக்கு உயிரைப் பலிகொடுத்த உத்தமன் அனாதையைப் போல் எடுத்துச் செல்லப்பட்டு, இடுகாட்டில் இரண்டொரு சுற்றத்தாரே சூழ்ந்து நிற்க அடக்கம் செய்யப்பட்டார் !

அன்று வீரக் குமரனது புகழ் பாடப்படவில்லை. பேசவும் பெறவில்லை. இன்றோ தமிழகமே ஒரு

முகமாக அவரது புகழைப் பாடுகின்றது. பெருமிதம் அடைகின்றது. அவரது தியாகத்தை எண்ணி ஆவேசம் அடைகின்றது. கோஷமும் போடுகின்றது. அரசியல் மகாநாடுகளின் பந்தல்களிலும் சங்கங்களின் சுவர்களிலும் அவரது திரு உருவம் தாங்கிய படங்களை மாட்டி, மலர் மாலை சூட்டி மக்கள் மகிழ்வு எய்துகின்றனர். அன்று அவர் அடிபட்டு விழுந்த தெருவின் பெயரை "குமரன் ரோடு" என்று திருப்பூர் மக்கள் மாற்றிவிட்டனர். அதன் மேற்குக் கோடியில் ரயில் நிலையத்திற்கு எதிரில் குமரன் ஞாபகார்த்த பூங்காவும் ஸ்தூபியும் சென்னை அரசினரால் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

கரூர் குமரன் வாலிப சங்கத்தார் பெரும் தொகை செலவு செய்து, அவரது சிலை ஒன்று செய்வித்து, அதனை அந்த நகரின் நான்கு பிரதான வீதிகள் சந்திக்கும் இடத்தில் அமைத்துள்ளனர்.

மேலும், தமிழ்நாடு முழுவதும் அவரது திருநாமம் தாங்கிய சங்கங்கள் பல தோன்றி, பொது நலப் பணிபுரிந்து வருகின்றன. இவ்வளவு ஏற்றமும் எதற்காக? குமரன் என்ற பெயர் தாங்கி நம்முடன் சின்னாள் வாழ்ந்த சோபையற்ற அந்த பூத உடலுக்கா? அல்லது அவரது வடிவம் தாங்கித் திகழும் படங்களுக்கா? அன்று! அன்று !! எல்லாம் அவர்புரிந்த தேச சேவைக்கே! தியாகத்திற்கே!!

மேலும் ஒரு விஷயம். போலீஸ் சேவகர்கள் குமரனை அடித்துக் கொன்றனர் என்பதே தத்துவ



ரீதியாக சரியானதல்ல. அவரது முடிவிற்கு போலீஸ் தடியடி ஒரு நிமித்தமாக இருந்ததே தவிர, அதுவே முழு முதற்காரணமாக இருந்தது என்று சொல்ல முடியாது. ஆண்டவன் சித்தம் அவ்வாறு இருந்தது. அதன் உட்பொருளை யாரே அறிய வல்லார்!

முன்னர் நிகழ்ந்த பாரதப் பெரும் போரில் சர்வ லக்ஷணமும் வாய்ந்த ஆரான் என்னும் வீரனைப் பலி கொடுத்தார்களாம். அதன் பின் பஞ்ச பாண்டவரின் அபிமானம் அனைத்தையும் ஒருங்கே பெற்ற அபிமன்யூ என்ற வீரனைப் பலி கொடுத்தே பாண்டவரை ஊக்குவித்தார் பகவான் என்று வியாச பகவான் எழுதி வைத்துள்ளார். அஃதே போல் சத்தியாக்கிரகப் போரில் முழு மூச்சுடன் தமிழ்நாடு குதிக்க வேண்டும் என்பதற்காகவே குமரனை முதல் பலி கொடுக்க ஈசன் எண்ணினர் போலும்! எனவே போலீஸ் தடியடி என்பது ஒரு நிமித்தமேயாகும். இது காரணம் பற்றியே போலீஸார்மீது நாம் பகைமை பாராட்டக் கூடாது என்று சத்தியாக்கிரக விதி கூறுகிறது.

திருப்பூரில் குமரன் மாபெரும் தியாகம் செய்தார். அதனால் அவரது பெயர் புகழ் அடைந்ததோடு, அந்தத் தியாக பூமியாகிய திருப்பூருக்கும் பெரும் கியாதி ஏற்பட்டுள்ளது. எனவே அவ்வீரத் தியாகியை இன்று திருப்பூர் குமரன் என்றே தமிழ் மக்கள் ஒருமுகமாக அழைக்கின்றனர்.

## 19. குமரனின் பிறப்பு, வளர்ப்பு.

வீரக்குமரன் எங்கே பிறந்தார்? எங்ஙனம் வளர்ந்தார்? எவ்வாறு வாழ்ந்தார்? அவரது குடும்பம் எப்படி? இவைபோன்ற விவரங்களை வாசகர்கள் அறிய விழைவது இயல்பே. அதே போல் அறப்போரில் துணிந்து இறங்கும்படி அவரைத் தூண்டியது யார் அல்லது எது? இன்று குமரன் குடும்பத்தவர் எந்த நிலைமையில் இருக்கிறார்கள்? இத்தகைய தகவல்களையும் வாசகர்கள் அறிய விரும்புவார்கள். எனவே அவற்றைத் திரட்டி வெளியிடுகின்றேன். இதில் காணப்படும் தகவல்கள் அனைத்தும் அவரது தாய், சகோதர சகோதரிகளிடமிருந்தே கேட்டுத் தெரிந்துகொண்டவை ஆதலால் முற்றிலும் சரியான விவரங்களேயாம்.

கோயமுத்தூர் ஜில்லா ஈரோடு தாலூக்காவில் சென்னிமலை என்பது ஒரு சிறு நகரம். அது குன்றின்மீது சுப்ரமணிய சுவாமி எழுந்தருளியுள்ள விசேஷ சிவஸ்தலங்களில் ஒன்றாகும். அங்குள்ள பரம்பரை மக்கள் செங்குந்த மரபைச் சேர்ந்தவர்கள். குமரக் கடவுளின் நவ வீரரது வழியில் தோன்றியவர்கள். ஆதியில் அம்மரபினர் 'செங்குந்தம்' என்ற ஈட்டிப்படை தாங்கி வீரம் விளைவித்து வந்தனர். அதன்பின்னர் நிகரற்ற நெசவுத் தொழிலை மேற்கொண்டனர். தமிழில் மறைபாடி, அழியாப் புகழ் பெற்ற திருவள்ளுவ முனிவர் மேற்கொண்ட தொழிலல்லவா? பாவம் ஏதுமற்ற புனிதத் தொழில்.



அதுமட்டுமா? மாந்தரின் உடல் மானத்தை மூட அத்தொழில் இன்றியமையாதது. எனவே மக்கள் பணியுமாகும் நெசவுத் தொழில்.

சென்னிமலையில் இத்தகைய செங்குந்தர் மரபில் ஒரு ஏழைத் தறிக்காரர் குடும்பத்தில் 1904-ம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் பிறந்தார் நம் குமரன். அவ்வீரனைப் பெற்றெடுத்த பாக்கியவதியின் பெயர் திருமதி கருப்பாயி அம்மாள். தந்தையின் பெயர் திரு. நாச்சிமுத்து முதலியார். இவருக்குப் பெற்றோர்கள் இட்ட பெயர் குமாரசாமி என்பதாகும். அதுவே அவர் விடுதலைப்போரில் ஈடுபட்டு அமரன் ஆனபின் "குமரன்" என்று மாறிவிட்டது.

சென்னிமலை போர்டு உயர்நிலைப்பள்ளியில் சேர்ந்து, ஐந்தாவது வகுப்பு வரையில் படித்தார் நமது குமாரசாமி. அதற்குமேல் படிக்க வைக்க பெற்றவரின் ஈன வரும்படி இடம்தரவில்லை. எனவே பள்ளிப்படிப்பை முடித்துக்கொண்டு ஈரோடு நகருக்குக் காவிரி நதியின் அக்கரையில் உள்ள பள்ளிபாளையத்திற்குச் சென்று, தமது தாய் மாமன்களான திரு. சொக்கலிங்க முதலியார், திரு. காளியப்ப முதலியார் என்பவருடன் தங்கியிருந்து, நெசவுத் தொழில் பயிற்சி பெற்றார். மதியூகமும், மட்டற்ற சுறுசுறுப்பும், தொழிலில் பற்றுதலும் கொண்டவராக இருந்ததால், குமாரசாமி அதிவிரைவில் தொழிலைக் கற்றுக்கொண்டு, பட்டுச் சேலை நெய்வதில் நிபுணர்களில் ஒருவராகத் திகழ்ந்தார்.

பின்னர் தமது சொந்த ஊரான சென்னிமலைக்கே திரும்பி, தொழில் செய்து பிழைத்து வந்தார்.

1923-ம் ஆண்டில் தமது 19-வது வயதில் திரு மதி ராமாயி அம்மாள் என்ற 14 வயதே நிரம்பிய இளம் பெண்ணை மணந்து கொண்டு இல்லற வாழ்க்கையைத் தொடங்கினர். ஆனல் வாழ்க்கைச் செலவுக்குத் தேவையான வருமானம் நெசவுத் தொழிலில் கிட்டவில்லை. பாவமற்ற தொழில் லாப மற்றதாக மாறிவந்ததை உணர்ந்தார். இவரது பெற்றோர் இக்காரணம்பற்றியே தமது மக்களை அத் தொழிலை நீத்து, பஞ்சு நூல் வியாபாரம், ஜவுளி உற்பத்தி, சாய அச்சுப்பட்டறை முதலியவற்றை நடத்தி வந்த வர்த்தக ஸ்தாபனங்களில் வேலை தேடிக்கொண்டு பிழைக்குமாறு தூண்டிவந்தனர். எனவே குமாரசாமியும் அவரது சகோதரர்களும் ஈரோடு, திருப்பூர் முதலிய நகரங்களில் குடியேறி னர்கள். குமாரசாமிக்கு ஈரோடில் வேலை கிடைக்க வில்லை. எனவே திருப்பூர் போனர். அங்கு ஓ. கே. எஸ். அண்டு ஈ. ஆர். ஆர். என்று விலாசம் வைத் துக்கொண்டு வெகு பிரபலமாகப் பஞ்சு வியாபாரம் செய்துவந்த திரு. சென்னியப்ப முதலியார், திரு. ரங்கசாமி கவுண்டர் என்ற கூட்டு முதலாளிகள் குமாரசாமிக்கு வேலை கொடுத்து ஆதரித்தனர். அவர்களது பஞ்சு அரைக்கும் தொழிற்சாலையில் 'டேலி கிளார்க்' எனப்படும் எடைப்பதிவு குமாஸ்தா வேலையையே குமாரசாமி ஆரம்பமுதல் இறுதிவரை யில் செய்துவந்தார். அது கடினமான வேலையல்ல.



ஆனல் மிகப் பொறுப்பான வேலை. முதலாளிகள் கொள்முதல் அல்லது விற்பனை செய்யும் பருத்தி, பஞ்சு முதலியவற்றை எடை போடும்போது ஸ்தா பனத்தின் பிரதிநிதியாக நின்று, எடைகளைச் சரி பார்த்துப் பதிந்து கொள்ளவேண்டும். இந்த எடைப்பதிவு வேலையில் ஈடுபட்டுள்ளவர் தெரிந்தோ தெரியாமலோ ஒரு சிறு தவறு செய்துவிட்டாலும் அது முதலாளிகளுக்கு நஷ்டத்தை விளைவித்து விடும். எனவே முதலாளிகள் முற்றிலும் நம்பிக் கைக்குப் பாத்திரமான தமது உறவினர்களையே அந்த வேலையில் அமர்த்துவது வழக்கம். நல் ஒழுக்கம் உடைய நபர்களையும் அந்த வேலைக்கு நியமிப்பதுண்டு.

சோதனையும் பொறுப்பும் நிரம்பிய அந்த வேலையை 1925-ம் ஆண்டு முதல் 1931-ம் ஆண்டு முடிய சற்றேரக்குறை ஆருண்டு காலம் நன்ருகச் செய்து, முதலாளிகளின் நன்மதிப்பைப் பெற்ருர் குமாரசாமி. இவ்வாறு ஈராண்டு காலம் சென்னி மலையிலும், ஆருண்டு காலம் திருப்பூரிலும் இல்லறம் நடத்தி வந்தாராயினும், குமாரசாமிக்கு மக்கட்பேறு கிடைக்கவேயில்லை. தமிழகம் முழுவதும் தனிப் பெருமையும், புகழும் எய்தப்போகும் குமாரசாமிக்கு மக்கட் செல்வம் எதற்கு என்று ஈசன் கருதினர் போலும்!

குமாரசாமி மெய்யான தெய்வபக்தியுடையவர். பள்ளிப்படிப்பு அதிகம் கிட்டாதவராயினும் தாமே

பல தமிழ் நூல்களை ஓதியுணர்ந்தார். தமிழ்மறை பாடிய திருவள்ளுவ நாயனர், சைவ சமயத்தை நன்கு உரமிட்டு வளர்த்த திருநாவுக்கரசு நாயனர் போன்ற தெய்வப் புலவர்களின் அறநெறிகளை உள் ளன்புடன் கற்றுத் தேர்ந்தார். தேவாரம், திரு வாசகம் போன்ற பக்திப்பாடல்களை இசையோடு பாடிக்கொண்டே நெசவு செய்வது இவரது வழக்கம். தமது வீட்டிற்குப் பக்கத்திலிலுள்ள காமாக்ஷி யம்மன் கோவிலில் சனிக்கிழமை தோறும் பஜனை செய்யும் பழக்கத்தை ஏற்படுத்தி, அதை நடத்த ஒரு கோஷ்டியையும் தயார்ப்படுத்தினர். அந்த பஜ னையை இன்றுவரை அவரது நண்பர் காளியப்ப முதலியார் என்பவர் தொடர்ந்து நடத்தி வருகிறர்.

பிறவியிலேயே குமரன் ஒரு உத்தமர். கால மெல்லாம் கருத்துடன் காந்தி மகானின் போதனை களைக் கற்றறிந்து, அவற்றைப் பின்பற்றியே தம் வாழ்க்கையை நடத்தி வந்தார். சுருங்கச் சொல்ல வேண்டுமாயின், இவரை ஒரு கர்மயோகி என்றே கூறலாம். இது உபசார மொழியல்ல. உண்மை உரை.

தமிழகத்தே பிறந்து, தமிழரின் தனிப்பண்பை நன்குணர்ந்த எவருக்கும் காந்தி மகானின் போத னைகள் புதுமையாகத் தோன்ரு. பல்லாண்டு பல் லாண்டுகளாக தெய்வ பக்தியையும், தமிழ் இலக்கி யத்தையும் ஒருங்கே இணைத்து வளர்த்து வந்தனர் நமது தெய்வப் புலவர்களும், சமயக்குரவரும்.



எனவே அவர்கள் உபதேசித்தும் தாமே அனுஷ் டித்துக் காட்டியும் வந்த அறநெறிகளே தாம் காந்தி போதகமாகத் திகழ்கின்றன. எனவே நம் உள்ளத் தில் உறைந்து, உணர்ச்சியில் ஒன்றிவிட்ட தனிப் பெரும் தமிழரின் நாகரீகத்தின் சாரமேதான் காந்தி மகானின் போதனைகள் என்பது பல அறிஞர்களின் கருத்து. குமாரசாமியும் அதையேதான் சொல்லிக் கொண்டிருந்தார். ஆதலினுல்தான் காந்தீய முறை களில் அவருக்கு அத்தனை பற்றுதல் ஏற்பட்டது போலும். திருப்பூரில் வந்து குடியேறிய நாள் தொட்டு அவர் எப்பொழுதும் சுத்தக் கதரே அணிந்துவந்தார். நாள்தோறும் கைராட்டையில் நூலும் நூற்று வந்தார். தமது வாழ்க்கைத் துணை வியையும் அவ்வாறே செய்யத்தூண்டி, வெற்றியும் கண்டார்.

உத்தியோகத்தில் குமாரசாமிக்குக் கிடைத்து வந்த ஊதியம் ஒரு சிறிதேயாம். ஆனல் நெசவுத் தொழிலில் அவர் அடைந்து வந்ததைவிட வருவாய் அதிகமாகத்தான் இருந்தது. எனினும் நகர்ப்புறத் தில் வாழ்க்கை நடத்த அவர் வருமானம் போதிய தாக இருக்கவில்லை. எனினும் சிக்கனமாக வாழ்க்கை நடத்திக்கொண்டு, வறுமையிலும் செம்மையாகவும் நேர்மையாகவும் இல்லறம் நடத்தி வந்தார்.

குமாரசாமிக்கு வீரத்தையும், தியாகத்தையும் யாரும் புகட்டவில்லை. இயற்கையிலேயே அவ்விரு பண்புகளும் அவரிடம் தோன்றி நீருபூத்த நெருப்.

பைப்போல் அடங்கியிருந்தன. உரியகாலத்தில் அவை வீறுபெற்றெழுந்து பரிமளிக்கலாயின.

1930-ம் ஆண்டு வேதாரண்யத்தில் தலைவர் ராஜாஜி அவர்கள் நடத்திய உப்பு சத்தியாகிருகத்தில் கலந்து கொள்ளத் துடித்தார் குமாரசாமி. பெற்றேரும், முதலாளிகளும் அதற்குச் சம்மதிக்கவில்லை. அதன் விளைவாக உப்பு சத்தியாகிருகத்தில் கலந்துகொள்ள குமாரசாமிக்கு முடியாமற் போய்விட்டது. அதற்காக உளம் வருந்தி, ஒருநாள் உபவாசம் இருந்து பிராயச்சித்தம் செய்துகொண்டாராம் குமாரசாமி. பின்னர் காந்தி-இர்வின் சமாதான காலத்தில் திருப்பூரில் நடைபெற்ற சாத்வீக மறியல்களில் கலந்துகொண்டு பணியாற்றினர். பட்டாசுக் கடையொன்றின்முன் இவ்வாறு மறியல் செய்துகொண்டிருந்தபொழுது, கடைக்காரர் வெஞ்சினம் கொண்டு இவர் முகத்தில் ஒரு பட்டாசுக் கட்டையே கொளுத்திப் போட்டார். குமாரசாமியின் முகமெல்லாம் பல தீப்புண்கள் ஏற்பட்டன. எனினும் மறியலைத் தொடர்ந்து நடத்தி வந்தார். குமாரசாமியின் குடும்பத்தினர் அன்று முதல் எக்காரணம் கொண்டும் எச்சமயத்திலும் பட்டாசு சுடுவதில்லை என்று சபதம் செய்துகொண்டு அதை நிறைவேற்றி வருகின்றனர். காந்தி—இர்வின் சமாதான காலத்தில் திருப்பூரில் நடந்த சாத்வீக மறியல்களை காங்கிரஸ் கமிட்டியுடன் இணக்கமாக நின்று வெற்றி பெற நடத்திக் கொடுத்தவர் திருப்பூர் தேசபந்து வாலிபர் சங்கத்து அங்கத்தினரே. குமாரசாமி அச்சங்கத்தில் சேர்ந்துகொண்டு செயலாற்றத் தொடங்கினர். பையப்பைய அவர் எதற்கும் துணிந்த ஒரு தேசத்தொண்டராக மாறிவிட்டார்.



எனினும் அறப்போரில் கலந்து கொள்ளும்படி குமாரசாமியை எவரும் தூண்டவில்லை. அதில் ஈடுபட்டே தீரவேண்டும் என்ற கட்டாயம் எதுவும் அவருக்கு ஏற்படவில்லை. அதற்கு மாருக சத்தியாகிருக முதல்படையில் சேர முயன்றபொழுது அவரது எண்ணத்தைக் குலைக்கவே முற்பட்டனர்.

"நீ போய்த்தான் சுயராஜ்யத்தைக் கொண்டு வரவேண்டுமோ? இந்த ஊரில் இதற்கு ஏற்றவர் வேறு யாரும் இல்லையா? காங்கிரசிலே பெரும் புள்ளிகளாக இருந்தவர்கள் அனைவரும் வாளயிருக்கையில் நீ ஏனடா பஞ்சை இதில் குதிக்கத் துடிக்கிருய்? வயிறு வளர்க்க வந்த இடத்தில் உனக்கேனடா சுயராஜ்யம் பெறுவதில் கவலை? போ, உன் வேலையைப் பார்த்துக்கொண்டு, சும்மா இரு" என்று கடிந்து கொண்டனர் உற்ருரும், நண்பர்களும்.

"உன் அப்பன் செத்து இன்னும் முழுசாக ஆறு மாதங்கள் கூட ஆகவில்லை. அதற்குள் ஆத்தாளையும், மனையாளையும் நடுத்தெருவில் நிறுத்திவிட்டு ஜெயிலுக்குப் போகிறேன் என்கிருயே! உனக்கு மதி கெட்டுப் போயிற்ரு? ஜெயிலுக்கு போகிருனும்—ஜெயிலுக்கு! ஏனடா உனக்கு ஜெயில்தான் கிட்டும் என்பது என்ன உறுதி? உயிரே போனுலும் போகு

மல்லவா? அப்பொழுது உன் தாயார், மனைவியின் கதி என்ன? அவர்களுக்கு ஆதரவு யார்? அவர்கள் பிழைப்பிற்கு ஏதேனும் வழிசெய்து வைத்திருக்கிறாயா? ஏனடா விழிக்கிறே, இந்த எண்ணத்தை விட்டுவிடு" என்று மீண்டும் எடுத்துக் கூறினர்.

பந்து மித்திரர்கள் இவ்விதம் இடித்துக் கூறியது கேட்டு குமாரசாமியின் மனம் மாறவில்லை. வைரம் போல் உரம் பெற்றுவிட்ட அவரது உள்ளம் இவற்றால் கலங்கவில்லை. மரம் வைத்தவன் தண்ணீர் வார்ப்பான். குலத்தொழிலில் பரம்பரையாகப் பழக்கப்பட்டிருக்கும் தாயும், மனைவியும் அதைச்செய்தே தம்மைக் காத்துக்கொள்வார்கள். தாம் சிறைப்பட்டாலும் சரி, செத்து மடிந்தாலும் சரி, அதற்காக அவர்கள் பட்டினி கிடந்து துயருற நேராது என்று திடமாக நம்பினார். அதையே பதிலாகக் கூறினார். ஆம், அது உண்மையே. நெசவாளர் குடும்பத்தைச் சேர்ந்த பெண்டிர் நிராதரவாக்கப்பட்டாலும், கண்ணியமாகத் தொழில் செய்தே பிழைத்துக் கொள்ள அவர்களது குலத்தொழில் இடம் தருகிறது.

எனவே முதல் கோஷ்டியிலேயே சேர்ந்துகொண்டு சிறை செல்வதோ, செத்து மடிவதோ, யாது நேரினும் சரி, என்பதே குமாரசாமியின் முடிவாயிற்று. அதை அறிந்ததும் பெற்ற மனம் பற்றி எரிந்தது. வயிறு உளைந்து அழுதார் கருப்பாயி அம்மாள். ஆசை மனைவி அதுசமயம் ஊரில் இல்லை.



ஏதோ அலுவலாகப் பள்ளிபாளையம் போயிருந்தார். அவர் அண்மையில் இருந்தால், அவரும் அழுது, ஆகாத்தியம் செய்து குமரனின் முடிவை மாற்ற முயன்றிருப்பார். அண்டை அயலார் ஏதேதோ சொல்லி அச்சுறுத்தினர். எள்ளி நகையாடினர் எதிர்கக்ஷிக்காரர்கள். ஆனால் குமரனது உறுதி தளரவில்லை. முடிவும் மாறவில்லை. சுதந்திர ஆர்வம் அவரது உள்ளத்தே ஊற்றெடுத்துப் பொங்கி வந்தது. அதனைத் தடுக்க வல்ல சக்தி யாருக்கும் ஏற்படவில்லை. அறப்போரில் இறங்கி, சாகவும் துணிந்து விட்டார் தலைசிறந்த அத்தியாகி. எனவே தம்மைத் தடுத்து நிறுத்த முயன்ற அனைவரையும் மீண்டும் மீண்டும் கெஞ்சி, ஆசிகூறி அனுமதிக்கும்படி வேண்டிக் கொண்டார். முடிவில் அவரது தீவிர ஆர்வம் கண்ட அன்னை முதல் அன்பர்கள் வரை அனைவரும் அகமகிழ்ந்து, உளம் கனிந்த நல்லாசியுடன் அனுமதியும் நல்கினர். அதன் பின்னர் குமரன் தம்மைத் தயார் செய்துகொள்ள முனைந்தார். அம்மன் கோவிலில தீ மிதிக்க விரும்புவோர் சில நியமங்களை மேற்கொள்வார்கள் அல்லவா? அதேபோல் அறப்போரில் இறங்குமுன் குமரனும் சில நியமங்களை மேற்கொண்டார். பக்தி சிரத்தையுடன் அவற்றைச் செய்து முடித்தார். மேலும் இயக்கத்தில் குதிக்கும் தினத்திற்கு முதல் நாளே அவர் வண்ணான், நாவிதன், காப்பிக்கடைக்காரன் போன்றோரின் பாக்கிகளை முழுவதும் செலுத்திக் கடனைத் தீர்த்துக் ,கொண்டார். பின்பு உற்றார், உறவினர் நண்பர்களைத் தனித்தனியாக அவரவர்

வீடுகளில் சந்தித்து, விஷயத்தைக்கூறி, சாஷ்டாங்க மாக நமஸ்கரித்து, அன்னவர் அனைவரிடமும் விடை பெற்றுக்கொண்டார். பாருங்கள் அவரது பண்பின் சிறப்பை!

*

## 20. வீரத்தின் வகைதுறை.

"தோன்றின் புகழொடு தோன்றுக" என்று தமிழ் மறை முழங்குகின்றது. பூதஉடல் நீத்துப் புகழ் உடல் கொண்டு துலங்கி வருகிறார் குமரன். எனவே அவர் இறந்தார் என்பது பிரமையேயாம். குமரன் என்ற நாமத்தைக் கேள்வியுறும் லட்சக் கணக்கான தமிழ் மக்கள் அவ்வீரனது தியாகத் தையே உருவகப்படுத்திக்கொண்டு, அதனையே குமரனைத் தம் மனக்கண்ணால் காண்கிறார்கள். போற்றிப் புகழ்கிறார்கள். துதித்துத் தொழுகி றார்கள். எனவே புகழ் வடிவான குமரன் இறக்க வில்லை. அவர் இன்றும் உள்ளார். என்றும் நம் கண்முன்னே காட்சி அளித்துக்கொண்டே இருப் பார். ஓர் உடலைத் துறந்த குமரன் இன்று பலபல உடல்களில் புகுந்துகொண்டு துள்ளி மிளிர்கிறார். புகழுடம்புக்கு மறைவு ஏது? ஒரு சிற்றூரிலே ஒரு சிலரே அறிய வாழ்ந்தவர் இன்று தமிழகம் அனைத் திலும் ஏன்! இந்தியா முழுவதிலும் உணர்ச்சி வடி விலே உலவி வருகிறார்.



ஆதலின் அவரது பூத உடல் மறைந்ததற்காக யாரும் வருந்தத் தேவையில்லை. தமிழகம் உள்ள வரையில், தித்திக்கும் தேமதுரத் தமிழ்மொழி உள்ள வரையில் வாழையடி வாழையாக குமரனது புக ழுடம்பு நின்று நிலவும். இளைஞர்களுக்கு நெறி காட்டிக்கொண்டு உலவும்.

குமரன் ஒரு தனி வீரர். வீரரைப் புகழ்ந்து போற்றுவது தொன்று தொட்டு எல்லா நாட்டிலும் காணப்படும் ஒரு பொதுப்பண்பாம். எதிலும் தெய் வாம்சம் பொருந்தியிருப்பதாகக் கருதப் பழகிவிட்ட நாமோ, வீரர்களை அவதார புருஷர்கள் என்றே மதிக்கிறோம். அவர்களுக்குக் கோயில்கள் கட்டிக் கும்பிடுகிறோம். இதிகாச வீரர்களான ராம-லக்ஷ் மணர், வீர-மாருதி, கீதாச்சாரியரான கிருஷ்ணர் போன்றோரே இதற்கு உதாரணமாவர். தர்மபுத்திரர் திரௌபதை முதலியோருக்கும் கோவில் கட்டி அன் னாரிடம் பக்தியுடன் பூசனை செய்கிறோம். இந்த இதி காச வீரர்களுக்கு நமது மனக்கோவிலும் மாறாத இடம் கொடுத்துள்ளோம். அன்னார் அனைவரும் நமது குல தெய்வங்களாகவும், உபாசனை மூர்த்தி களாகவும் மாறி நமது சித்தங்களில் நிலைபெற்று நிற்பது பிரசித்தம்.

நிற்க. சரித்திரகால வீரர்களை எடுத்துக்கொள் வோம். சத்திரபதி சிவாஜி, மேவார் நாட்டு ராணா பிரதாபசிம்மர், ஜான்ஸிராணி லக்ஷ்மிபாய், செஞ்சி வீரன் தேசிங்குமன்னன், வீரபாண்டிய கட்ட

பொம்மன், அவர்தம் அருமைத்தம்பி ஊமைத்துரை முதலிய வீரர்களுக்கு நாம் ஆலயங்கள் அமைக்க வில்லேயே தவிர, அன்னவரது வீரத்தையும், தியாகத்தையும் உணர்ந்து பரவசம் அடைவதில் எவ்விதக் குறைவும் காட்டவில்லை.

இந்நிலையில் ஒருவிஷயம் பற்றி சிந்தனைசெய்து பார்ப்போம். ஆங்காங்குள்ள கற்கோவில்களிலும், நமது மனக்கோவில்களிலும் நிலைபெற்று விளங்கும் இதிகாச கால வீரர்களும், சரித்திரகால வீரர்களும் அளவற்ற புகழ்பெற யாது செய்தனர்? என்ன சாதித்தனர்?

இதிகாசகால வீரர்களோ, நல்லோரைக் காக்கவும், தீயோரைத் தண்டிக்கவும் அரும்பாடுபட்டனர். பெரும் போரிட்டனர். சரித்திரகால வீரர்களோ என்ருல், பிறநாட்டாரிடம் சிக்கி அடிமையுற்று அல்லல் அடைந்த பாரதப் பெருநாட்டை விடுவிக்கவே வெஞ்சமர் செய்தனர். அவ்விருசாராரின் குறிக்கோள் ஒன்றேயாம். பரோபகார சிந்தனையுடன் தேசோபகாரக்கருத்தும் கலந்ததாகும். அவர்களது லக்ஷியம் ஒன்ருகவே இருந்ததுபோல் அவர்கள் கையாண்ட வழிமுறைகளும் ஒன்ருகவே இருந்தன. அவை கொடுமை நிறைந்தவை. மறவகையைச் சார்ந்தவை. படுகளத்திலே அளவற்ற அஸ்திர சஸ்திரங்களைக் கையாண்டு அவர்கள்தம் எதிரிகளைக்கொன்று குவித்தனர். ஈவு, இரக்கம் காட்டவில்லை. அதுமட்டுமா? தற்காப்புக்கென்றும்



தீயோரைத் துடைக்கவென்றும் அவ்வீரர்கள் தாம் உபயோகித்த ஆயுதங்களைப் பன்னுள் வருந்திச் சேகரித்தனர். நீண்டகாலம் மெய்வருந்தி உழைத்து அவற்றைப் பிரயோகிப்பதில் பயிற்சியும் பெற்றனர்.

அப்பயிற்சிபெற அவ்வீரர்கள் தேடிக்கொண்ட ஆசிரியர்களோ மகா புருஷர்கள். ராம-லக்ஷ்மணர்களை அருஞ்சமருக்கு அருகதையாக்கியவர் விசுவாமித்திர மாமுனிவர். பாண்டவர்களுக்கு வில்வித்தை போதித்தவரோ அன்று அக்கலையில் ஈடு இணையற்றவர் என்று கருதப்பட்ட துரோணுசாரியார். வீர சிவாஜியைப் படைத்தொழிலுக்குப் பழக்கியவர் ராமதாஸ் ஸ்வாமிகள் என்ற துறவி.

அந்த மகாவீரர்கள் அனைவரும் தத்தம் ஆசிரியர்களிடம் ஆயுதப் பயிற்சி மட்டுமா பெற்றனர்? ஆயுதங்களை வெற்றிகரமாகக் கையாள மந்திரோபதேசமும் பெற்றனராம். அதோடு பல மர்மமான அஸ்திரசஸ்திரங்களைக் கடும் தவமிருந்து 'தேவர்களிடமிருந்து பெற்றனராம். மேலும் அவ்வீரர்கள் அனைவரும் வழிவழியாகப் போர்த்தொழிலையே குலத்தொழிலாகக் கொண்டவர்கள். அரச வம்சத்தில் உதித்தவர்கள். பிறவியிலேயே வீரர்கள். எனவே அவ்வீரர்கள் ஆற்றிய அற்புதங்கள், சாதித்த காரியங்கள், புரிந்த போர்கள், விளைத்த வீரதீரம், செய்த தியாகம் முதலியவை வியப்புக்கு உரியன. அவர்களின் தூயசிந்தை வாழ்த்துக்குரியது. அன்னுரின் வாழ்க்கை விவரமும் அதிசயிக்கத்தக்கதே. ஆனுலும்,

அவர்கள் கையாண்ட முறை கொடுமையானது. அறத்திற்கு மாறுபட்டது. மறத்தைத் தழுவியது.

அரச தர்மத்திற்கு மறவழி இன்றியமையாதது என்று கருதினர் முன்னோர். அதனையே அனைவரும் ஒப்பினர்; கையாண்டும் வந்தனர்; இன்றும் அதே நிலைதான் காணப்படுகிறது. மேனாடுகள் ஒன்றை யொன்று விழுங்கவும் அழித்து ஆதிக்கம் கொள்ள வுமே சமயம் பார்த்து நிற்கின்றன. இரண்டு உலக யுத்தங்களின் காரணமாக ஏற்பட்ட சர்வநாசத்தை உணர்ந்தும் வல்லரசுகள் அறிவு பெறாமல் ஆயுதப் பெருக்கில் தமது அனைத்தையும் செலவிட்டு வருவ தைக் காண்கிறோம். இந்தச் சூழ்நிலையில் குமரன் வர்க்கத்தவரின் போர் முறையைப் பற்றிச் சிறிது ஆராய்வோம்.

சத்தியாக்கிரகத்தில் தம் இச்சையாகக் கலந்து கொண்ட வீரர்கள் யாரிடமும் பகைமை காட்ட வில்லை. அன்னிய ஆட்சியாளரிடமோ, அவர்களது கைக்கருவிகளாக இருந்த நம்மவர்களான அதிகார வர்க்கத்திடமோ, தம்மைக் குத்திக்குமைந்த போலீஸ் வீரர் அல்லது மதுபானக் கடைக்காரர்களிடமோ தேசத்தொண்டர்கள் வெறுப்புக்காட்டவே இல்லை. அவர்களைப் பகைவர்களாக மனதில்கூட நினைத்த தில்லை. அவர்கள் புரிந்த இன்னல்கள் அனைத்தை யும் இன்முகம் காட்டி ஏற்றுக்கொண்டு துயர் தாங் கிக் கொண்டனர். தம்மை வருத்தி வதைத்த நபர் களிடமும் அன்பைக்காட்டி அவர்களை நல்வழிப்படுத் தவே விழைந்தனர். 'இன்னா செய்தார்க்கும் இனி யவை செய்யவேண்டும்' என்ற பொய்யாமொழிப் புலவரின் போதனையை ஏற்று நடத்திக்காட்டினர். 'பரமபிதாவே! இவர்கள் தாம் செய்யும் காரியம் எத்தகையது என்று உணராமலே கொடுமை செய்து விட்டனர். எனவே இவர்கள் பிழையைப் பொறுத் தருளும்' என்று தம்மைச் சிலுவையில் ஏற்றியவருக் கும் பாவ மன்னிப்பருளும்படி ஏசுநாதர் வேண்டினா ரன்றோ! அதேபோல்தான் சத்தியாக்கிரகிகளும் நடந்து கொண்டனர்.



இந்த தேசத் தொண்டர்களில் மிகமிகப் பெரும் பாலோர் பரம்பரையாக சத்தியாகிரக தத்துவத்தை அறிந்தவர்களா? நெடுநாள் உழைத்து, அதில் நிலையான பயிற்சி பெற்றவர்களா? இவர்களுக்குத் தத்துவார்த்த போதனைகள் தரப்பட்டனவா? இவை அனைத்திற்கும் இல்லை என்றே பதில் கூற லாம். எனினும் எப்படியோ சத்தியாக்கிரக நெறி களை அறிந்துகொண்டதோடு, அதில் நிலைபெற்று நின்று, பிரமிக்கத்தக்க கட்டுப்பாடுடன் நடந்து கொண்டு, அளவற்ற சகிப்புத்தன்மை காட்டி, அறப்போரில் இறுதிவரை நிலைத்திருந்து, அப்புனித போர் முறைக்கே ஒரு தனி சோபையைத் தேடித் தந்தனர்.

அன்றுவரை உலகம் எத்தகையது என்றே அறியாதவர்களும், படிப்பு வாசனையற்ற பாமர மக்க ளும் பலர் அறப்படையில் இருந்தனர். அடுப்பூதிக்

கொண்டு வீட்டிலேயே அடைபட்டுக்கிடந்த அன்னை மார்கள் பலர் அதில் இருந்தனர். பாலர்கள் இருந் தனர். விருத்தர்களும் இருந்தனர். இவர்கள் அனைவரும் தேசபக்தர்கள். விடுதலை பெறுவதில் பேரார்வம் கொண்டவர்கள். உணர்ச்சி வசப்பட்டே படையில் சேர்ந்தனர். ஆனால் சேர்ந்தபின் வியக் கத்தக்கபடி செயல்பட்டுத் தியாகம் செய்தனர். தமது உடல், பொருள், ஆவி மூன்றையும் நாட்டுக் காக ஈந்து நற்பேறு பெற்றனர்.

*

## 21. சிறந்த லக்ஷியம், சீரிய வழிமுறை.

வீரக் குமரனும், அவரைப்போல் வீர மரணம் எய்தாவிடினும் நன்றாக உழைத்துப் போரிட்ட தேசத்தொண்டர்களும் சுயநலம் கருதி அறப் போரில் இறங்கவில்லை. பிறர் உடமையைக் கவரப் போர் புரியவில்லை. தேசத் தொண்டர்களின் லட்சி யமோ சிறந்த லட்சியமாம். பரந்து விரிந்த பற்றற்ற தொண்டாகும் அது. அன்னியரின் ஆதிக்கத்தில் இருந்து தமது தாய்நாட்டை விடுவித்து, சுயராஜ் யத்தை ஸ்தாபிப்பதே அவர்களது லட்சியம். அதனையே குறிக்கோளாகக் கொண்டு, அதனை அடைவதற்கு உழைப்பதையே தமது புனித கடமை யாகக் கருதிச் செயல் புரிந்தனர். துயர் தாங்கினர். செத்து மடிந்தனர் சிலர், எனினும் மற்றவர்கள் மலைப்புறுமல் மீண்டும் மீண்டும் எழுந்து நின்று உழைத்து வந்தனர்.



இத்தகைய தேசத்தொண்டர்கள் ஆற்றிய போரோ முற்றிலும் அறவழியை அடிப்படையாகக் கொண்டது. வாய்மையை ஆதாரமாகக் கொண்டது. தூய்மையைத் துணைப்படையாகக் கொண்டது.

எனவே அவர்களது லட்சியம் சிறந்ததாக இருந்தது. அதனை அடைய அந்த சத்தியாகிரகிகள் கடைப்பிடித்த வழி முறையும் சீரியதாக இருந்தது. காந்தி மகான் நமக்கும் அகில உலகத்திற்கும் அளித்த போதனைகளில் இதுவே தலைசிறந்த போதனையாகும்.

ஒரு புன்புறுவைக் காக்கவே சிபிச்சக்கரவர்த்தி துலைக்கோல் ஏறினர். தேவர்களின் வெற்றிக்காக ஒரு முனிவர் தமது முதுகெலும்பையே ஆயுதமாக உபயோகித்துக்கொள்ளும்படி கொடுத்து உதவினர். இவ்வரலாறுகளைப் புராணப் பொய் என்று கருது வோருண்டு. ஆனால் குமரனது தியாகத்தை மதித் துப் புகழாதவர் யாரும் இல்லை. தேச சேவையைக் கடமையாகக்கருதி உழைத்தார். தருணம் வந்த பொழுது தமது உயிரையே சுதந்திர தேவிக்கு பலி கொடுத்தார். உடலை அர்ப்பணித்தார். தமது உதிரத்தை வார்த்து இயக்கத்திற்கு உரமிட்டு வளர்த்தார்.

சீதா தேவியை ராவணன் தூக்கிச்சென்ற பொழுது ஜடாயு என்ற புள்வேந்தர் அவனை மறித் துப் போர் புரிந்தார். தமது ரத்தத்தைச் சிந்தி

அன்னையை மீட்க முயன்றார். "புகழினுக்கு உயிரை விற்றான்" என்று கம்பர் ஜடாயுவின் தியாகத்தைப் போற்றிப் புகழ்ந்துள்ளார். அவ்விதமே குமரனும் கடமைக்காக ரத்தம் சிந்தினர். அன்னையை விடுவிக்க உயிரை விற்றார்; உயர் புகழ் கொண்டார். கடமையைச் செய்; பலனைக் கருதாதே என்பது கீதா போதனைகளில் பிரதானமானது. பலனைக் கருதாமல்தான் பலர் விடுதலைப் போரில் இறங்கி உழைத்தனர். சுயராஜ்யம் தமது வாழுளில் கிட்டும் என்று கருதவில்லை பெரும்பாலோர். ஆனால் 1947–ம் ஆண்டு சுயராஜ்யம் உதயமானபொழுது பலர் அதைக்கண்டு களித்தனர். கர்மவீரன் குமரனுக்கு அந்த பாக்கியம் கிட்டவில்லை. ஆனால் அதை விடப் பன்மடங்கு பெரிய பரமபதம் கிடைத்தது அவருக்கு. வீரசுவர்க்கம் கிடைத்தது.

மரணம் என்பது இயற்கையில் நிகழும் ஒரு மாறுபாடே. ஒருவர் மரணம் அடைந்தால், அவரது உற்றாரும் பெற்றோரும் மனம் கசிந்து மறுகுவர். அவ்விதம் இயற்கை எய்தியோர் தத்தமது கர்ம வினைப்படி மீண்டும் மீண்டும் பிறப்பு இறப்பு என்ற சுழலில் சிக்கித்திரிவர். போர் முகத்தே வீரமரணம் அடைந்தோர்க்கு வீர சுவர்க்கமே கிடைக்கும். "வீரச் சாவு எய்தினோர் வினை அகன்று விழுப்பம் எய்துவர்" என்று திருக்குறள் இத்தகையோரின் மேன்மையை விளக்கிக் கூறுவதைக் கவனிக்க.

போர்க்களம் புகுந்தபின் வென்றுவருதல் அல்லது பொன்றி வீழ்தல் என்ற இரண்டில் ஒன்றையே



வீரர் விரும்புவர். சட்ட மறுப்புப் போரில் புகும்முன் குமரன் சிற்சில நியமங்களை மேற்கொண்டார் என்று முன் ஒரு பகுதியில் விளக்கியிருக்கிறேன். சுதந்திர தேவிக்குத் தம்மை அர்ப்பணிக்க வேண்டும் என்று முன்கூட்டித் திட்டமிட்டுக் கொண்டதாலேயே குமரன் அவ்வாறு நடந்துகொண்டார் போலும்!

சாதாரணமாக ஒருவன் இயற்கையெய்தும் பொழுது அவனது உற்றார் உறவினர், நண்பர்கள் கண்கலங்கி அழுவார்கள். சிறந்த லட்சியத்தைச் சீரிய முறையில் உழைத்துப் பெறமுயன்று, அந்த முயற்சிலேயே முடிவடைந்த குமரனைப் பெற்றதாய், மணந்த மனைவி முதற்கொண்டு சுற்றத்தார் யாரும் கண்கலங்கி அழவில்லை. அதற்குத் தேவையும் இல்லை. அதற்கு மாருக நாட்டு மக்கள் அனைவரும் ஒருமுகமாக அவரது வீரமரணத்தை நினைத்து ஊக்கம் பெற்று வருகின்றனர்.

வீரன் குமரனை ஈன்றெடுத்த பெருமாட்டி, கருப்பாயி அம்மாள் மொத்தம் ஏழு மக்களைப் பெற்றெடுத்தார். அவர்களில் இருவரே இன்று எஞ்சியுள்ளார்கள். குமரனது தந்தை தமது மைந்தரது வீர மரணத்திற்கு ஆறு மாதங்களுக்கு முன்பே (அதாவது 7—7—1931) காலமானர். தாயாரான புனிதவதி கருப்பாயி அம்மாள் தமது மைந்தன் திரு. நா. ஆறுமுகம் என்பவரின் ஆதரவில் ஈரோடில் தங்கியிருந்து, 1957–ம் ஆண்டு காலமாகிவிட்

டார்கள். திரு. ஆறுமுகத்தின் மைந்தர்களில் மூத்தவனுக்கு குமரன் என்றே பெயரிட்டுள்ளார்கள். அடுத்த பெண்ணுக்கு சுயராஜ்யம் என்று பெயர்.

*

## 22. முடிவுரை.

குமரனது தேவி திரு. ராமாயி அம்மாளுக்கு பந்துக்களும் அபிமானிகளும் ஈந்த பொருளைக் கொண்டு திருப்பூரில் ஓடைக்காடு என்ற பகுதியில் நல்ல வீடு ஒன்று கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. ஊணுக்கும் உடைக்கும் தட்டில்லாதபடி செய்ய அரசினர் அவர் பெயருக்கு நல்ல வளமுள்ள பூமியை கொடுமுடி நகருக்கு அருகில் மான்யமாக அளித்துள்ளார்கள். இத்தகைய மான்யம் குமரனைப்பெற்ற தாயார் கருப்பாயி அம்மாளுக்கும் கிடைத்துள்ளது.

திருப்பூரிலே 10—1—1932–ம் தேதி நடந்த சட்ட மறுப்பு கோஷ்டிக்குத் தலைமை வகித்து நடத்திக் கொடுக்கும் வாய்ப்பு எனக்கு அகஸ்மாத்தாகவே ஏற்பட்டதென்பதை விளக்கியிருக்கிறேன். அந்த கோஷ்டியைப் போலீசார் மூர்க்கமாகத் தாக்கிய விவரங்களை கண்ணால் கண்டவன் என்ற முறையில் உள்ளது உள்ளபடி இதில் எழுதியிருக்கிறேன். குமரன் வாழ்க்கையைப் பலபேர் பலவிதமாகப் பிரசாரம் செய்து வருகிறார்கள். ஆபாசமான முறையில் செய்திப்படமாகவும் ஒரு சினிமா ஸ்தாபனம்



வெளியிட்டுள்ளதாகக் கேள்விப்பட்டேன். விசாரித்ததில் திரைப்படமாக்கவும், அரங்கில் நடிக்கவும் அவ்விதம் மாறுதல்கள் செய்யப்படுவது அவசியம் என்று சமாதானம் சொன்னார்கள். சரித்திரத்தைத் திரித்துக் கூறுவது தகாது என்பதை மட்டும் கூறிவிட்டு, இந்த மனவேதனை தரும் விஷயத்தை முடித்துக் கொள்ளுகிறேன்.

குமரனைப்பற்றிய வரலாறுகளுக்கு இந்நூலே சான்று என்று கூறும் அகம்பாவம் எனக்கில்லை. எனினும் கூடியமட்டும் உழைத்துத் தேடிய தகவல்களும், நேரில் நானே கண்ட விவரங்களும் சேர்ந்திருப்பதால், இன்று இதுவே சரியான குமரன் சரிதம் என்று கூறுவதில் எனக்கு சங்கோசமில்லை.

குமரன் போன்ற உத்தமத் தொண்டர்கள் செய்த தியாகத்தால் சுதந்திரக் குடியரசு உதயமாகி விட்டது. ஜனநாயக முறையில் ஆட்சிமுறை ஏற்பட்டு அது ஸ்திரம் பெற்றுவிட்டது. நாம் சுதந்திரமடைந்த சமயத்தில் விடுபட்ட அண்டை, அயல் நாடுகளில் ஜனநாயகம் தழைக்கவில்லை. குழப்ப நிலையில் தத்தளித்து, ஊழல் என்ற சகதியில் உழைந்து, அவை பல இன்று ராணுவ எதேச்சாதிகாரத்தில் தளைப்பட்டுள்ளன. ஆனால் பாக்யவசமாக நம் நாட்டில் அத்தகைய அவகேடு ஏற்படவில்லை; என்றும் ஏற்படாது. ஏற்படவும் இடம் தரலாகாது.


உணர்ச்சி வேகத்தில் உந்தப்பெற்று போராட்ட காலத்தில் நாம் ஒற்றுமையாக இருந்து கடுமையாக உழைத்து வந்தோம். ஆனால் இன்று ஆசாபங்கம் போன்ற காரணங்களால் நமது சக்தி குன்றி வருகிறது. ஆக்க வேலைகளில் ஆர்வம் குறைந்து வருகிறது. உட்பகை, வெளிப்பகை தலைகாட்டுகின்றன. போராட்டகாலத்தில் இருந்த ஆவேசம் தணிந்து, சோர்வு மனப்பான்மை மேலோங்கி வருகிறது.

ஆக்க வேலைகளில் கவனம் செலுத்தி, பெற்ற சுதந்திரத்தைப் பேணிக்காப்போமாக. உட்பகை, வெளிப்பகை முதலியவைகளை வேரோடு களைந்து நாட்டுப் பணியில் தீவிரமாக ஈடுபடுவோமாக. அதுவே குமரனைப்போன்ற உத்தம உயிர்த் தியாகிகளுக்கு நாம் செய்யும் கைமாருகும். குமரனைப் போன்ற சகல சங்கப் பரித்தியாகம் செய்த மகா புருஷர்களின் ஆன்மஜோதி நமக்கு வழி காட்டுமாக! வாழ்க குமரன் நாமம்!

V 2114 5N7 N04
N 59
NADU ARCHIVES
No.
103870



திருப்பூரிலுள்ள குமரனின் ஞாபகார்த்த ஸ்தூபி.



பாரதப் பிரதமர் ஜவஹருக்கு குமரனின் தாயாரை அறிமுகப்படுத்துதல்.